திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA
4 - MAR 1963
MADRAS

திருக்கச்சி ஏகம்பநாதர்கோயிற் சிற்பம்

மாலை 5] சுபகிருது-மாசி — மார்ச் '63 [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



மதுரையில் நடைபெற்ற பாவை மாநாட்டில் அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் B.A., B.L. அவர்களும் திரு. A. சிதம்பர முதலியார் M.L.C. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்

உத்தம பாளையம் காளத்தி ஈசுவரர் கோயிலில் நடைபெற்ற பாவை மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய **தமிழவேள் திரு. பி. டி. ராஜன் அவர்கள்,** பூரண கும்பத்துடன் வரவேற்கப் பெறுதல்

பொருள் அடக்கம்

1. சிவராத்திரி
2. திருப்பாவைச் சிறப்புரைகள்
3. வராக அவதாரம்
4. திருநாவுக்கரசு நாயனர்
5. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
6. திருப்பாவை ஆராய்ச்சி
7. திருக்கோயில்
8. அணுத்தருந் தன்மை இலேயோன்
9. சிவஞானபோதம்
10. எண்குணத்தான்
11. இராசராசேச்சரக் கல்வெட்டு
12. மிகச்சிறந்த விளக்கம்
13. திருஞானசம்பந்தர் திருமுறை
14. தேசீயப் பாதுகாப்பு நிதி

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

சந்தாப்பணம் நிலுவையுள்ள சந்தாதாரர்கள், தம் நிலுவைச் சந்தாப் பணத்தையும், 1962-63 புதிய ஆண்டுக்கான சந்தாப் பணத்தையும், விரைவில் அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர் அலுவலகங்களில் செலுத்திவிடுமாறு, நினைவூட்டிக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றார்கள்.

—ஆசிரியர்

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 5] சுபகிருது மாசி - மார்ச் 1963 [மணி 6

சிவராத்திரி

—:✱:—

முன்னுரை :

இந்திய நாடு முழுவதிலும், அதன் சார்பு பெற்ற பிற சில நாட்டுப் பகுதிகளிலும், சிறப்பாகக் கொண்டாடப் பெறும் விழாக்கள் அல்லது விரதங்கள் பலவற்றுள் சிவராத்திரியும் ஒன்றாகும்.

‘விழா’ என்னும் சொல்லை **‘விழி’** என்னும் பகுதியினின்று தோன்றியதாகக் கொண்டு, **‘விழித்திருந்து கொண்டாடப் பெறுவது’** என அதற்குப் பொருள் கூறுவர் சிலர் (Tendentious Etymology). “முட்டு வயிற் கழறல்” என்னும் அகப்பொருளின் துறைக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெறும் நிலையில்,

> “இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்
> விழவுஇன் றாயினும் துஞ்சா தாகும்.”

எனவரும் அகநானூற்றுச் செய்யுள் (122) வரிகள், ஓராற்றால் இவ்வுண்மையை உணர்த்தி நிற்கும்.

இப்பொருளுக்கு முழுவதும் ஏற்ற வகையில், விழித்திருந்தே அநுட்டிக்கப் பெறுவது, சிவராத்திரி விரதம் ஆகும்.

> “..........சிவராத்திரிப்
> போது துயிலோம் என்ற விரதியரும்
> அறிதுயில் போலே இருந்து துயில்வார்”

எனவரும் தாயுமான சுவாமிகள் பாடலும், சிவராத்திரி விரதமானது இரவில் துயிலாமல் இருந்து கடைப்பிடிக்கப் பெறுதலைக் குறிப்பிடுதல் காணலாம்.

சிவராத்திரிச் சிறப்பு

சிவராத்திரி வழிபாட்டின் மேன்மை செப்புதற்கு அரிய பெருஞ்சிறப்பு உடையது. வேதங்களிற் சாமமும், யாகங்களில் அசுவமேதமும், மலைகளில் மகமேருவும், நதிகளிற் கங்கையும், பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் இந்திரனும் முதன்மை பெற்று விளங்குதல் போல, சிவபெருமானுக்குரிய விரதங்களில் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது சிவராத்திரி விரதம் ஆகும்.

> “மறைகளிற் சாமம்; மகங்களிற் புரவி
> மகம்; மலை களில்மக மேரு;
> நிறைபுனல் நதியிற் கங்கை; ஓர் ஐந்தாய்
> நிகழ்ந்தபூ தத்தின்ஆ காயம்;
> முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
> முதன்மைபெற் றுயர்ந்ததே போல,
> அறைதரு விரதம் அனைத்தினும் உரைக்கும்
> அரன்இரவு அதிகம்என்று அறிமின்”

ஜோதிர் லிங்கங்கள்

இந்திய நாட்டுப் பண்பாட்டின் ஒருமைப்பாட்டினை விளக்கி வலியுறுத்தும்



திருக்கேதீச்சுரநாதர், இலங்கை

வகையில், இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களால், சிவ ராத்திரி விழாவானது மிகவும் சிறப்பாகத் தொன்றுதொட்டு, எத்துணையோ பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது. சிவராத்திரி வழி பாட்டிற்குப் பெரிதும் சிறப்புடையன வாகப் பாராட்டப் பெறும் 'ஜோதிர் லிங்கங் கள்' பன்னிரண்டும் இந்தியாவின் பலவேறு பகுதிகளில் அமைந்து சிறப்புற விளங்கி வருகின்றன.

1. சௌராட்டிரத்துச் சோமநாதர்
2. ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனர்
3. உஜ்ஜயினி மகாகாளர்
4. ஓங்காரப் பரமேசுவரர்
5. கேதாரநாதத்துக் கேதாரேசுவரர்
6. கோதாவரி நதிக்கரையில் டாகினி என் னும் தலத்திலுள்ள பீமசங்கரர்
7. சித்தபூமியில் திகழும் வைத்தியநாதர்
8. தாருகவனத்து நாகேசர்
9. நாசிக் அருகில் கௌதமி யாற்றின் கரையில் விளங்கும் திரியம்பகேசுவரர்
10. இராமேசுவரம் இராமநாதர்
11. காசி விசுவநாதர்
12. சிவாலயத்துக் குசுமேசர்

என்னும் ஜோதிர் லிங்கங்கள் பன்னிரண் டும், சிவராத்திரி விரதத்தின்போது தரிச னம்செய்து வழிபடுதற்குப் பெரிதும் சிறப் புடையனவாக விளங்கி வருகின்றன. இத் தலங்களிற் சிவராத்திரியின்போது பெருந் திரளான பக்தர்கள் சென்று வழிபட்டு மகிழ்கின்றனர்.

சிவராத்திரி வரலாறுகள்:

1. சிவராத்திரி விரதத்தின் வரலாற் றினைப்பற்றி நூல்கள் பலவகைகளில் விளக்கிக் கூறுகின்றன. ஒருசமயம் சிவ பிரான் பேரொளிப் பிழம்பாகத் தோன்றி வெளிப்பட்டு அருளினான். அங்ஙனம் வெளிப்பட்டு அருளிய இரவே சிவராத்திரி எனப் பெறுவதாயிற்று. அச் சிவராத்திரி யில் இறைவனைப் பரவிப் பலரும் உய்ந் தனர் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

"அரியும் யானும்முன் தேடும்அவ்
அனற்கிரி, அனல
கிரிஎ னும்படி நின்றதால்!
அவ்வொளி கிளர்ந்த
இரவ தேசிவ ராத்திரி
ஆயினது! இறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்"

2. ஒருகால் உலகங்கள் எல்லாம் பிரளயத்தில் அழுந்தி, உயிர்கள் அனைத் தும் மடிந்து மறைந்தன. அக் கற்ப முடி வின் இரவில் நான்கு யாமத்தும் உமை யம்மையார், இறைவனை ஆகம விதிப்படி அருச்சனை புரிந்து வழிபட்டு மகிழ்ந்தனர். அன்றியும், அதுபோது அம்மையார், உயிர்களெல்லாம் உய்ந்து ஈடேறுதற் பொருட்டு ஐந்தொழில்களைத் தொடங்கி இயற்றியருளுமாறு இறைவனைப் பணிந்து வேண்டிக் கொண்டனர். அவ்விரவே சிவராத்திரி ஆயிற்று என்பர். மற்றும் சிலர்,

"நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன்உருத் தேசது என்னா"

எனச் சிவஞான சித்தியாரில் அருள்நந்தி சிவம் குறிப்பிடுதல் போல, தாம் இறைவ னின் திருக்கண்களை மூடி உலகுயிர்கள் இரு ளில் அழுந்தி வருந்துமாறு செய்த பிழை தீரும்படி, அம்பிகை சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் ஆகம விதிப்படி சிவபிரானைப் பூசித்து அருள் பெற்றனர் எனவும் கூறுவதுண்டு.

3. இனி, வேறொரு வகையாகவும் சிவராத்திரியின் வரலாறு இயம்பப்படும். திருப்பாற் கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, அதன் வெம்மைக்கு ஆற்ருது அஞ்சி நடுங்கிய தேவர்கள், அதனைச் சிவபிரான் உண்டு தமது மிடற்றில் அடக்கியருள, அப் பெருமானைத் தேவர்கள் பேரன்புடன் வழிபட்டு உய்ந்த இரவே சிவராத்திரியாகும் எனவும் பிறவாறும் பெரியோர்கள் கூறுவர்.

அநுட்டித்துப் பயன் அடைந்தோர்

இச்சிவராத்திரி விரதத்தினைச் சூரியன் சந்திரன் முருகன் இயமன் மன்மதன் இந்திரன் அக்கினி குபேரன் முதலியவர்கள் அநுட்டித்துத் தத்தம் மனத்தில் விரும்பிய நன்மைகளை அடைந்து மகிழ்ந்தனர் என நூல்கள் கூறுகின்றன.

"இந்தநல் விரதந் தனைச்சிவன் நந்திக்கு
இசைத்திட உணர்ந்து,செங் கதிரோன்
கந்தவேள், கதைக்கைக் காலன்,விற் காமன்
கடவுளர், கண்ஞெர்ஆ யிரத்தோன்,
செந்தழற் கடவுள், மதி,நிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலைவர் ஆயினரால்!"

முசுகுந்தன்:

பண்டொரு காலத்தில் வானை அளாவிய பூங்காவில், ஒரு வில்வ மரத்தின் அடியில் சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி யிருந்தனர். அப்பொழுது மரங்களில் வாழும் இயல்புடையதாகிய முசுக்கலை (குரங்கு) ஒன்று, அவ் வில்வ மரத்தின் இலைகளைப் பறித்து அம்மையப்பர் திருமேனியின்மீது போட்டுக் கொண்டிருந்தது. அந்நாள் சிவராத்திரியாக விளங்கியது. சிவபிரான் தனது பெருங்கருணைத் திறத்தால், அக் குரங்கைச் சினவாமல், அது தன்னைச் சிவராத்திரி நாளில் வில்வத் தளிர்களாற் பூசித்ததாகக் கொண்டு மகிழ்ந்து, அதற்குப் பேரருள் புரிந்தான். அதன் பயனாக, அம் முசுக்கலையானது முசுகுந்தன் என்னும் சோழவேந்தனுகப் பிறக்கும் பேறு பெற்றது. முசுகுந்தன் என்னும் சோழ மன்னனின் புகழ் சிலப்பதிகாரம் மணிமேகலை கந்தபுராணம் கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களிற் சிறப்புறக் குறிப்பிடப் பெற்றுளது. இம் முசுகுந்தனே, தேவேந்திரனிடம் இருந்து தான் பெற்றுக்கொண்டு வந்த தியாகராசர் திருவுருவங்கள் ஏழினையும்,

"சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயில்—பேராக
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

என்ற வெண்பாவாற் குறிக்கப்படும் ஏழு தலங்களிலும், எழுந்தருளச் செய்து மகிழ்ந்தனன் என்பர்.

சிவராத்திரி பற்றிய நூல்கள்:

இங்ஙனமே சுகுமாரன் அங்குலன் சவுமினி கன்மாடபாதன் முதலியவர்கள் சிவராத்திரி விரதம் அநுட்டித்துப் பேறு பெற்றமையினை, யாழ்ப்பாணம் காசி. அ. வரதராச பண்டிதர் என்னும் புலவர் பெருமகனுர் இயற்றிய சிவராத்திரிப் புராணம் விரிவாக விளக்கும். வரதுங்கராம பாண்டியர் இயற்றிய பிரமோத்தர காண்டம், வயலூர் ஞானவரோதயர் பாடிய உபதேசகாண்டம் முதலிய நூல்களும் சிவராத்திரியின் சிறப்பைக் கூறும்.

மாக சிவராத்திரி:

சிவராத்திரியானது மாகசிவராத்திரி யோக சிவராத்திரி நித்தியசிவராத்திரி பட்சசிவராத்திரி மாதசிவராத்திரி என ஐந்து வகைப்படும். அவற்றுள் மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மாக சிவராத்திரியாம் (மாகம்—மாசி மாதம்). இதுவே வருஷ சிவராத்திரி என்றும், மகாசிவராத்திரி என்றும் வழங்கப் படும். திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு சிவலிங்க சொரூபமாம். அத்தகைய சிவராத்திரியிற் சிவபூசை செய்தால்,

"............பன்னிரு கோடி
மூல மாம்இலிங் கங்களை
முறைமையிற் சென்று
சீல மோடுகண் டுறுபயன்
சிறப்புறச் செறியும்!"

அநுட்டிக்கும் முறை:

சிவராத்திரி விரதம் அநுட்டிக்க விரும்புபவர்கள், அதற்கு முன்னுள் ஒரு

வேளை யுண்டு, தூய்மையும் ஒழுக்கமும் பேணி அன்றிரவு துயின்று, மறுநாள் சிவராத்திரி தினத்தன்று வைகறைப் பொழுதில் துயில் எழுந்து, புண்ணிய தீர்த்தத்தில் நீராடுக. சூரியோதய வேளையிற் காலை அநுட்டானங்களை இயற்றித் திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை விதிப்படி பணிந்து வழிபடுக. அன்று பகல் முழுதும் சிவசிந்தனையோடும் சிவத்தியானத்தோடும் தூய்மையாக இருக்க! சிவபூசைக்குரிய பொருள்களையெல்லாம் கருத்துடன் தொகுத்து வைத்துக் கொள்க. அவற்றில் இயன்றனவற்றைச் சிவாலயத்திற்கும் கொடுத்து அங்கு அர்ச்சனை முதலியன நிகழ ஏற்பாடு செய்க. வீட்டிற் பூசையறையைக் கோமயத்தால் மெழுகித் தூய்மைசெய்து கோலமிட்டு அழகுபடுத்துக. மாலையிற் சிவாலயம் சென்று தரிசனம் செய்து மீள்க. மீண்டதற்பின் சிறிது நேரம் கழித்து நீராடி அநுட்டானங்களை முடித்துக்கொண்டு, சிவபூசை செய்யத் தொடங்குக. அதனை ஆகம விதிப்படி முறை தவறுமற் பக்தி சிரத்தையுடன், யாமத்திற்கு ஒருமுறையாக நான்கு யாமங்களிலும் செய்தல் நலம் பயக்கும்.

அபிடேகம் :

அங்ஙனம் சிவபூசை செய்யுங்கால் பால் தயிர் தேன் சர்க்கரை இளநீர் பன்னீர் எலுமிச்சம்பழம் சந்தனம் விபூதி முதலியவைகளைக் கொண்டு நான்கு யாமங்களிலும் வழிபாடு நிகழ்த்துக. பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் தேன் கருப்பஞ்சாறு என்பன கொண்டு முறையே அபிடேகம் செய்க.

அலங்காரம் :

நான்கு யாமங்களிலும் முறையே அகிற்குழம்பு வில்வத்தளிர், சந்தனம் தாமரைமலர், பச்சைக்கற்பூரம் முல்லை மலர், குங்குமப்பூ நந்தியாவர்த்தமலர் என்பனவற்றைக் கொண்டு இறைவனுக்கு அலங்காரம் செய்க.

அர்ச்சனை :

நான்கு யாமங்களிலும் முறையே தாமரைமலர், துளசி இலை, வில்வதளம், நீலோற்பல மலர் என்பன கொண்டு அருச்சனை புரிக.

நிவேதனம் :

நான்கு யாமங்களிலும் முறையே பயற்றம்பருப்புச் சேர்ந்த பொங்கல், பாயசம், எள்ளன்னம், சுத்தான்னம் என்பனவற்றை இறைவனுக்கு நிவேதனம் செய்க. நிவேதிக்குங்கால், ஒவ்வொரு யாமத்தும் தூபதீப ஆராதனைகளைச் சிறப்புற விதிப்படி இயற்றுக.

பாரணை :

இங்ஙனம் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்யுங்கால், தேவார திருவாசகத் திருமுறைத் தெய்வப் பாடல்களை மனமுருகிப் பாடுக. இங்ஙனம் இரவு முழுதும் துயிலை நீக்கிப் பூசைசெய்து, மறுநாள் வைகறையில் நீராடிக் காலை அநுட்டானங்களை முடித்துச் சூரியன் உதித்து ஆறுநாழிக்குள் பாரணை செய்க.

முடிவுரை :

இங்ஙனமெல்லாம் முறைப்படி செய்ய இயலாத முதுமையாளர் நோயாளர் முதலினோர், தியானம் ஜெபம் சிவ புராணபடனம் திருமுறைப் பாராயணம் சிவாலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபட்டு நின்று, இவ்விரதத்தினை அன்புடன் இயன்ற அளவு அநுட்டிக்கலாம். இவ்வாறு சிவராத்திரி விரதத்தினை முறைப்படி அநுட்டிப்பவர்,

"மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி"

என மணிவாசகர் அருளிச் செய்தபடி, தாமும் இறையருள் பெற்றுத் தமக்குரிய மூவேழு தலைமுறைச் சுற்றத்தினரையும் உய்வித்து, நலம் எய்தி இன்புறுவர்.

"மாசி மகத்திற் சிவநிசியின்
மழுமான் ஏந்தி மலர்ப்பாதம்
பூசை புரிவோர் தாம்வேட்ட
போகம் முழுதும் கைக்கொள்வார்"

—பேரூர்ப் புராணம்

திருப்பாவைச் சிறப்புரைகள்

ஸ்ரீ ஆண்டாள்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து

எல்லாரையும் தானே எழுப்பக் கடவதாகச் சொல்லி வைத்து, அது செய்யாதே உறங்குகின்றாள் ஒருத்தியை எழுப்புகின்றார்கள்.

எழுப்புபவர்: நாங்கள் உன் வாசலிலே வந்து நிற்க எழுந்திராது ஒழிவதே?

உறங்குபவள்: போது விடிவுக்கு அடையாளம் யாது?

எ: செங்கழுநீர்ப்பூ மலர்ந்து ஆம்பற் பூ மொட்டிக்கும் அங்கிலே, அடையாளம் அன்றோ?

உ: நீங்கள் வயலிலே சென்று கண்டீர்களோ?

எ: **உங்கள் புழைக் கடைத் தோட்டத்து:** அசூர்யம் பச்யமான உங்களுடைய புழைக் கடைத் தோட்டத்திலுள்ள கிணற்றிற் காணலாம். நாங்கள் வலிய அலர்த்தின அல்ல. வெயில் பட்டன்றிக்கே காலபாகத்தாலே அங்ஙனம் ஆயின. உள்ளே புகுரப் பெறுவிட்டாலும் அநுமித்துச் சொல்லுகின்றார்கள்.

இவள் எழுந்திராத இன்னாப்பாலே "உங்கள் புழைக்கடை" என்று வேறுபடுத்திச் சொல்லுகின்றார்கள்.

'நீர் நுமது' என்றும், 'யானே என்றனதே' என்றும் அகங்கார மமகாரம் த்யாஜ்யமாக உணர்ந்தவர்கள் 'உங்கள் எங்கள்' என்கை விருத்தம் அன்றோ? என்னில்; தேகாத்ம அபிமானத்தால் வரும் அஹங்காரம் தியாஜ்யமாவது, பகவத் ஸம்பந்தத்தால் வருமது உத்தேச்யம். "அபிமாந துங்கன்" என்றும் "என்னுடைய பந்தும் கழலும்" என்றும் சொல்லிற்றிறே.

உ: அலரப் புக்க அளவிலே கழிய அலர்ந்தன என்று சொல்லுகின்றீர்கள். வேறு அடையாளம் உண்டோ?

செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்: அளற்றுப் பொடியிலே புடைவையைப் புரட்டிப் பிரம்மசரியமும் விரக்தியும் தோற்றப் பல்லை விளக்கித் தண்ட பரிஹாரார்த்தமாகத் தபோ வேஷத்தையுடையரான சிவத்விஜரும்கூடப் பயப்பட்டு எழுந்து தாங்கள் தேவதைகளை ஆராதிக்கும் காலமாயிற்று. தம: பரசுரரும் கூட உணரும் காலமாய்த்து, இது விடிவுக்கு உடல் அன்றோ? என்கிறார்கள்.

"தாமஸ ப்ரகிருதிகளைச் சொல்லுகிறது" என்று எம்பார் நிர்வாஹம்.

"தம: ப்ரசுரர் உணர்ந்தார்கள் என்று சொல்லியோ எழுப்புவது? என்று அவள்

நினைத்திருக்கும் என்று, தத்வ நிஷ்டரான சந்நியாசிகளைச் சொல்லுகிறது'' என்று **திருமலைநம்பிகள்** நிர்வஹிப்பர்.

ஏ: பகவத் விஷயத்தில் ஸக்தராய் இதர விஷயங்களில் விரக்தராய், காஷாய வஸ்திரங்களைத் தரித்துப் போக்ய திரவியங்களில் விரக்தராய் ஸாத்விகராய் இருக்கும் சந்நியாசிகள் சந்தியாவந்தனங்களைப் பண்ணி அகங்களிலே திருவாராதனம் பண்ணும் காலமாயிற்று.

உ: அநவரதம் பக்தியோடே உபாசிப்பவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் விடிவோறே ஒருகால் ஸமாராதநம் பண்ணி அல்லாதபோது பேசாதே இருப்பார்களோ? இது விடிவுக்கு அடையாளமும், பிரமாணமும் அன்றே!

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்: ''திருக்கோயில்'' என்றது அவர்கள் சொல்லும் பாசுரத்தாலே. ''சங்கு'' என்று ஆராதந உபகரணங்களுக்கு உபலக்ஷணம். 'குச்சியிட' என்றுமாம். இத்தால் அசுத்தரும் கூட எழுந்திருக்கும் காலம் ஆயிற்று என்கை.

எங்களை முன்னம் எழுப்புவான்: ''மேலையார் செய்வனகள்'' என்னுமது பிரமாணமாக நீ சொன்னாயே. தர்மஜ்ஞையான உன்னுடைய ஸமயமும் பிரமாணம் அன்றிறே. எல்லாரையும் நானே எழுப்புகிறேன் என்று சொன்னது உன்பக்கல் கண்டிலோமே!

வாய் பேசும்: இருதயத்தில் இல்லாது வாயாலே பேசலாமோ தான்? உக்தி மாத்திரமேயாய் அநுஷ்டாநம் இன்றிக்கேயிருக்கை. நினைவும் சொல்லும் விபரீதமாய் இருக்கும். கிருஷ்ணனோடே பழகிச் சேர்த்தியாய் இருக்கிற உனக்குப் பொய் சொல்லுகை வம்போ?

நங்காய்: பூர்ணையிறே! சொல்லும் செயலும் சேராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ? இரண்டும் சேர்ந்த இடத்திலே யன்றோ பூர்த்தியுள்ளது. அது இல்லாத இடத்திலே ஆதித்யர்கள் பக்கல் ஔபசாரிகமாகச் சொல்லும் பகவத் சப்தம் போலே யன்றோ? 'ஒருகாலும் பிரிகிலேன்' என்றதுக்குப் பொருள் இதுவோ?

எழுந்திராய்: எங்கள் குறை தீர்க்க நீ எழுந்திருப்பாயாக.

நாணாதாய்: சொல்லி வைத்துச் சொன்னபடி செய்யப் பெற்றிலோம் என்னும் லஜ்ஜையும் இன்றிக்கே யிருந்ததி! நீ இருந்த ஊரில் பூசனியும் காயாதோ? என்கை.

நாவுடையாய்: நாட்டார் அளவோ உனக்கு நாக்கு. நீ இவ்வளவெல்லாம் படுத்தினாலும் உன் பேச்சில் இனிமை கேட்கும்படி நாவீறு உடையவள் அன்றோ?

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்: திருவாழியையும் ஸ்ரீ பாஞ்சசந்யத்தையும் ஏந்தி அந்த ஸ்பர்சத்தாலே வந்த வளர்த்தியையுடைய திருக்கைகளையுடையனாய், சந்திராதித்யர்கள் சேர உதித்தாற்போலே இருக்கிற இரண்டு திவ்யாயுதங்கள்.

பங்கயக் கண்ணனை; ஆழ்வார்களிலே வந்து அலை எறிகிற கண்களையும் உடையவனான கிருஷ்ணனை.

''இள ஆய்ச்சியர் கண்ணினுள் விடவே செய்து விழிக்கும் பிரான்'' என்று இவர்களைத் தோற்பித்துக் கொள்ளும் கண் இறே. ''ஆழியொடும் பொன்னார் சார்ங்கம் உடைய அடிகளை இன்னார் என்றறியேன்'' என்று, அநுபவிப்பாரைப் பிச்சேற்றக் கடவ திருவாழியையும், திருமேனிக்குப் ப்ராபகமான ஸ்ரீபாஞ்சசந்யத்தையும், முற்படத் தன்னை எழுதிக் கொடுத்துப் பின்னை எழுதிக் கொள்ளுகிற திருக்கண்களையும் உடையவனை; உபய விபூதியையும் தோற்பிக்கும் கண்ணழகுடையவன்.

பாட: உன் ப்ரீதிக்குப் போக்குவிட்டு எங்களையும் உஜ்ஜீவிப்பிக்க.

கிருஷ்ணன் கையில் இப்போது ஆழ்வார்கள் உண்டோ? என்னில்; எப்போதும் உண்டு. அது பெண்களுக்குத் தோற்றும். ஆண்களுக்குத் தோற்றாது. ''உபசம்ஹர'' என்றதும் உகவாதார்க்குக் கூசியிறே. ''நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய'' என்று யசோதைப் பிராட்டி தாலாட்டுகையாலே இவர்களுக்குத் தோற்றத் தட்டில்லையே.

15. எல்லே இளங்கிளியே!

எல்லாருடைய திரட்சியும் காண வேண்டியிருப்பாள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்.

அயலகத்துப் பெண்பிள்ளையை எழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவள் அந்தப் பாசுரத்தைத் தன் மிடற்றிலே இட்டுப்பாட, எழுப்புகிறவர்கள் அந்தத் தொனி வழியே கேட்டுச் சென்று இவள் பேச்சின் இனிமையாலே **"எல்லே! இளங் கிளியே"** என்கிறார்கள்.

இளங்கிளியே: கிளியை வ்யாவர்த்திக்கிறது. கிளி இவள் பேச்சுக்கு ஒப்பாம் இத்தனை, பருவத்துக்கு ஒப்பு அன்று என்கை.

எல்லே: என்னே! "எல்லே" என்று பேச்சின் இனிமையாலே ஆச்சர்யப் படுகிறார்கள்.

இவர்கள் அழைப்பது தன் அநுஸந்தாநத்துக்கு விக்நம் ஆகையாற் பேசாதே கிடக்கையாலே **"இன்னம் உறங்குதியோ?"** என்கிறார்கள். க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தமான காலம் ஸித்தித்திருக்க உறங்கக் கடவையோ? என்றுமாம். உத்தேச்யம் கைபுகுந்தாலும் உறங்கக் கடவையோ என்றுமாம்.

சில்லென்று அழையேன்மின்: தன் அநுஸந்தானத்துக்கு இவர்கள் அழைப்பது விக்நம் ஆகையாலே, சிலுகிடாதே கொள்ளுங்கோள் என்கிறாள்.

திருவாய்மொழி பாடாநின்றால் செல்வர் எழுந்தருளுகையும் அஸஹ்யம் ஆமாறு போலே, இவர்கள் வார்த்தையும் இவளுக்கு அஸஹ்யம் ஆயிற்று.

நங்கைமீர் போதருகின்றேன்: நீங்கள் வாய்திறவாது இருக்க வல்லீர்களேயாகில், நான் புறப்படுகின்றேன்.

வல்லை உன் கட்டுரைகள்: "நங்கைமீர்" என்று உறவற்ற சொல்லாலே வெட்டிமையெல்லாம் சொல்ல வல்லை என்னுமிடம் நாங்கள் இன்றாக அறிகிறோமோ? சொல்லிற்றைச் சொல்லி, எங்கள் தலையிலே குற்றமாம்படி வார்த்தை சொல்ல வல்லை என்னுமிடம் பண்டே அறியோமோ?

எங்கள் தலையிலே குற்றம் சொல்லலாவதெல்லாம் சொல்லி, உன் தலையில் குற்றமில்லை என்னும்படி உபபாதிக்க வல்லையிறே.

பண்டே உன்வாய் அறிதும்: "நங்கைமீர்" என்று உறவற்ற சொல்லாலே வெட்டிமை சொல்ல வல்லை என்னும் இடம் நாங்கள் இன்றாக அறிகிறோமோ, பண்டே அறியோமோ. குணதோஷங்கள் என்று ஒன்றுண்டோ? நீ சொல்லிற்று வார்த்தை யாம் இத்தனை யன்றோ?

உ: 'இன்னும் உறங்குதியோ?' 'வல்லை உன் கட்டுரைகள்' 'பண்டே உன் வாய் அறிதும்' என்றெல்லாம் கூறியது, உங்கள் வெட்டிமை யன்றோ?

எ: உன் வாசலிலே வந்து எழுப்பச் "சில்லென்று அழையேன்மின்" என்றது, உனது வெட்டிமை யன்றோ?

உ: அதுவும் என் குற்றம் அன்று, உங்கள் குற்றமே! நம்முடைய வார்த்தை கேட்க உகக்கும் இவள், நம் வார்த்தை அஸஹ்யம் ஆம்படியிறே க்ருஷ்ண குணங்களிலே அவகாஹித்தது என்று உகக்க வேண்டியிருக்க, அதிலே தோஷத்தை ஏறிட்ட உங்களது அன்றோ குற்றம்?

இல்லாத குற்றத்தையும் சிலர் "உண்டு" என்றால் "இல்லை" என்னாதே இசைகையிறே வைஷ்ணவத்வ லக்ஷணம். பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாப பலம் என்றான் இறே ஸ்ரீபரதாழ்வான். ஸ்வகுணாபதாநத்துக்காகக் கௌரவ்யரை அதிநிர்ப்பந்தம் பண்ணலாகாதென்றும் வேதார்த்தம் பிரகாசிக்கிறது.

உ: இப்படி தோஷ துஷ்டையான நான் உங்களுக்குச் செய்ய வேண்டுவது என்ன?

ஒல்லை நீ போதாய்: உன் குற்றத்துக்கு இசைந்த பின்பு சடக்கெனப் புறப்பட்டு இத்திரளிலே புகுந்து பொறுப்பித்துக் கொள்ளாயோ?

எங்களுக்கு ஒரு க்ஷணமும் உன்னை ஒழியச் செல்லாமையினாலே எங்கள் திரளிலே சடக்கெனப்புகுந்துகொடு நில்லாய். "ஒல்லைக் கூடுமினோ" என்றார் இறே.

"சாது கோட்டியுட் கொள்ளப்படுவார்" என்று ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியிலே புகுருகை ஏற்றம் என்று அருளிச்செய்தார் இறே.

உன்னை அரைக்ஷணம் காணாதொழியில் எங்களுக்குப் பிராணஹாநி; புறப்படாதொழியில் உனக்கு அநர்த்தமாய்த் தலைக்கட்டும்.

துடித்துக்கொண்டு புறப்பட்டுநின்று தாங்கள் பட்டது படாமையாலே சிவிட்கென்று **"உனக்கு என்ன வேறுடையை"** என்கிறார்கள்.

இவள் ஒரு ஸத்து விளம்பித்துப் புறப்படுங் காட்டில், அஞ்சுலக்ஷம் குடியிற் பெண்களுக்கு உள்ளதொழியத் தனியே ஸ்வயம்பாகம் பண்ணுவாரைப் போலே உனக்கு வேறே சில உண்டோ? உன் ஸ்வயம்பாகம் தவிர்ந்திலேயோ, பெரும் பானை கண்ட பின்பும்? என்கிறார்கள்.

வைஷ்ணவ விஷயத்தைப் பஹிஷ்கரித்துப் பற்றும் பகவத் விஷயத்தோடு தேவதாந்தரத்தோடு வாசியில்லை.

இளையபெருமாள், ஸ்ரீ பரதாழ்வானுடைய வதத்திலே உத்யோகித்து, வில்லிலே நாண் ஏறிடுவது, அம்பைத் திரிப்பதாகிற படியைக் கண்டு, பெருமாளுக்கு அஸஹ்யமாய், "அவனுக்கு ராஜ்யத்தில் ச்ரத்தையில்லை, உனக்கு அபேக்ஷையுண்டாகில் வாங்கித் தருகிறோம்" என்று அருளிச் செய்தபோது இளையபெருமாள் தரைப்பட்டாற்போலே, இவளும் "உனக்கென்ன வேறுடையை" என்றது பொறுத்திலள்.

எல்லாரும் போந்தாரோ: எங்களை ஒழிய எனக்கு ஒரு சுகம் உண்டோ? நம்மிலே சிலர் உறங்கிக் கிடக்கப் போக ஒண்ணாது என்னும் இன்னாப்பாலே சொன்னேன். இத்தனையன்றோ? உணர அறியாத சிறு பெண்களும் உணர்ந்தால் புறப்படுவதாக இருந்தேன். எல்லாரும் உணர்ந்து புறப்பட்டார்களோ ?

போந்தார்: க்ருஷ்ண விரகத்தாலே துவண்ட பெண்கள் அடைய உன்னைக் காண்கைக்கு உன் வாசலிலே வந்து கிடந்தார்கள்.

போந்து எண்ணிக்கொள்: புறப்பட்டு மெய்க்காட்டுக் கொள். மெய்க்காட்டுக் கொள்ளுகைக்குப் பிரயோஜனமாக இவர்கள் நினைப்பது தனித்தனியே பார்க்கையும், பேர் சொல்லுகையும், தொட்டு எண்ணுகையும், ஸ்பர்ச சுகம் அநுபவிக்கையும், பெண்களுக்கு ஸங்க்யை இல்லாமையாலே எண்ணி முடிக்குந் தனையும் இவனைப் பிரியாதே அநுபவிக்கையும் ஆகும்.

(தொடரும்)



திரிசூலநாதர் கோயில், பல்லாவரம், சென்னை.

வராக அவதாரம்

திரு. K. R. இராஜகோபாலன், B. Sc. (Hons.,), தாம்பரம்.



வராக அவதாரம், மாமல்லபுரச் சிற்பம்

திருமாலின் திரு அவதாரங்களில் முதன்மையானதாகக் கருதப்பட்டு வந்தது வராஹாவதாரமாகும்; பிற்காலத்திலேதான் மீன் (மத்ஸ்யம்) முதலாவதாகக் கணக்கிடப்பட்டு வந்திருக்கவேண்டுமென்பதனைத் 'தசாவதாரக்' கட்டுரை (நவம்பர் இதழ்)யில் கூறினோம். எனவே முதன்மையானதும், மிகத் தொன்மையானதுமான இந்த அவதாரத்தின் சிறப்பை இக்கட்டுரையிற் சிறிது விளக்குவாம்.

தற்காலத்தில் வழங்கிவரும் வராஹாவதாரக் கதை ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டி ஒளித்து வைக்க, திருமால் ஏன உருவமெடுத்து, அவனுடன் கடும் போர் தொடுத்து, முடிவில் அவனைக் கொன்று, பூமியைக் காத்தருளினார் என்பது நம்மில் பலர் அறிந்ததாகும்.

ஹிரண்யாக்ஷனும், ஹிரண்யகசிபுவும் இரட்டை யசுரர்கள். இவர்கள் முன்பு வைகுண்டத்தின் வாயிற் காப்பாளர்களாக இருந்தவர்கள். முதல் பிறப்பினும் இரண்யாக்ஷன் தம்பியாகவும், இரண்யகசிபு அண்ணனாகவும் இருந்ததாகக் கருதப்படுகிறார்கள். இவர்களுள் தம்பியைக் கொல்லத் திருமால் வராஹ ரூபமெடுத்தார் என்பதும், அண்ணனும் 'பொன்மேனி யோனை' அழிக்க அண்ணல் ஆளரி (நரசிங்கம்) அவதாரம் பூண்டார் என்பதும் வரலாறாகும்.

இக் கதையின் விரிவான வர்ணனையும், வராஹத்தைக் குறித்துப் பிரம்மன் முதலான தேவர்கள் துதித்த சுலோகங்களையும், பாகவதம் 3-ம் ஸ்கந்தம் 13-ம் அத்தியாயத்தில் காணலாம். இந்தக் கதை

முன்பே தோன்றியதாக இருக்க வேண்டும் என்று கூறலாம்.

தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்திலிருந்தே வராஹாவதாரத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. **பரிபாடலில்** கடலில் மூழ்கித் தவித்துக் கொண்டிருந்த பூமிப் பிராட்டியாரை, அக் கடலிலே குளித்து மூழ்கி மேலே கொணர்ந்து அவளை மணம் புரிந்து கொண்ட கதை உள்ளது. அதே போல் முதலாழ்வார்களான பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார்களும், இந்த அவதாரத்தைப் பற்றிப் பாடியுள்ளனர்.—

வராஹ புராணம் என்று ஒரு நூல் உள்ளது. அது மிகத் தொன்மையானதென்று என ஆராய்ச்சியாளர் கூறுவர். இதற்குச் சான்றாகப் பல மேற்கோள்களும் காட்டியுள்ளனர். (Hazra-Studies in Puranic records). இந் நூலில் திருமாலின் பத்து அவதாரங்களைப் பற்றிய குறிப்பு உள்ளதாலும், இது பின்பு தோன்றியது எனத் துணியலாம். ஆனால் இதற்கும் முன்பு மற்றொரு வராஹ புராணம் இருந்திருக்கலாம் என்றும் நினைக்கச் சான்றுகள் உள்ளன.

சம்ஸ்கிருத இலக்கியத்திலும் வராஹத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. **ருக் வேதத்திலும்** (i, 61, 7; viii, 77, 10) **காடக ஸம்ஹிதைகளிலும்** வராஹம் குறிப்பிடப் பட்டுள்ளது. ருத்திரனை ஆகாயத்தின் வராஹம் என **தைத்திரீய ஸம்ஹிதை** கூறுகிறது. **விஷ்ணு புராணத்தில்** யக்ஞ வராஹத்தின் விரிவான வர்ணனை இடம் பெற்றுள்ளது. நான்கு வேதங்கள் இந்த யக்ஞ சாலையின் கால்கள்; வராஹத்தின் கோரைப் பற்கள் யூபஸ்தம்பங்கள்; அக்னியே அவர் நாக்கு; உடல் ரோமங்களே தருப்பைப் புற்கள்; அவர் தம் குரல்தான் ஸாம வேதம்—ஆதலால் யக்ஞ ரூபியாய், யக்ஞத்தினாலேயே ஆராதிக்கப்படும் பரம புருஷனும் அவரே!

மேற் கூறியவற்றால் இந்த அவதாரத்தின் பழமை புலனாகிறது. இவ் அவதாரம் பற்றிய கருத்து எவ்வாறு உருவாகியிருக்க வேண்டும் என்பது எண்ணிப் பார்க்க வேண்டியதாகும். நாம் இன்றும் சில நிலப் பகுதிகளைக் கடல் கொண்டு போதலை (கடலில் மூழ்கி விடுவதை)க் காண்கிறோம்; கேள்விப்படுகிறோம். அது போலவே வேறிடங்களில் சில நிலப்பரப்புகள் நீரிலிருந்து மேலேயும் தோன்றக் கூடும். சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் பூகம்பம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளினால், சில பரந்த நிலப் பகுதிகள் நீரிலிருந்து மேலே எழுந்து தோன்றியிருக்கக் கூடும். ஆக முற்காலத்தில் நீர்ப் பரப்பாக இருந்த கடல், பூகம்பத்திற்குப் பிறகு நடுவில் பரந்த நிலமுடைய அற்புதக் காட்சியாகத் தோன்றியிருக்கலாம். இந்த அற்புதமே வராஹாவதாரத்தினைப் பற்றிய கருத்தை உருவாக்கியிருத்தல் வேண்டும் எனத் துணிவோம்! அத்தகைய பரந்த நிலத்தை மேலே தூக்கி நிறுத்தவல்ல உருவமும் மிகப் பெரியதாகத் தானே இருக்க வேண்டும்? எனவே இந்த அவதாரத்தை **வேதாந்த தேசிகர் "மஹா போத்ரின்"** (பெரும் உடல் உள்ளவனே) எனச் சிறப்பித்துப் பாடுகிறார். **கீரந்தையார்** என்னும் சங்க காலப் புலவரும், இப்பூமி அந்த ஏனத்தின் வெண்மையான கோரைப் பற்களிலுள்ள பல கறுப்புப் புள்ளிகளில் ஒன்றைப் போலவே காட்சியளித்தது எனப் பாடுகிறார்!

மிகப் பெரிய உருவம் கொண்ட பிராணிகள் (Dinosaurs) வெகு நாட்களுக்கு முன்பே (10,000 ஆண்டுகட்கு முன்பே) வாழ்ந்து வந்தன என்பதும், பிறகு நாளடைவில் அவைகள் அழிந்து போயின என்பதும், நம்மில் பலர் அறிந்ததே. அத்தகைய பிராணிகளின் இயற்கையினாலேயே பாதுகாக்கப்பட்ட எலும்புக் கூடுகள் (Fossils) சிலவற்றை அண்மையில் ஆராய்ச்சியாளர்கள் சில இடங்களிற் கண்டெடுத்துள்ளனர்.

நாம் நம் நித்தியக் கடன்களைச் செய்யுங் காலங்களில் கூறும் "**சங்கற்பம்**"—அதாவது ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இந்த காரியத்தைச் செய்கிறேன் என்று மனத்தால் நினைத்து, வாயினால் சொல்லிச் செய்வது!-நம் கால அளவுகளை உணர்த்துகிறது. "த்விதீய பரார்த்தே, **சுவேத வராஹ கல்பே**, வைவஸ்வத மன்வந்தரே, கலியுகே, பிரதம பாதே..........". இப்பொழுது நடைபெறுவது கலியுகத்தின் முதல் பாதமாகும் [நான்கில் ஒரு பங்கு]. இந்தக் கலி

யுகம், சதுர்யுகம் அல்லது நான்கு யுகங்க ளுள்ள ஒரு மகா யுகத்தின் பகுதி; அந்த மகாயுகம் மன்வந்தரத்தின் ஒரு பங்கு; அது கல்பத்தின் ஒரு பங்கு! இக் கால அளவுகளின் விவரம் கீழ் வருமாறு;—

மனுஷ்ய ஆண்டு 1 கொண்டது
=1 தேவருடைய நாள்

தேவ நாட்கள் 360 கொண்டது
=1 தேவ ஆண்டு

தேவ ஆண்டுகள் 1200 கொண்டது
=1 கலியுகம்=402000 ஆண்டுகள்

1 மகாயுகம் =10 கலியுகம்

1000 மகாயுகம் =1 பிரம்மாவின் பகல்.

இப் பகலின் முடிவில் ஒரு நைமித்திக பிரளயம் உண்டாகும். அப்பொழுது எங்கும் ஒரே ஜலமயமாக இருக்கும்; அதே அளவு இரவு முடிந்த பிறகு சிருஷ்டி மறு படியும் தொடங்கும்; இதுபோன்ற ஒரு நாளையே "கல்பம்" என்கிறோம். ஒரு கல் பத்தில் 14 மனுக்கள் வாழ்ந்து போவார் கள். ஒரு மனுவின் காலம் ஒரு மன் வந்தரம் எனப்படும்.—அதாவது சுமார் 300000000 ஆண்டுகள். இதே கணக்கில் பிரம்மாவின் 100 ஆண்டுகள்; அதில் பாதியே ஒரு "**பரார்த்தம்**". தற்பொழுது முதல் பரார்த்தம் முடிந்து இரண்டாம் பரார்த்தம் நடைபெறுகிறது. இந்தப் பரார்த்தத்தில் நாம் வாழ்வது "**சுவேத வராஹ கல்பம்** ஆகும்". இதில் 6 மனுக்கள் சென்று போய்விட்டனர். ஏழாவது மனு வான **வைவஸ்வதன்** ஆட்சி செலுத்தும் இந்தக் காலத்தில் கிருதம், திரேதா, துவா பரை என்ற மூன்று யுகங்கட்குப் பிறகு கலியுகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம்! இந்தக் கல்பம் உண்டாகும் பொழுதுதான் பகவான் வராஹ ரூப மெடுத்துப் பிரளய ஜலத்தினுட் சென்று, பூமிப் பிராட்டியை மேலே கொணர்ந்து, அக் கடலின் மேல் நிலைநிறுத்தினர்; இவ்வாறு தன்னைக் காத் தருளிய பிரானைத் தொழுகிருள் பூமிப் பிராட்டி. அவரும் அவள் தொழுகைக்கு இரங்கி உவந்து அவளை மணந்து அவ ளுக்கு வராஹ புராணத்தை உபதேசிக்கி ருர். இவ் விவரங்கள், புராணங்களில் தொன்மையானவைகளில் ஒன்ருன ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் கிடைக்கின்றன.

இந்த வரலாற்றை யொட்டியே முதலாழ் வார்கள் பாடல்களும் அமைந்துள்ளமை நாம் கவனிக்க வேண்டியதாகும்.

"பொருகோட்டு ஓர் ஏனமாய்ப் புக்கு
இடந்தாய் அன்று உன்
ஒரு கோட்டின் மேல் கிடந்தது
அன்றே........."

[முதல் திருவந்தாதி—9]

"......கேழலாய்ப் பூமி இடந்தானை"

[முதல் திருவந்தாதி—25]

"......வராகத்து அணி உருவன்
பாதம் பணியும்"

[2-ம் திருவந்தாதி—31]

"கேழலாய் மீளாது மண் அகலம் கீண்டு அங்கு
ஓர் மாது உகந்த மார்வற்கு—"

[3-ம் திருவந்தாதி—54]

மற்ற ஆழ்வார்களுள் பலரும், ஆண்டாள் பிராட்டியாரும் இந்த விபவத்தைப் பாடி யுள்ளார்கள்.

"......பொழில் ஏழும் ஏனம் ஒன்ருய் நுனி ஆர்
கோட்டில் வைத்தாய்".

[திருவாய் மொழி—2, 3, 5]



வராக அவதாரம், மாமல்லபுரச் சிற்பம்

திருமால் பூமிதேவியின் பொருட்டுச் செய்கின்ற அன்புமிக்க பல காரியங்களை விளக்கிக் கூறும் கீழ்க்கண்ட பாசுரம் மிக்க அழகு வாய்ந்ததாகும்;

"கிடந்து, இருந்து, நின்று அளந்து, கேழல் ஆய், [கீழ்ப்புக்கு
இடந்திடும்; தன்னுள் கரக்கும்; உமிழும்;
தடம் பெருந்தோள் ஆரத்தழுவும்; பார் என்னும்
மடந்தையை மால் செய்கின்ற மால் ஆர் [காண்பரே?

[திருவாய் மொழி—2, 8, 7]

திருப்பாற் கடலில் அவளுடன் கிடந்து, இராமனாய்ப் பர்ணசாலையில் இருந்து, திரு விக்கிரம அவதாரத்தில் நெடிதுயர்ந்து பூமியை அளந்து, கேழல் ஆகப் பிரளய ஜலத்திற்குள் புகுந்து மேலே கொண்டு வந்து, பிரளய காலத்திலே தன்னுள்ளே வைத்து, மறுபடியும் உமிழ்ந்து, அந்தப் பிராட்டியைத் தம் தோள்கள் ஆரத் தழுவுகிறார்!

வராஹ அவதாரத்தின் சிறப்பையும், வராக கல்பத்தின் குறிப்பையும் கொண்ட பரிபாடலின் பாட்டுப் பகுதி கீழ்வருமாறு:—

செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவனை உணர்த்தலின் முதுமைக்கு
ஊழி யாவரு முணரா
வாழி முதல்வநிற் பேணுதும் தொழுது

[2. 15: 19.]

நாலாயிரம் பாட்டுகளில் அதிகமான பாட்டுகள் பாடியவர் (1351) திருமங்கை யாழ்வார்தாம். அவர் நாட்டின் பற்பல க்ஷேத்திரங்களைச் சேவித்து, அங்குள்ள மூர்த்தங்களின் விசேஷத்தன்மைகளையும், அழகு வடிவங்களையும் பாடி மகிழ்ந்துள்ளார். அன்னவர் தம் பெரிய திருமொழியில்,

"வை அணைந்த நுதிக்கோட்டு வராகம் ஒன்று
ஆய் மற்ற எல்லாம் இடந்து எடுத்த"....
பிரானைக் காணக் காழிச் சீராம
விண்ணகரம் சேர்மினே!"

[பெரிய திருமொழி—3, 4, 3]

என்று அருளிச் செய்கிறார்.

திருமழிசை ஆழ்வார் ஹிரண்யாக்ஷனைக் கொன்ற அதே கோரைப் பல்லால் பரிவுடன் நிலமகளை மீட்டு நிலை நிறுத்திய வராஹத்தின் மூச்சுக் காற்று, பூமியை இயங்கச் செய்கிறது எனப் பாடுகிறார்.

கோயில்கள் சிற்பங்கள் முதலியன :

சிதம்பரம் தாலுக்காவில் வெள்ளாற்றங்கரையில் வராக சுவாமி கோயிலுள்ளது. இத்தலத்திற்கு **ஸ்ரீமுஷ்ணம்** என்று பெயர். (**ஸ்ரீவிஷ்ணுவனம்** என்ற பெயர் இப்படி உருமாறியிருக்கலாம்). இந்தியாவிலுள்ள வைஷ்ணவத்தின் முக்கிய க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று எனப் போற்றப்படுகிறது. நிலமகளை ஊழி ஜலத்தினின்று மீட்ட பிறகு இங்கு சற்று இளைப்பாறினார் ; அதுகாலை அவர் உடலினின்று தெறித்த நீர்த்துளிகளே இங்கு நித்திய புஷ்கரிணியை உண்டாக்கியது என்று தல புராணத்திலிருந்து அறிகிறோம்.

தற்சமயம் உள்ள மூல விக்கிரகம் கருங்கல்லால் ஆனது; இதற்கு முன்பு வெண்மையானதாக இருந்ததாகவும், அது ஸ்வயம் வ்யக்தமானதென்றும் (தானே உண்டாகியது), அதனை மைசூர் அரசர்கள் தம் நாட்டிற்கு எடுத்துச்சென்றுவிட்டார்கள் என்றும் வரலாறு வாயிலாக அறிகிறோம். பலமுறை சேதப்படுத்தப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட தலம் இது; கடைசியாக 1581-ல் தஞ்சை நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டிருக்கலாம். இங்கு மிக அழகு வாய்ந்த சிற்பங்கள் பல உள்ளன. 16 கால் மண்டபம் கண்டு களிப்புற வேண்டியது.

புகழ் வாய்ந்த **காஞ்சி** க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டுள்ள காமாட்சி அம்மன் ஆலயத்தில் **திருக்கள்வனூர்** என்று மங்கள சாஸனம் செய்யப் பெற்ற வராகர் சந்நிதி உள்ளது; பெருமாள் திருநாமம் **ஆதிவராக சுவாமி,** தாயார் அஞ்சலை நாச்சியார். மற்றும் காஞ்சி அருளாளப் பெருமாள் கோயிலிலும், மதுரைக் கள்ளழகர் கோயிலிலும், வராகர் சந்நிதிகள் உள்ளன.

கடல்மல்லை என்று ஆழ்வார்களால் பாடப்பெற்ற மாமல்லபுரத்தில் ஆதி வராஹ மூர்த்தி கோயில் உள்ளது. வலது

துடையின்மேல் நிலமகளை அமர்த்திக் கொண்டிருப்பதால் இதற்கு **"வலவெந்தை"** என்ற பெயரும் வழக்கத்தில் உள்ளது. மற்றுமொரு குகையில் வராகம் பூமியைத் தூக்கியுள்ள நிலையில் ஓர் அற்புதச் சிற்பத்தைக் காணலாம். ஏனத்தின் தலையானது நன்கு சித்தரிக்கப்பெற்று மானிட உடலுடன் வியக்கத்தக்க முறையில் இரண்டறக் கலந்து காட்சியளிக்கிறது. வலது காலைச் சேஷன் தலையிலிருத்திச் சூரியன், பிரம்மா, ரிஷிகள் முதலானவர்கள் தொழ, ஆழியும் சங்கும், இரண்டு கைகளில் துலங்க, தூக்கிய துடையின் மேல் அமர்ந்துள்ள நிலமகளைப் பரிவுடன் அணைத்தவாறு அமைந்த இச்சிற்பம் மிக்க அழகு வாய்ந்ததாகும்.

அன்பர்களால் மிக்க பக்தியுடன் வணங்கப்பெற்று, இக்கலியுகத்திற்கென்றே ஏற்பட்ட கடவுள் என்று வழிபட்டுவரும் **திருமலை** ஸ்ரீனிவாஸக் கடவுள் இருப்பிடமும், முதலில் வராஹத்தின் திருமாளிகையாகத்தான் இருந்தது எனத் தல புராணங்கள் கூறும். பிறகே ஓர் பக்தன் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீனிவாசன் என்ற திருவுருவில் அமைந்தாராம். ஸ்வாமி புஷ்கரணி என்ற திருக்குளத்தின் கரைமேல் **ஆதிவராஹசுவாமி** கோவில் உள்ளது. இன்றும் கோவில் பூஜைகளில் முதல் மரியாதை ஆதி வராஹருக்குத்தான்! திருமலை, திருப்பதிக் கல்வெட்டுகளில் வராஹசுவாமி **"ஞானப்பிரான்"** என்று அழைக்கப்படுவதையும், வராக தீர்த்தம் ஒன்றிருந்து புதுப்பிக்கப்பட்ட விவரங்களும் உள்ளன. ஸ்வாமி புஷ்கரிணியில் நீர்மட்டம் மிகக் குறைந்தால் அதில் குறுக்குச் சுவர் ஒன்று தெரிகிறதென்றும், ஒரு பாதி வராஹ தீர்த்தம் என்றும், மறுபாதிதான் ஸ்வாமி புஷ்கரிணி என்றும் தென்னாற்காடு கெசட்டியர் (Gazetteer) கூறுகிறது.

கர்நூல் ஜில்லாவில் **மர்க்காப்பூர்** தாலுக்காவிலுள்ள வேணுகோபால ஸ்வாமி கோவிலில் ஓர் விசித்திரமான சிற்பம் உள்ளது. ஐந்து தலைகளைக் கொண்டு காலினடியில் ஓர் ராக்ஷஸனைத் துவைத்தவாறு அமைந்த இந்த ஆஞ்சநேய சிற்பத்திற்கு வராஹம், ஸிம்மம், ராக்ஷஸன், மனிதன், குரங்கு என்ற ஐந்து தலைகளும், பத்துக் கைகளும் உள்ளன. இலங்கையைத் தீக்கிரையாக்கும்பொழுது கொண்ட அச்சுறுத்தும் திருக்கோலமாம் இது!

எல்லோரா குகைக் கோயில்களில் 14-ம் குகையான ராவணன் குகையில் ஓர் அழகிய வராஹ சிற்பம் உள்ளது. (7–8ம் நூற்றுண்டைச் சேர்ந்தது) **பாதாம்** என்னும் கன்னட நாட்டிலுள்ள குகைகளிலும் வராஹ சிற்பங்களும், திருவிக்கிரம நரஸிம்ம சிற்பங்களும் உள்ளன. மைசூரில் **மேலக்கோட்டை** என்ற தலத்தில் உள்ள வராகப் பெருமானுக்கு நான்கு கைகள்—சங்கம், சக்கரம், பூமிப் பிராட்டியாரை ஏந்திய மூன்றும், பக்தர்களுக்கு அபயமளிக்கும் கை ஒன்றுமாக அமைந்த திருக்கோலம்.

காஜுராஹோ என்ற ஊரில் புகழ் வாய்ந்த பல சிற்பங்கள் மலிந்து கிடக்கின்றன என்பதை எல்லோரும் அறிவர். இந்த ஊரில் ஒரு வராஹர் கோயில் உள்ளது. 8 அடி 9 அங்குலம் உயரமுள்ள இச்சிலை மிகவும் அழகானதாம். 13-14ம் நூற்றுண்டுகளில் ஆண்ட சாண்டெல்லா அரசனை **திரைலோக்யவர்மன்** தன் நாட்டின் புகழை நிலைநாட்டியது பின்வருமாறு கல்வெட்டுகளில் விவரிக்கப்பட்டுள்ளது—திருமால் வராஹாவதாரத்தில் பூமியை மீட்டது போல் நம் அரசர் மிலேச்சர்களிடம் தவித்துக்கொண்டிருந்த பூமியைக் காத்தார்! மற்றும் அங்குப் பற்பல **வராக** சிற்பங்களும், நரசிம்ம, திருவிக்கிரம சிற்பங்களும் மலிந்து கிடக்கின்றன.

8—10-ம் நூற்றுண்டில் வாழ்ந்து புகழ் பெற்ற ப்ரதீஹார அரசர்களுக்கு வராஹம்தான் குல தெய்வமாக விளங்கியது; மிகப் புகழ் வாய்ந்த பேரரசன் **மிஹிர போஜன்** என்னும் மன்னனுக்கு ஆதிவராஹம் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டிருந்தது! **புஷ்கரம்** என்ற க்ஷேத்திரத்தினும் 12-ம் நூற்றுண்டில் கட்டப்பட்ட வராஹர் கோயில் உள்ளது. பஞ்சாபிலுள்ள குருக்ஷேத்திரத்திலும், குடந்தையிலும் வராஹ தீர்த்தங்கள் உள்ளன.

போபாலுக்கு அருகேயுள்ள **உதயகிரி** மலைகளில் 5-ம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் செதுக்கப் பெற்ற ஓர் அழகிய **வராக**

சிற்பம் உள்ளது. இதைப் பற்றித் திரு. K. M. முன்ஷி என்ற பேரறிஞர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்—"நம் நாட்டுக் கலைகளில் பழமையிலும் சரி, புதுமையிலும் சரி, பிறநாட்டுக் கலைகளிலும் சரி, உதயகிரி வராஹ மூர்த்தியின் நிகரற்ற காம்பீர்யத்தை மிஞ்சும் படைப்பு இல்லை. அவ்வுடலின் ஒவ்வொரு உறுப்பையும் எடுத்துக் காட்டும் ஒவ்வொரு கோடும் அதன் கட்டிலடங்காத் திறனைக் குறிக்கிறது பலத்தின் திண்மையால் உறுதியாய் நிற்கும் அச்சிற்பம் வெற்றி வீர்யம் வெளிப்பட நெடிதுயர்ந்துள்ளது. இறைவன் தன் ஊழிக்கால ஆண்மையுடன், சிறியளாய், மென்மை பொருந்தியவளுமான நிலமகளை பிரளய ஜலத்திலிருந்து காக்கும் காப்பாளனுகக் காட்சியளிக்கிறார். மனிதனின் உயர்ந்த கற்பனைகட்கு எடுத்துக் காட்டாக விளங்கும் படைப்பான கல் உருவம் இது". மனித உடலும், பன்றியின் முகமும் பெற்றுத் திகழும் இச்சிற்பத்தில் பூமியானவள் பன்றியின் விரலின் மேல் தன் கால்களை இருத்திக் கோட்டின் மேல் கையைத் தாங்கிக் காட்சியளிக்கிருள். சுமார் 12¾ அடி உயரமுள்ள இந்தச் சிற்பம் உடல் மேலும், தோள்களின் மேலும் போர்த்தப்பட்ட மாலைகளுடன் அழகிற் சிறந்து விளங்குகின்றது.

ஒரு காலத்தில் வராக மூர்த்தியின் திருவுருவம் "வராகன்" என்ற தங்க நாணயங்களின் மேல் செதுக்கப் பெற்று வந்தது. இன்றும் தங்கத்தை எடை போட "வராகன் எடை" பயன் படுத்தப்படுவதை நாமறிவோம்.

இவ்வாறு மிகத் தொன்மையானதும் பல நாட்கள் வழிபட்டு வந்ததுமான வராஹம் தற்காலத்தில் அவ்வளவாகத் தனிப்பட்ட வழிபாடு உடையதாக இல்லை என்றே கூறவேண்டும். எனினும் நம் மக்களிடையே வராஹ சுவாமியின் பெயரையொட்டிய—**பூவராகன், ஆதிவராகன், யக்ஞ வராகன்** முதலிய பெயர்கள் அமைந்துள்ளன என்பது கவனிக்கத் தக்கதாகும்.

இதுகாறும் கூறிவந்த வாற்றால், ஸ்ரீ வராக அவதாரத்தின் அருமை பெருமைகளை நாம் ஒருவாறு உணரலாம்.

"நிறக்கும் செழுஞ்சுடர்க் கோடும்
இப்பாரும் நிசா முகத்துச்
சிறக்கும் பிறையும் களங்கமும்
போலும் எனிற் சிறுகண்
மறக்குஞ் சரம்செற்ற மாயோன்
அரங்கன் வராகம் அதாய்ப்
பிறக்கும் பிறப்பின் பெருமை
எவ்வாறு இனிப் பேசுவதே?"

—அஷ்டப் பிரபந்தம்.

ஆழ்வார் திருநாட்கள்

மாசி—மார்ச்

20 — 4	திருக்கச்சி நம்பியார்
21 — 5	குலசேகர ஆழ்வார், கந்தாடையாண்டான்
24 — 8	பிள்ளையுறங்கா வில்லிதாசர்
25 — 9	திருமாலை யாண்டான், மணக்கால் நம்பி

பங்குனி

13 — 25	பெரிய பெருமாள்
17 — 30	கிடாம்பி ரங்கராஜர், நம்பெருமாள்

ஏப்ரல்

21 — 3	செல்வப்பிள்ளை

நாயன்மார் திருநாட்கள்

மாசி—மார்ச்

26 — 11	திருவள்ளுவர்
28 — 12	எறிபத்தர்

பங்குனி

10 — 23	தண்டியடிகள்
17 — 30	சிவநேசர்

ஏப்ரல்

19 — 1	கணநாதர்
21 — 3	முனையடுவார்

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இத்திருப்பதிகத்தினிடையே,

"ஏகம்பம் பொருந்தச் சென்று புடைபட்
டெழுதுமே"
"முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே"
"குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே",
"நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே"
"ஏகம்பம் சேர்ப்ப தாகநாம் சென்றடைந்
துய்துமே'!

எனவும், இறுதித் திருப்பாடலிலும்,

"ஏகம்பம் தருக்க தாகநாம் சார்ந்து
தொழுதுமே"

எனவும் அருளிச் செய்திருத்தல் காண்க. இவை, நாயனார்க்குத் திருவேகம்பத்தை வணங்குதலில் இருந்த விரைவை நன்கு புலப்படுத்துவன.

இதன் முதற்றிருப்பாடலுள், "திரு ஏகம்பா, அடியோங்கள் அல்லற்படுதல் ஆகுமோ (தகுமோ)" என முறைவேண்டி நின்றார்.

நான்காவது திருப்பாடலுள் இறைவனை, 'பொறி புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்து நினைந்தவர் சிந்தையுள் அறிவைத் தோற்றுவிக்கும் அமுதாகின்றவன்' எனவும், ஐந்தாவது திருப்பாடலுள், 'சிந்தையுட் சிவமாய் நின்ற செம்மையன்' எனவும், ஒன்பதாவது திருப்பாடலுள், 'பொய் அனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யன்' எனவும் அருளிச் செய்தார்.

ஆறுவது திருப்பாடலுள், 'சாக்கியத்திலும் சமணத்திலும் அகப்பட்ட துர்ப்பாக்கியர்கள் பக்கம் செல்லாமல், ஏகம்பன் பக்கம் செல்வோம்' எனவும், ஏழாவது திருப்பாடலில் 'மூப்பும் பிணியும் வந்து தடுப்பதற்கு முன்பே நாம் திருவேகம்பத்தை அடைந்து உய்தி காட்டுவோம்' எனவும், எட்டாவது திருப்பாடலில், 'நெஞ்சே, நீ, மயில்போலும் சாயலை யுடைய மகளிர்பால் கொள்ளும் மிக்க மயக்கத்தை விடுத்து, திருவேகம்பரது அழகிய மலர்போலும் திருவடிகளை வணங்கு' எனவும் அருளிச்செய்தார்.

இவ்வாறு திருவேகம்பநாதர் மீது அருளிச் செய்த திருப்பதிகங்கள் பலவும் பெரிதும் அருமை வாய்ந்தனவாய் அமைந்துள்ளன. எத்தலத்திலும் நாயனார் சென்று வணங்கும் அன்பினைச் சொல்லில் அடங்காத வகையில் சேக்கிழார் புலப்படச் செய்தருளினாராயினும், இத்தலத்தில் அதனை அவர் அவை எல்லாவற்றினும் மேம்படப் புலப்படுத்தி யிருத்தல், புடைபட வைத்து நோக்கிற் புலனாவதாகும்.

மற்றைய நகரங்கள்போலாது காஞ்சி நகரம் எண்ணிறந்த சிவாலயங்களை உடையதாகலின், அந்நகரத்தின் முதற் றிருக்கோயிலாகிய திருவேகம்பத்தை நாயனார் மேற்கூறியவாறு முதற்கண் வணங்கிய பின்பு, திருமேற்றளி முதலிய பல தலங்களையும் வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து திருத்தொண்டு செய்திருந்தார். காஞ்சியில் திருவேகம்பத்தை முதலாகக் கொண்ட பல தலங்களையும் நாயனார் வணங்கினார் என்பது, தமது திருப்பதிக் கோவையுள் "கச்சிப் பல தளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே" என அவர் அருளிச் செய்தமை பற்றி அறியப்படும். இங்ஙனம், பல தலங்களையும் வணங்கித் திருத்தொண்டு புரிந்தார் எனவே, பல நாட்கள் நாயனார் காஞ்சியில் வதிந்தருளினார் என்பது சொல்லாமே பெறப்படும்.

ஏனைய தலங்களுள் திருமேற்றளி என்னும் ஒரு தலத்திற்கே நாயனாரது திருப்பதிகம் உள்ளது. அது, "மறையது பாடி" எனத் தொடங்கும் திருநேரிசைத் திருப்பதிகம். இதனுள் திருமாலிடத்து இறைவர் திருவருள் வைத்தமை சிறந்தெடுத் தருளிச் செய்யப்பட்டது. இங்குத் திருமால் திருஞானசம்பந்தரது திருப்பதிகத்தால் சிவசாரூபம் பெற்றனர் என்கின்றது தலபுராணம். அங்ஙனம் சிவசாரூபம் பெற்ற திருவுருவமும் இங்குக் காட்டப்பட்டு வருகின்றது. திருஞானசம்பந்தர், இந்நாயனாருக்குப் பின்பே தொண்டைநாடு நோக்கிப் புறப்பட்டுக் காஞ்சிக்கு எழுந்தருளினார். ஆகவே; தலபுராணத்தின்படி, இந்நாயனார் எழுந்தருளிய பொழுது,

திருமால் திருமேற்றளி இறைவரைச் சாரூபம் வேண்டி வழிபட்டிருந்தனராவர்.

இத்திருப்பதிகத்துள் இறைவரது பெருமைகள் பல பேசப்பட்டிருத்தலோடு, இறைவரை, "கண்ணிடைமணியி னொப்பர்" எனவும், காஞ்சியை, "கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர்" எனவும் அருளிச் செய்த அருந்தொடர்கள் அமைந்துள்ளன.

திருமாற்பேறு வணங்கல் :

இங்ஙனம் காஞ்சியின்கண் பலநாள் எழுந்தருளி யிருந்த பின்பு, நாயனர் திருமாற்பேறு சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்தார்

திருமாற்பேற்றிற்கு உள்ள நாயனர் திருப்பதிகம் நான்கு. அவற்றுள், "மாணிக்குயிர்பெற" என்னும் திருவிருத்தத் திருப்பதிகத்துத் திருப்பாடல்கள் இரண்டே உள்ளன. அவை இரண்டும் சிவபிரானது திருவடிப் பெருமையையே உணர்த்துவன.

திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள் இரண்டு. அவற்றுள், "பொருமாற் றின்படை" என்னும் திருக்குறுந் தொகைத் திருப்பதிகம், சிவபிரானை வணங்குவார் அடையும் பெரும் பயன்களை வகுத்து விளக்குவது. இதன் முதற்திருப்பாடலில், 'இத்தலம் திருமால் சிவபிரானை வழிபட்டுச் சக்கரம் பெற்றது' என்பதைக் குறிக்கும் குறிப்புடையது. "திருமாற்பேறு கைதொழும்—அன்ன வர்எமை ஆளுடையார்களே" எனவும் இதன்கண் அருளிச்செய்யப் பட்டுள்ளது.

மற்றொரு திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்துள், திருவைந்தெழுத்தால் இறைவனை உணர்தலின் தனிச் சிறப்பு, குறிக்கொண்டு நினைக்கத் தக்க வகையில் அருளப்பட்டுள்ளது. அவ்வகையில் அமைந்த திருப்பாடல்கள் முதலாவதும் நான்காவதும் ஆகும். அவை முறையே வருமாறு :

"ஏது மொன்று மறிகில ராயினும்
ஓதி அஞ்செழுந் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே"

"இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினுற்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே"

மற்றும் பல பெயர்களால் இறைவரை எண்ணி ஏத்துவார்க்கும் பயன்கள் உளவாதலும் அதன்கண் அருளப்பட்டுளது.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரம்முங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளும்மாற் பேறரே."

"ஈட்டு மாநிதி சால இழக்கினும்
வீட்டுங் காலன் விரைய அழைக்கினும்
காட்டின் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லர்மாற் பேறரே."

"ஐய னேஅர னேஎன் றரற்றினல்
உய்ய லாம்உல கத்தார் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆளவும் வைப்பர்மாற் பேறரே."

என்னும் அரிய திருப்பாடல்களும் அத்திருப்பதிகத்தே அமைந்து விளங்குகின்றன. அவற்றுள், "மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே" என்னும் தொடர் எத்துணை உறுதி யருளும் தொடராய் உள்ள தென்பது சொல்ல வேண்டா. இன்னும் இரண்டாவது திருப்பாடலில்,

"வைச்ச மாநிதி யாவர்மாற் பேறரே"

என்றும் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

"பாரானைப் பாரினது பயனுனை" எனத் தொடங்குவதாகிய திருத்தாண்டகத் திருப்பதிகம் இறைவனது இயல்பினை வகுத்தருளிச் செய்தது. அதன்கண் திருமாற்பேற்றுப் பெருமானை, "செம்பவளக் குன்று" என்று குறித்து, 'அக்குன்றினை நான் சென்றடையப் பெற்றேன்' என அருளிச் செய்து களித்தார் நாயனர். மற்றும், அதன்கண், இறைவன் கருதுவார் மனத்தான், மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவான்; அடியார் செய்த அநாசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும் சீருத பெருமான்; முனியாது என்றும் பற்றுகிப் பல்லுயிர்க்கும் பரிவோன், என்னும் அரிய உண்மைகள் அருளப்பட்டுள்ளன.

காஞ்சிக்கு மீளல்

திருமாற் பேற்றை வணங்கிய பின்னர், நாயனர், மற்றும் பல தலங்களை வணங்கி, கச்சி ஏகம்பப் பெருமான் மீது கொண்ட பேரன்பினல் மீளவும் காஞ்சியை அடைந்து, அப்பெருமானை வணங்கி, "ஏகம்பன் காண் அவன்என் எண்ணத் தானே" என்றே முடியும் திருத்தாண்டகத் திருப்பதிகங்கள் இரண்டினை அருளிச் செய்தார். (தொடரும்)

ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆனால் அவர் உள்ளத்தே "நமக்கு வந்தநோய் நாம் முன் செய்த கருமத்தின் பயனாய் விளைந்தது. அந்தக் கருமபலன் அந்த நோயை அதற்கென்று விதித்த கால அளவு நாம் அனுபவித்தாலன்றித் தொலையாது. நாம் அதைப் பூரணமாக அனுபவிக்கவில்லை. அதை மாறனேர்நம்பி யல்லவா அனுபவித்தார். இயதிப்படி அனுபவித்துத் தொலைக்காத கருமபலன் திரும்பப் பிறப்புக்கு ஏதுவானாலும் ஆகும். எனவே அதனைமீண்டும்பெற்று அனுபவித்தே தொலைத்துவிடவேண்டும்" என்ற நினைவுகள் எழுந்தன. உடனே மாறனேர் நம்பியைத் தம் பக்கல் அழைத்து "முன்னம் நம்முடைய நோயை நீர் பெருமாளைப் பிரபத்திபண்ணி என்னிடமிருந்து வாங்கிக்கொண்டீர். கருமபலமான அந்நோயை நான் அனுபவித்துத் தொலைத்தாலன்றி அக்கருமபலன் என்னை விடாது பற்றி, மீண்டும் இவ்விருள் தருமா ஞாலத்திலே பிறக்கும்படி மூட்டும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால் நீர் மீண்டும் பெருமாளிடம் பிரபத்திபண்ணி அந்நோயை என்னிடமே திருப்பித்தரவேண்டும்" என்று கூறினார். மாறனேர் நம்பியும் ஆசாரியன் ஆணையைச் சிரமேற்கொண்டு பெரிய பெருமாளைப் பிரபத்தி பண்ணுவதற்காகக் கோயிலுக்குச் சென்று பெருமாளைப் பிரபத்தி பண்ணிப் பெருமாள் ஆணையை ஏற்றுத் திரும்பி வந்தார். வந்தவர் ஆளவந்தாரை அடிவணங்கி "சுவாமி! தேவரீர் திருவுள்ளப்படியே பெருமாளிடம் விண்ணப்பித்தேன். பெருமாள் தேவரீருக்கு இனி அனுபவிக்கவேண்டிய கருமபலத்தின் மிச்சம் யாதொன்றும் இல்லை. இனிக் கருமபலன் தேவரீரைத் தொடப் போவதுமில்லை. அதனை அடியேனையே ஏற்றுக் கழித்து விடும்படி அனுக்கிரகித்தார் என்று கூறினார். ஆளவந்தாரும் மாறனேர் நம்பியின் நிலையான ஆசாரிய பக்தியையும், தளராத மன உறுதியையும் மிகவும் வியந்து அருகில் நின்ற பெரிய நம்பியை நோக்கி, நீர் இந்த மாறனேர் நம்பியை என்னைப்போலப் பாவித்து எல்லாவிதமான சிறப்புக்களையும் செய்யக்கடவீர் என்று கட்டளையிட்டார். பெரிய நம்பியும் "மிகவும் பேறு பெற்றேன்," என்று கூறி ஏற்றுக்கொண்டார்.

பின்பு ஸ்ரீ ஆளவந்தார் முதலிகளை நோக்கி, நான் எம்பெருமானே ரக்ஷகன் என்று கூறியபோது, உங்களிடம் ஏதோ தெளிவின்மை இருந்ததாக எனக்குத் தோன்றியது. அதிலே நான் கூறிய ரக்ஷகத்வம் எம்பெருமானோடு மட்டுமின்றி ஆசாரியன் அளவும் விரியும். ஆகவே நமக்குக் காப்பு எம்பெருமானும், ஆசாரியனும், பாகவதர்களும் என்று கொள்ளவேணும். இதை உணர்ந்து கொண்டால் தெளிவின்மைக்கு நிலமில்லை. பாகவதர்களை நோக்குகையில் அவர்கள் அனைவரையும் சமமாக நோக்க வேண்டுமே யொழிய, சாதிகுலம் முதலியவற்றை எண்ணித் தரமிடுதல் கூடாது. பாகவதனைக் காணும்போது எம்பெருமானைக் கண்டால் எப்படி தன்னை இழந்து நிற்போமோ அந்நிலை வரவேண்டும். ஒருவன் ஆசாரியனாக இருந்து பாகவதர்களுக்குத் தீர்த்தம் கொடுக்கும் இடத்தில், பொருள் இன்பம் இவைகளில் எவ்வித நோக்குமின்றிக் கொடுக்கவேண்டும். நாம் கொடுக்கிறோம், அவர்கள் கொள்கிறார்கள் என்ற எண்ணம் இருத்தல்கூடாது. கொடுக்கும்போது கொடுப்பவர் தம்முடைய ஆசாரியனின் திருவுருவத்தை உள்ளத்தே இருத்தி த்வயத்தை அனுசந்தானம் செய்து கொண்டு கொடுக்கவேண்டும். கொள்பவர், பெறுபவர் இவ்விருவரில் எவருக்கேனும் மேற்சொன்ன மனநிலை மாறுபட்டு, நோக்கு உலகியலானால் அவனும் கொடுத்தற்குரியனல்லன், இவனும் பெறுதற்கு உரியனல்லன் என்று கூற, முதலிகளும் மனங்கலங்கி நின்றார்கள். ஆளவந்தார் மீண்டும் முதலிகளை நோக்கி உங்களுக்கு இறுதியான உறுதிப் பொருள் பெரிய பெருமாள் திருவடிகளிலே ஒரு கருமுகை முகிழ்வெடிப்பிக்கை (எம்பெருமான் திருவடிகளிலே புஷ்பாஞ்சலிக் கைங்கர்யம் செய்கை). ஆசாரிய விஷயத்தில் முதல் பருவமான ஆசாரிய கைங்கர்யம், இடைப்பருவமான பகவத் கைங்கர்யம்,

இவற்றை இறுதிப் பருவமான பாகவத கைங்கர்யமாக உளங்கொண்டு போதலே உத்தாரக ப்ரபத்தி (ஆன்மாவை உயர்த்தும் உறுதி) என்று அருளி, திருவரங்கப் பெருமாளரையரைத் தண்டனிட்டு, திருக்கோட்டியூர் நம்பியையும், பெரிய நம்பியையும், "இவர்களை நீர் கண்காணித்துக் கொள்ளும்" என்று கூறி அரையரிடம் ஒப்படைத்தார். அரையர் அவர்களிருவரையும் கைப்பிடித்து நீவிர் இருவிரும் ஆசாரியன் பிரிவிலே ஏதேனும் மதிகேடாகச் செய்வீர்களாயின் நீங்கள் இவ்வுலக வாழ்விலும் பெருமாளை இழப்பீர்கள், அந்தமில் பேரின்பத் தடியரோடு வாழ்வும் உங்களுக்குக் கிட்டாது என்று அருளினர். ஸ்ரீ ஆளவந்தார் இதைக் கேட்டு மகிழ்ந்து "முதலிகாள்! திருவரங்கப் பெருமாளரையர் திருவுருவே உங்களுக்குப் பற்றுக்கோடாகவும், பற்றும் பொருளாகவும் கொள்வீராக என்று அருள, அவர்களும் அதனை ஏற்று அவரை வணங்கினர்கள்.

பின்னர் ஆளவந்தார் திருமேனி நோயினின்றும் தெளிவுற்றது. அவர் தீர்த்தமாடி, பெரிய பெருமாள் திருமஞ்சனமாய் உடுத்து முடித்துச் சேவைசாதித்துக்கொண்டுள்ள திருவோலக்கத்திற்கு எழுந்தருளி, பெருமாளை சேவித்துக் கூப்பியகையராய் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது பெருமாள் அர்ச்சக முகமாகத் திருவரங்கப் பெருமாளரையரை அருளிப்பாடிட்டார். அரையரும் அப்போது சேவிக்கவேண்டிய முறையைவிட்டு "சூழ் விசும்பணிமுகில்" என்னும் பதிகத்தை (இப்பதிகம் வீடுபேறுபெறும் ஆன்மா அர்ச்சிராதி மார்க்கமாகச் செல்லும்வழியையும், அவ்வழியில் நிகழும் நிகழ்ச்சிகளையும் விளக்கி நம்மாழ்வாரால் அருளப்பட்டது) சேவித்தார். கூடியிருந்த அனைவரும் இது என்ன! ஆளவந்தார் சேவித்து நிற்க அரையர் இப்பதிகத்தை இப்போது பாடுவானேன்? என்று வியப்பெய்தி நின்றனர். அப்போது பெரிய பெருமாள் நெற்றியில் வளையமாகச் சுற்றியிருந்த மாலை தானே நழுவி விழுந்தது. அர்ச்சகர் அதனை எடுத்து அணிவிக்க முயல, அரையர் அதற்கு முன்னே அம்மாலையைச் சடக்கென எடுத்துக் கைகுவித்து நின்ற ஆளவந்தாருக்கு அணிவித்தார். ஆளவந்தார் திருவுள்ளம் நிறைவும், மகிழ்வும் உற்றது. அரையர் அவரை நோக்கி "உம்முடைய எண்ணம் ஈடேறிற்று" என்று அருளினர். அப்பால் ஆளவந்தாருக்குப் பெருமாள் தீர்த்தம், ஸ்ரீ சடகோபன் ஆகியவற்றைச் சாதித்து விடை கொடுத்தருளினர். ஆளவந்தாரும் மடத்துக்கு எழுந்தருளினர். அங்கே பாகவதர்கள் யாவரும் அமுது செய்த பின் ஆளவந்தார் திருவரங்கப் பெருமாளரையர், திருக்கோட்டியூர் நம்பி, பெரிய நம்பி முதலான முதலிகள் எல்லோரையும் வணங்கி, "பரமபாகவதர்களான உங்களிடத்திலே நான் தெரிந்தோ தெரியாமலோ ஏதேனும் குற்றங்கள் செய்திருந்தால் அவற்றையெல்லாம் மறந்து நீங்கள் என்னை மன்னித்தருளவேண்டும்," என்று கூறி அந்தப் பாகவத கோஷ்டியின் முன்பே விழுந்து எழுந்திராமலே கிடந்தார். திருவரங்கப்பெருமாளரையர் அவரை வாரியெடுத்து "உம்மால் குற்றமும் செய்ய முடியுமோ" என்று கூறிப் பின்னர் அவரை அமுது செய்வித்தார்.

அதன் பின் ஆளவந்தார் முன்போலவே முதலிகளுக்கு உறுதி பயக்கும் மொழிகளை அருளிச்செய்து கொண்டிருந்தார். அவ்வேளை ஆளவந்தார் திருமேனி நோயினால் நலிவுற்றது என்று கேள்விப்பட்ட இரு காஞ்சிபுர ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவரைக்காண அங்கு வந்தனர். அவர்கள் ஆளவந்தாரைத் தண்டனிட்டு உடல் நலம் பற்றி வினவினர். ஆளவந்தார் அவர்களிடத்தில் பெருமாள் கோவில் (காஞ்சிபுரம்) விசேஷமெல்லாம் பொதுவாகக்கேட்டு பின் குறிப்பாக அவர்களை நோக்கி "சுவாமிகாள்! அங்கே இளையாழ்வார் இப்போதுஎன்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்டார். அவர்கள் "சுவாமி! அவர் யாதவப்பிரகாசனிடமிருந்து உறவறுத்துக் கொண்டு பேருளாளன் பக்கலிலே பேரன்புபூண்டு, அவர் சன்னிதியிலே திருமஞ்சன தீர்த்தம் கொணரும் தொண்டுபூண்டு ஒழுகிவருகிறார்" என்று விண்ணப்பித்தனர். ஆளவந்தார் அதனைக்கேட்டு உளம் பூரித்தவராய் அங்கிருந்த அனைவரையும் நோக்கி நம்முடைய வேண்டுகோளைப் பேருளாளன் நிறைவேற்றியருளினன் பார்த்தீர்களா! என்றுகூறிபேருளாளன் பேருளை வியந்து வடமொழியில் "ஸ்தோத்திர ரத்நம்" என்ற பாமாலையைப் பாடியருளினர். அப்பாமாலை மந்திர ரத்நமான த்வயத்தின் (ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே நாராயணாய நம. என்ற இரு வாக்கியங்கள் கொண்ட மந்திரம்) பொருளை விளக்கும் வகையில் அமைந்தது. ஆளவந்தார் அதைப் பட்டோலை ஆக்கித் தமக்கு மிக

வும் உற்றவரான பெரிய நம்பிகள் கையிலே கொடுத்து "நீர் இப்பாமாலையைக்கொண்டு போய்ப்பேரருளாளன் திருவடிகளிலே சமர்ப்பித்து, அங்கே திருமஞ்சன கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும் இளையாழ்வாரை நம்முடைய கோஷ்டியோடு சேரும்படி வகை தேடக் கடவீர்" என்று கட்டளையிட்டார். பெரிய நம்பிகளும் அவ்வாணையைச் சிரமேற் கொண்டு அப்போதே ஆளவந்தாரிடம் விடை கொண்டு காஞ்சிபுரம் புறப்பட்டார்.

பெரிய நம்பிகள் காஞ்சிபுரத்திற்குப் புறப்பட்டுச் சென்ற சில நாட்களில் ஸ்ரீ ஆளவந்தார் திருமேனி முன்னிருந்ததைவிட அதிகம் க்ஷீணமுற்றது. முதலிகள் யாவரும் மிகவும் மனம் நொந்து பெரிய பெருமாள் இவரை என் செய்கின்றாரோ! என்று சிந்தை கலங்கி நின்றனர். அப்போது பெருமாள் கோயிலிலே அயன்கண்ட வைகாசித் திருநாள் ஆரம்பமாகி இருந்தது. அத்திருநாள் முடிவில் அவபிருதத்தினன்று (தீர்த்தவாரியன்று) ஸ்ரீ ஆளவந்தார் நீராடி, பெரிய பெருமாளைச் சேவிக்கவேணும் என்று கோயிலுக்கு எழுந்தருளினார். அப்போது பெருமாள் உத்தம சந்தி அமுது செய்து திருத்திரை வாங்கப் பெற்று இருந்தது. ஸ்ரீ ஆளவந்தார் அக்கருமணியின் கோமள விக்ரஹத்தை அடி முடியாகவும், முடியடியாகவும் கண்குளிரச்சேவித்தார். அதன் பின் பெருமாள் திருவடியின் கீழ் அமர்ந்திருக்கும் திருப்பாணாழ்வாரை மனங்குளிர அனுபவித்தார். அருச்சகர் ஸ்ரீ ஆளவந்தாருக்கு ஸ்ரீ சடகோபனும், தீர்த்தப் பிரசாதமும் அருள, அவற்றைப்பெற்றுப் பெருமாளை மீண்டும் வைத்தகண் வாங்காதே சேவித்து, அவரிடம் விடைகொண்டு மீண்டும் முதலிகளோடு மடத்திற்கு எழுந்தருளினார். அங்கு முதலிகள் அனைவருக்கும் தீர்த்தமருளி அவர்களனைவரையும் அமுது செய்வித்தார். அன்று வைகாசி மாதம் திருவோண நன்னாள். அடியார்கள் அமுது செய்த பின் ஒரு நல்ல வோரையிலே ஸ்ரீ ஆளவந்தார் அவர்கள் உண்டொழி மிச்சிலை அமுது செய்தார். ஆழ்வார்கள் அனைவரையும் தம் மனக் கண்முன்னே நிறுத்தி அவர்கள் திருவடிகளைச் சரணமாகப் பற்றினார். பின்னர்க் கோயிலிலே எழுந்தருளியுள்ள ஆசாரியர்கள், தம் திருவடியை அண்டியிருந்த முதலிகள், கோயில் தானத்தார் முதலிய அனைவரையும் தம் அருகே அழைத்து அவர்களிடம் "அடியேன் தெரிந்தோ தெரியாமலோ உங்கள் மனம் குன்றும்படி ஏதேனும் சொல்லியோ, செய்தோ இருந்தால் அவற்றையெல்லாம் உங்கள் உளத்தினின்று நீக்கி அடியேனுக்கு மன்னிப்பு அருளவேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டார். இவ்வேண்டுகோளின் குறிப்பை அறிந்த அவர்களும் கலங்கிய உள்ளத்தராய் அவரை நோக்கி "சுவாமி பெரிய பெருமாள் தவறு இழைத்தாலன்றோ தேவரீர் தவறு இழைப்பது!" என்று நாத் தழுதழுக்க உரைத்து நின்றனர். ஆளவந்தார் தானத்தாரை நோக்கி "பெரிய பெருமாளுடைய திருவாராதனம் முதலிய கைங்கர்யங்களைக் காலம், முறைபிறழாமல் நன்கு நடத்தி வாருங்கள்; தேசாந்தரிகளை அவர்கள் மனம் உவக்க ஆதரியுங்கள்" என்று அறிவுரை புகட்டி, திருவரங்கப் பெருமாளரையரையும் முதலிகளையும் அவர்கள் கையிலே காட்டிக் கொடுத்து "இவர்களை நன்கு பேணுங்கள்" என்று நியமித்தார். அவர்களும் "தேவரீர் திருவுள்ளப்படியே நடந்து கொள்வதாக உறுதி கூறுகிறோம்" என்று விண்ணப்பம் செய்து, அவரிடம் விடைகொண்டு, "இன்று இவர் சொல்லும் செயலும் வியப்பாக அல்லவா இருக்கிறது! பெருமாள் திருவுள்ளம் என்னவோ?" என்று தம்மில் ஒருவரோடொருவர் கூறிக்கொண்டே சென்றனர்.

அப்பால் ஸ்ரீ ஆளவந்தார் தம் ஸ்ரீ பாதத்து முதலிகளை அருகழைத்து இளையாழ்வாருக்குச்சமாச்ரயணம் செய்துவைக்கும்படி பெரிய நம்பியிடம் சொல்லுங்கள் என்றார். (சமாச்ரயணம் என்பது ஆசாரியன் சிஷ்யனுக்குத் திருவாழி திருச்சங்கு இலச்சினைகள் பொறித்து, திருமண்காப்பு தரிக்கவேண்டிய முறையைக் கூறிக்காட்டி, தாஸ்யநாமம் (எந்த ஆசாரியரின் திருவடி சம்பந்தம் பெற்றவன் என்ற பெயர்) சூட்டி, திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் ஆகியவற்றை உபதேசித்து, பெருமாளுக்குத் திருவாராதனம் செய்வதாகிற மஹாயக்ஞத்தைச் செய்து காட்டி அச்சீடனை ஒரு வைணவனுக்குதல். இதனைப் பஞ்சசம்ஸ்காரம்—ஐவகைத்தீக்ஷை என்பர் வைணவர்) பின்னர், தனியாக திருக்கோட்டியூர் நம்பியை அழைத்து "இளையாழ்வாருக்கு சரமச்லோகத்தின் பொருளை விளக்கி உபதேசியும்" என்றும், திருமாலையாண்டானை அழைத்து "நீர் இளையாழ்வாருக்குப் பகவத் விஷயத்தை (நம்மாழ்வாரின்

திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்களை) அருளிச்செய்யும்'' என்றும், பெரிய திருமலை நம்பிகளிடம் "நீர் இளையாழ்வாருக்கு ஸ்ரீ ராமாயணத்தின் தேர்ந்த பொருள்களை விளக்கியருளும்'' என்றும், திருவரங்கப் பெருமாள் அரையரை நோக்கி "நம்முடைய திருவுள்ளக் கருத்தையும், பெரிய பெருமாள் திருவடிகளிலே ஒடுங்கியிருக்கும் பாண்பெருமாள் விக்கிரகத்தின் இரகசியத்தையும் இளையாழ்வாருக்கு நன்கு அறிவியும்'' என்றும் பணித்தார். அதன்பின் தான் தினந்தோறும் மிக ஆதாரத்தோடு பேணிவந்த பவிஷ்யதாசார்ய விக்கிரகத்தைக்கொணர்வித்துஅதனைத் திருக்கோட்டியூர் நம்பிகள் கையிலே கொடுத்து "இம்மூர்த்திதான் அந்த இளையாழ்வார் காணீர்!'' என்று அருளிச்செய்தார்.

இதன் பின் முதலிகள் யாவரும் கலங்கிய கண்களோடும் கிடக்க ஸ்ரீ ஆளவந்தார் பத்மாஸனம் இட்டுக்கொண்டார். ஸ்ரீ மணக்கால் நம்பிகளின் (அவர் ஆசாரியரின்) திருவடிநிலைகளைத் தம் எதிரே எழுந்தருளச் செய்வித்து, தண்டனிட்டு, அவருடைய வடிவழகனைத்தையும் தம் திருக்கண்களிலும், திருவுள்ளத்திலும் தேக்கிக்கொண்டு சமாதி நிலையை அடைந்தார். குறிப்பறிந்த முதலிகள் "பிரும்மவல்லி,'' "பிருகுவல்லி'' "புருஷஸூக்தம்'' "அர்ச்சிராதி'' "சூழ்விசும்பணி முகில்'' இவற்றை ஓதினர். திருச்சங்குகள் பரிமாறப்பெற்றன. சகல வாத்தியங்களும் முழங்கின. இம்மங்கல முழக்கிடையே ஸ்ரீ ஆளவந்தாரின் கபாலம் விரிந்து வழிவிட ஆன்மஜோதி ஊர்த்துவ முகமாகச் (மேல் நோக்கி) செல்ல, ஸ்ரீ ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

ஆளவந்தார் தேகம் விடுமளவும், அவர் ஆணைக்கடங்கி அவர் தம்மைப் பிரியும் காலம் வந்ததே என்று மனம்கன்றிய அந்தப்பெரும் துக்கத்தை உள்ளேயே வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்த முதலிகளுடைய சோகப் பெருவெள்ளம்,இப்போது கட்டுமீறி அணையை உடைத்துப் பெருகிற்று. அவர்கள் அனைவரும் 'ஆ' என்று அலறியவர்களாய் வேரறு பட்ட மரங்களெனத் தரையிலே சாய்ந்தனர். பேச்சடங்கினர் சிலர்; அசைவற்றனர் சிலர்; நின்றே விட்டதோ என்று சொல்லும்படி மூச்சடங்கினர் சிலர். ஆளவந்தார் பரமபதித்த (வைகுண்டம் சேர்ந்த) செய்தி திருவரங்கம் முற்றும் பரவிற்று. ஊரடங்கலும் கூடிற்று. வந்தவர்களில் முதியரான சிலர் தம் நிலையழிந்து கிடக்கும் முதலிகளுக்குச் சைத்ய உபசாரங்கள் செய்து உணர்வெழுப்பினர். அவர்களும் மெல்லக் கண்விழித்தனர். மறுபடியும் சோகம் வந்து மூடவே, அனைவரும் வாய்விட்டுப் புலம்பினர். பின்னும் பெரியோர்கள் ஒருவகையாகத்தேற்ற மெல்லத்தேறி "நம்பெருமாள் நம்மை வஞ்சித்து விட்டார்! நாம் என் செய்வோம். சரி! இனி மேல் நடக்கவேண்டியவை செவ்வனே நடைபெற வழி தேடுவோம் என்று, அவ்வகைக்குரிய செயல்களில் தம் மனத்தைச் செலுத்தினர். ஆளவந்தார் திருக்குமாரரான பிள்ளையரசு நம்பியை அழைத்து உரிய கடன்களை ஆற்றப்பணித்தனர். அவரும் பெரியோர்களை வணங்கி "ஸ்ரீ ஆளவந்தாருக்கு உரிய கடன்களைச் சிறந்த முறையில் செய்ய வேண்டியவற்றைப் பெரியோர்களான நீங்களே அடியேனுக்கு வழிகாட்டி இப்பெரிய கைங்கர்யத்தைத் தலைக்கட்டியருளவேண்டும்'' என்று பிரார்த்திக்கொண்டார். முதலிகளும் உரியவற்றைச் செய்ய முனைந்தனர்.

முதலிலே கோயில் பிணைப்பிள்ளைகளை அழைத்து மடத்துத் திருவாசலை அலகிட்டுப் புனிதமாக்கினர். வேத நல்வாயர்களான பெரியோர்கள் திருவாசலிலே திருக்காவணம் (பச்சைப்பந்தல்) அமைத்தனர். பந்தல் விதானத்தின் நாற்புறங்களிலும் தருப்பை மாலையும் செங்கழுநீர் மாலையும் கட்டினர். பலவித வண்ணப் பட்டுத் துகிலாலும், வெண் சாமரையாலும் குச்சுகள் செய்து பந்தலைச் சுற்றி நாலவிட்டனர். திருக்காவணத்தின் நான்கு திருவாசல்களிலும் குலைவாழையும், தாறுடன் கமுகும், கரும்பும் நாட்டினர். பல்வகைக் கனிகளையும் கொத்துக்களாகத் தொங்கவிட்டனர். நாற்புறமும் கொடிகட்டி வண்ண இலைகளால் சுற்றும் அலங்கரித்தனர். நான்கு திருவாசலிலும் பலாசம், அரசு, அத்தி இவற்றின் கொப்புகளாலான தோரணம் கட்டினர். பந்தலிலே பதக்கு நெல்லைச் சொரிந்து பரப்பி அப்பரப்பின் மையத்தும் நாலு மூலைகளிலும் பூரண கும்பங்களைத் தாபித்தனர். எம்பெருமானின் கேசவாதி பன்னிரு நாமங்களையும் ஓதிக்கொண்டே ஆறிரு கலசங்களையும் அமைத்தனர். அக்கலசங்களிலே குசைப் புல்லும், அருகும், தருப்பையும், விஷ்ணுக்கிரந்திப் பூவும் இட்டுக் குருபரம்பரை வழியாக 'த்வயத்தை' அநுசந்தானம் செய்து

கொண்டே கும்பார்ச்சனைபண்ணி, அவன் ஆறிரு நாமங்களாலே அப்பன்னிரு கலசங்களைத்தாபித்தனர். பின் பிள்ளையரசுக்கு ஆனிடத்தைந்தினுலும் அபிடேகம்பண்ணி, ஈசான பாகத்திலுள்ள குப்பமொழிய மற்றைய நான்கு கும்பங்களையும் ஏந்தி, பெரியோர் வாய்மணக்க ஸ்ரீ புருஷ ஸூக்தம் ஸேவிக்க, அக்கும்ப தீர்த்தத்தாலே திருமஞ்சனம் செய்வித்தனர். பிள்ளையரசும், முதலிகளின் ஸ்ரீ பாத தீர்த்தம்கொண்டு, அவர்களுக்குச் சுருளமுது சமர்ப்பித்து அவர்களை அனுமதி வேண்டி, அவர்களை வலம்வந்தார்.

பின்னர்த் திருவாசலிலே கோமயத்தாலும் நெய்யாலும் தெளித்துச் சுத்தமாக்கப்பட்ட இடத்திலே பதக்கு நெல்லைப்பரப்பி, பசுமண்ணால் செய்த ஒரு ‘உரலையும் உலக்கையையும் மந்திர மொழிகளாலே ஆட்டி; அவற்றுக்குப் புதுக்கோடி உடுத்து, அந்த உரலை அரிசியும் நெய்யும் கலந்த நெல்லின்மேல் வைத்து அவ்வுரலிலே மஞ்சளை இட்டார். அப்பால் வெள்ளாடையும் வெண்மலரும் தரித்தவர்களான வைணவ தேவதாஸிகள் திருவிக்கிரமன் திருவீதியிலே வலமாக வந்தனர். திருவாசலுக்கு வந்ததும் அவர்கள் அங்கே திரளாகக் குழுமியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்துக்குத் தெண்டம் ஸமர்ப்பித்து அவர்கள் அனுமதியோடு உலக்கையைப் பெற்றவர்களாய்க் கேசவாதி பன்னிரு நாமங்களையும் ஓதிக்கொண்டே அவ்வுரலிலுள்ள மஞ்சளைச் சுண்ணமிடித்தனர்.

அப்பால் திருவரங்கப் பெருமாளரையர் முதலானவர்கள் பரப்பிய நெல்லின் மத்தியிலே அரிசியைப் பூமிவடிவமாக வட்டமாகப் பரப்பி அதனை ஒன்பது பகுதியாகப் பிரியும்படி தெய்வத்தன்மை வாய்ந்த கோடுகள் கிழித்து அப்பூமி வடிவின் எண்டிசையிலும், எண்ணெய், சுண்ணம், சந்தனம், மாலை, பொறி, நெய், பால், நீர் இவை நிறைந்ததாயும், தருப்பையாலும் அரசிலையாலையும் தூய தாக்கப்பட்டவையுமான கலசங்களை த்வய அநுஸந்தானத்தோடு எழுந்தருளப்பண்ணினர். பரமாகாசத் தானத்திலே தெய்வத்தன்மை ஊட்டப்பெற்ற புது முறத்திலே உமிகலவாத பொறிகளை உடுக்களாகச் சிதறி நிரைத்து அம்முறத்தைக்கீழ்ப்புறத்திலேவைத்தனர். ஸ்ரீ வைஷ்ணவர்களின் திருவடிகளை விளக்கி அந்தப் பவித்திரமான தீர்த்தம் நிறைந்த கும்பமொன்றை மேற்கேவைத்தனர். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் தக்கிணையாக உள்ள பணத்தை ஒருகிழியிலே முடித்து அக்கிழியை வடக்கே வைத்தனர். பெரிய பெருமாள் சூடிக்களைந்த திருப்பரிவட்டம், திருமாலை சாந்தம் இவற்றை வரவிட்டு அவற்றை ஒரு பொற்றட்டிலிட்டுத் தென்புறமாக வைத்தனர். பின்னர் ஸ்ரீ வைஷ்ணவர் அனைவரும் ஸ்ரீ ஆளவந்தாரைத் தெண்டனிட்டு அந்த மாசற்ற மங்களத் திருவுருவை மனத்திலும் கண்ணிலும் தேக்கியவர்களாய்ச் சூழவிருந்தனர். “திருப்பல்லாண்டு” “கண்ணிநுண் சிறுத்தாம்பு,” “சூழ்விசும் பணிமுகில்” இப்பதிகங்களைத் திருவரங்கப் பெருமாளரையர் இயலுமிசையுமாக அநுசந்தித்தார்.

பின்பு எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும், பாட்டும், நடனமும் வாத்தியங்களும் முன்னேயாக, “திருவிருத்தம்” என்னும் பிரபந்தத்தை இயலாக ஸேவித்துத் திருவீதியை வலம்வந்து திருவாசலிலே சாற்றுமுறையும் செய்தனர். அப்பால் ஸ்ரீ ஆளவந்தார் திருமேனிக்குத் தைலம், சுண்ணம் இவைசாத்தித் திருமஞ்சனம் செய்வித்து, திருமண்காப்பிட்டுப் பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டதான பரிவட்டம், மாலை, சந்தனம் இவற்றை ஆளவந்தார் திருவுருவத்திற்கு அணிவித்தனர். ஸ்ரீ ஆளவந்தாருக்குச் சாத்ினதுபோக எஞ்சிய தைலம் சூர்ண மிவற்றைத் திருவரங்கப்பெருமாளரையர் முதலிய முதலிகளும் மற்றைய ஸ்ரீ வைஷ்ணவர்களும் பிரஸாதமாக ஒவ்வொருவரும் அணிந்துகொண்டனர்.

(தொடரும்)

கடலூர்:—பாடலேசுவரர் கோயிலில் திருநாவுக்கரசு சுவாமிகள் விழா.
பழனி:—தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் தைப்பூச விழா.
திருநீர்மலை:—அரங்கநாத சுவாமி கோயிலில் திருப்படி திருவிழா.
சுசீந்திரம்:—தாணுமாலயமூர்த்தி கோயிலில் மார்கழித் திருவிழா.
குற்றாலம்:—திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் திருவாதிரைத் திருவிழா.
பேரூர்:—பட்டீசுவரர் கோயிலில் மார்கழித் திருவாதிரை விழா.
சங்கரராமநல்லூர்:—தாண்டவேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம்.
மதுரை:—கூடலழகப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

திருப்பாவை ஆராய்ச்சி

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M.A., M.O.L., Ph.D. அவர்கள்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆயின், சங்ககாலத்துக்குப் பிற்பட்ட மணிவாசகர் பாடிய திருவெம்பாவையிலும், ஆண்டாள் பாடிய திருப்பாவையிலும் மணமாகாத பருவமடைந்த பெண்களே இம் மார்கழி நீராடலில் சிறப்பாகக் கலந்துகொண்டனர் என்பது, அப் பாடல்களால் நன்கு தெரிவாகும். அப்பாடல்களில் திருப்பாவைப் பாடல்கள் கண்ணனையே கணவனாக வேண்டிப் பாடப் பெற்றவை. திருவெம்பாவைப் பாடல்கள் சிவனடியாரைக் கணவராய்ப் பெறப் பாடப்பட்டவை. இரு பாடல்களும் மழை வளத்தைப் பொதுவாய் வேண்டுகின்றன.

முதலில் மழை வளத்தை வேண்டிச் செய்யப் பெற்ற மார்கழி நோன்பு, பின் நூற்றாண்டுகளில் நல்ல கணவர் வேண்டும் என்னும் நோக்கத்தோடு பின்பற்றப்பட்டது என்பது இதனால் நன்கு தெரிகிறது.

இங்ஙனம் பெண்களால் கொண்டாடப் பெறும் இந்நோன்பு வேதங்களில் காணப் பெறாதது—தொன்று தொட்டு மக்களால் பின்பற்றப்பட்டுவரும் நோன்புகளுள் ஒன்று என்பது சான்றோர் கருத்து. பாகவதத்தில் தசமஸ்கந்தம் 22-ம் பகுதியில் இந்நோன்பு பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள. "கோகுலத்துப் பெண்கள் மார்கழியில் காத்யாயனி (சக்தி) வழிபாடாக நோன்பினைத் தொடங்கி நடத்தினர்; வைகறையில் எழுந்து யமுனையில் நீராடினர். ஈர நுண்மணலால் காத்யாயனி அம்மனது உருவத்தைச் சமைத்துச் சந்தனம், மலர், புகை, தளிர், பழம் முதலியவற்றால் அவ்வம்மனை வழிபட்டனர்: கண்ணனைத் தங்கட்கு மணாளனாகத் தரவேண்டுமென்று வேண்டினர்: இங்ஙனம் ஒரு திங்கள் முழுமையும் நோன்பியற்றினர். அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் தங்கள் தோழிகளின் பெயர்களைச் சொல்லி அழைத்துக் கையைக் கோத்துக் கொண்டு கண்ணன் பற்றிய பாக்களைப் பாடி நடந்துசென்று, அவன் புகழைப் பாடிக் கொண்டே நீராடினர்," என்பது பாகவதச் செய்தியாகும்.

அம்மன் உருவம் சமைக்கப் பெற்று உருவ வழிபாடு நடைபெற்றமை புலனாகின்றது. பாவையை வைத்து வழிபடுதல் பற்றி இது பாவை நோன்பு எனப்பட்டது! "பாவாய்" 'எம்பாவாய்' என்று விளிக்கப் பெற்ற சிறப்புப்பற்றி முறையே ஆண்டாள் பாக்கள் திருப்பாவை என்றும், மணிவாசகர் பாக்கள் திருவெம்பாவை என்றும் பெயர் பெற்றன.

திருப்பாவைப் பாடல்கள் முப்பது. பாவை நோன்பு வைகறையில் நிகழ்த்தப் படுவது. வைகறையில் நீராடி அம்மனுக்கு வழிபாடு இயற்ற எண்ணிய பெண்களுள் முதலில் விழித்தவர்கள் ஒன்றுகூடி, உறங்கும் ஒவ்வொரு பெண்ணின் இல்லத்துக்கும் சென்று நீராடுதற்குரிய நேரம் நெருங்கி விட்டதை அல்லது நேரமாகிவிட்டதை, உணர்த்தி, உறங்கும் பெண்களை எழுப்பும் முறையில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. அதனால் இவற்றில் வைகறை நிகழ்ச்சிகள், நோன்பு நோற்கும் முறை, நோன்பின் பயன், அப்பெண்களின் அணிவகைகள் முதலியன பேசப்படுகின்றன. திருப்பாவையிற் கண்ணன் வரலாற்று நிகழ்ச்சிகள் பலவும் ஆயர்பாடிச் சிறுமிகள் கூறுவதாக ஆண்டாள் கூறியுள்ளார். கண்ணனைக் குறிக்கும் சொற்களும் தொடர்களும் இப்பாடல்களில் மலிந்துள்ளன. இப்பாடல்களிலிருந்து ஆண்டாள் காலத்துத் தமிழகத்துப் பழக்க வழக்கங்களும் அணிவகைகளும் பிறவும் நன்கறியலாம்.

வைகறை நிகழ்ச்சிகள்

வைகறையில் பறவைகள் தம் உறக்கத்தை விட்டு எழுந்து இறகுகளை அடித்துக்கொண்டன. (5) கீழ்வானம் வெளுத்தது. எருமைகள் எழுந்து சிறிது புல் மேய அசைந்தன. (8) கோழிகள் கூவின. முல்லைக் கொடி படர்ந்த பந்தல்மீது குயில்கள் இருந்து கூவின. (18) ஆய்ச்சியர் தம்

கையணிகளைக் கலகலவென ஓசை செய்ய மத்தினால் தயிர்கடையத் தொடங்கினர். (17) திருமால் கோவிலில் வைகறைப் பூசைக்கு அறிகுறியாகச் சங்கின் ஓசை கேட்டது. முனிவர்களும், துறவிகளும் எழுந்து திருமாலின் திருப் பெயராகிய 'அரி' என்பதை உருவேற்றினர். (6) செங்கல் பொடி நிறத்தில் உடை (காவியுடை) உடுத்தியிருந்த பெரியோர்கள் பெருமாள் கோவிலில் சங்கொலி செய்யச் சென்றனர்; அப்பொழுது வீட்டுத் தோட்டத்தில் இருந்த செய்குளத்தில் அல்லி மலர்கள் குவிந்தன; செங்கழுநீர் மலர்கள் மலரத்தொடங்கின. (16)

நோன்பு முறை

நோன்பை நோற்ற பெண்கள் வைகறையில் பனி நீரில் உடல் குளிரக் குடைந்து நீராடினர்; (13) புதிய ஆடைகளை உடுத்தனர்; சூடகம், முதலிய அணிகளை அணிந்து கொண்டனர். அம்மனைப் போன்ற பாவை செய்து மலர் முதலியவற்றால் அலங்கரித்துப் பாற்சோறு படைத்து உண்டனர். (27) அவர்கள் நோன்புக் காலத்தில் தம் கண்களுக்கு மையிட்டிலர்; மலரிட்டுக் கூந்தலை முடித்திலர்; கோள் முதலிய தீயவற்றைப் பேசவில்லை. (2) அப்பெண்கள் தூய உள்ளத்துடன் அம்மனின் சிறப்புக்களைப் பாடி மனத்தினால் எண்ணி வழிபட்டனர்; தம் குற்றங்கள் தீயினில் தூசாகும் என்று நம்பினர்.

"கோவிந்தா, உனது உறவு எங்களை நீங்கலாகாது. நாங்கள் அறியாத பிள்ளைகள். உன்னைப் பெயரிட்டு அழைத்ததற்காக எங்கள்மீது சீறலாகாது. எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் நாங்கள் உனக்கு உற்றவர்கள் ஆவோம்; உனக்கே ஆட்செய்வோம். எங்கள் விருப்பத்தைக் கெடுக்காதே", என்று வேண்டினர் (28, 29). அப் பெண்கள் இவ் வேண்டுகோளுடன் மழை வளத்தையும் கொடுக்க வேண்டினர்; "மாதம் மும்மாரி பெய்ய வேண்டும், செந்நெற் பயிர்கள் செழித்தோங்க வேண்டும்; பசுக்கள் குடம் நிறையப் பால் தரவேண்டும்". (3) என்று வேண்டினர்.

அணிகள்

காசு என்பது ஒரு பொன் நாணயத்தின் பெயர். அப் பல காசுகள் கோத்த மாலை காசு மாலை எனப்படும். ஆய்ச்சியர் அம் மாலைகளை அணிந்திருந்தனர் (7). பெண்கள் கை வளையல்கள் (18), தோள் வளை, சூடகம், தோடு என்னும் காதணி, கண்ணப்பூ என்னும் செவிப்பூ, பாடகம் என்றாற் போன்ற பல நகைகளை (27) அணிந்திருந்தனர். தோள் வளையை இக்கால வங்கி என்னலாம். பாடகம் என்பது மகளிர் காலணி. "பாடகத் தாமரைச் சீறடி பணிந்து" என்பது மணிமேகலை (25,85). சூடகம் என்பது ஒரு வகைக் கைவளையின் பெயர். "பாடகத் தரவமும் சூடகத்து ஓசையும்" என்பது பெருங்கதை (12, 210).

சிறப்புச் செய்திகள்

(1) "உங்கள் புழைக்கடைத்
தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து
ஆம்பல்வாய் கூம்பினகாண்"

என்பன கவனிக்கத்தக்கவை. வீட்டுத் தோட்டத்தில் இருந்த சிறு குளத்தில் செங்கழுநீர் மலர்களும் ஆம்பல் மலர்களும் இருந்தன என்பது இவ்வரிகளால் தெரிகிறது. வீட்டுத் தோட்டத்தில் இவை கிணற்றில் இருத்தல் இயலாது; சிறிய செய்குளத்தில் இருத்தலே இயலும். ஒவ்வொரு வளமனையின் தோட்டத்திலும் இத்தகைய செய்குளம் ஒன்று பண்டைக் காலத்தில் இருந்தது என்பது அகப்பொருள் நூல்களால் அறியலாம். அச் செய்குளத்தைக் கொண்டே அல்ல குறி என்னும் துறை அகப்பொருள் இலக்கணத்தில் ஏற்பட்டது. திருவனந்தபுரத்தில் ஒவ்வொரு வளமனையின் தோட்டத்திலும் இத்தகைய செய்குளம் இன்றும் இருத்தல் இங்கு அறியத்தகும். 'வாவி' என்னும் சொல் தெலுங்கில் 'பாவி' என்று வழங்குகிறது. பாவி என்னும் தெலுங்கு மொழி கிணறு என்னும் பொருளில் வழங்குகிறது. கிணற்றில் செங்கழுநீரும் ஆம்பலும் இருந்து மலர்ந்ததை நாம் கண்டதில்லை.

(2) திருப்பாவையில் கண்ணனுக்கு உரிய மனைவியாகிய நப்பின்னைப்பிராட்டியே கூறப்படுகின்றாள். இப்பிராட்டி பாகவதம் முதலிய நூல்களில் கூறப்படாதவள். கண்ணன் ஏழு எருதுகளை அடக்கி நப்பின்னையை மணந்தான்.

(3) நந்தகோபன் இல்லம் கோயில் எனப்பட்டது. சங்க காலத்தில் இறைவன் இருப்பிடமும் அரசன் இருப்பிடமும் கோயில் என்றே பெயர் பெற்றன. அக் கோயிலுக்கு

வாயில் இருந்தது. வாயிலைக் காத்தவனே கோயில் காத்தவன் எனப்பட்டான். கோயிலின் வாயிலில் கொடியும் தோரணமும் கட்டப்பெற்றிருந்தன (16).

(4) வைகறைப் பொழுதில் திருமால் கோவிலில் வழிபாடு நடைபெறும். பெரியோர்கள் திருமாலுக்குப் பல்லாண்டு இசைத்தனர். இறைவன் அருள் உயிர்கள் மீது பல்லாண்டுகள் வாழ்க என்று பெரியோர் வாழ்த்துதல் பல்லாண்டு கூறுதல் எனப்படும். இவ்வழக்கம் ஆண்டாள் அம்மையார் காலத்திலும் இருந்தமை புலனாகிறது (26).

கண்ணன் பற்றிய சொற்களும் தொடர்களும்

நந்தகோபன் குமரன், யசோதை இளஞ் சிங்கம், நாராயணன்(1), பரமன்(2), உலகளந்த உத்தமன்(3), ஆழி மழைக்கண்ணன், பற்பநாபன்(4), மாயன், வடமதுரை மைந்தன், யமுனைத் துறைவன், ஆயர்குல மணிவிளக்கு, தாமோதரன்(5), அரி(6), நாராயணன், கேசவன்(7), மாவாய் பிளந்தான், தேவாதி தேவன்(8), மாமாயன், மாதவன், வைகுந்தன்(9), முகில்வண்ணன்(11), மனத்துக்கினியான்(12), புள்ளின்வாய் கீண்டான், மாயன், வல்லானைக் கொன்றான்(15), நந்தகோபாலன், எம்பெருமான், குலவிளக்கு, உம்பர் கோமான்(17), நப்பின்னை மணாளன் (19), விமலன்(20), ஊற்றமுடையான், பெரியான், பூவைப்பூவண்ணன்(23), நெடுமால்(25), மணிவண்ணன், கோலவிளக்கு (26), கோவிந்தன்(28).

திருமால் பற்றிய கதைகள்

உலகம் அளந்தது, இலங்கை வென்றது (24), கடல் கடைந்தது(30) முதலியன. கண்ணன் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகள் பல இப் பாடல்களுள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள்—சகடம் உதைத்தது, கன்று குணிலா வெறிந்தது — குன்று குடையா யெடுத்தது(24), ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளிந்து வளர்ந்தது, கஞ்சனை வென்றது(25) என்பன குறிக்கத்தக்கவை.

சுவைமிக்க பாடல்கள்

திருப்பாவைப் பாடல் ஒவ்வொன்றும் சுவையுடையது. அவற்றுள் மிக்க சுவையுடைய செய்யுட்களும் உண்டு. படிக்கும் பொழுதே பொருட்சுவைஉணர்த்தும் பாடல் வரிகள் பலவாகும். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க:

(1) "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாழ்திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ" (9)

"........................பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே"(10)

நீராட வருவதாக முதல் நாள் கூறிய பெண் தாம் அழைத்ததும் எழுந்திராமை கண்ட பிற பெண்கள், "கும்பகருணன் தான் இறந்தபொழுது தனது தூக்கத்தையெல்லாம் உனக்குக் கொடுத்துவிட்டானோ?" என்று கூறுதல் நகைச்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

(3) கோவலர் வளமனையின் வளத்தைக் கீழ்வரும் வரிகள் உணர்த்துதலைக் காண்க:

"கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறுக்கும் நற்செல்வன் தங்காய்"
(12)

15-ஆம் செய்யுள் பிற செய்யுட்களைப் போல எட்டு வரிகளையே கொண்டதாயினும், அதன் முதல் ஆறு வரிகளில் ஒருத்தியை எழுப்பச் சென்ற பெண்களுக்கும் எழுப்பப் பட்டவளுக்கும் நடந்த உரையாடல் அழகுற அமைந்துள்ளது கவனிக்கத்தகும். ஆண்டாளம்மையாரின் புலமைக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். இப்பா அடிகளை உரைநடை முறையிலேயே கீழே தருதும்:

பிற பெண்கள்: எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?
உறங்கியவள்: சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்.
பிற பெண்கள்: வல்லையுன் கட்டுரைகள். பண்டேயுன் வாயறிதும்.
உறங்கியவள்: வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக.
பிற பெண்கள்: ஒல்லை நீ போதராய் உனக்கென்ன வேறுடையை.
பிற பெண்கள்: எல்லாம் போந்தாரோ?
பிற பெண்கள்: ....போந்தார்போந் தெண்ணிக்கொள். (15)

(5) நீராடச் சென்ற மகளிர் நந்தகோபன் இல்லம் சென்று கண்ணனை எழுப்புவதாக அம்மையார் பாடியுள்ள செய்யுட்கள் (16-23) உயிரோட்டமும் மிக்க சுவையும் உள்ளவை. ஆயர் சிறுமியர் நந்தகோபனுடைய வளமனைக்குச் செல்லுதல், கதவைத் திறக்கும்படி அவ் வளமனையின் வாயில் காப்போனை வேண்டுதல், கண்ணனைத் துயிலெழுப்பத் தான் வந்ததாகக் கூறுதல், பின்பு கண்ணனை எழும்படி வேண்டுதல், அவனை எழுப்பும்படி யசோதையை வேண்டுதல், பலதேவனை வேண்டுதல், பின்பு கண்ணன் மனைவியான நப்பின்னையை வேண்டுதல், பின்பு கண்ணனையே விழிக்க வேண்டுதல் போன்ற பகுதிகள் படித்துப் படித்துச் சுவைத்தற் குரியவை.

கண்ணன் நப்பின்னையோடு உறங்கும் நிலையைக் கீழ்வரும் பாடல் (19) அடிகள் அழகுற அறிவிக்கின்றன.

> "குத்து விளக்கெரியக்
> கோட்டுக்கால் கட்டில்மேல்,
> மெத்தென்ற பஞ்ச
> சயனத்தின் மேலேறி,
> கொத்தலர் பூங்குழல்
> நப்பின்னை கொங்கைமேல்,
> வைத்துக் கிடந்த
> மலர்மார்பா வாய்திறவாய்".

ஆயர் சிறுமியர் கண்ணன் இருக்குமிடம் தேடி வந்தமைக்கு இரண்டு உவமைகளைப் பயன்படுத்தினர் என்று ஆண்டாள் கூறுதல் சுவையுடையது:

1. "கண்ணே, உனக்காற்றாத பகைவர் உன் வாசற்கண் வந்து உன் அடி பணியுமாறு போலே, உனது அருளை வேண்டி யாம் உன்னைப் போற்றிக்கொண்டு இங்கு வந்தோம்" (21)

2. உலகத்து அரசர்கள் நினது அன்பை வேண்டி நீ படுத்திருக்கும் கட்டிலின்கீழ்க் கூடியிருத்தல் போல, நின் அருளை வேண்டிச் சிறுமியராகிய நாங்கள் வந்து கூடியிருக்கிறோம் (22).

(6) தம் திருப்பாவைப் பாடல்களைப் பாடுவோர், திருமாலின் திருவருள் பெற்று இன்புறுவர் என்று திருப்பாவையின் இறுதிப்பாடலில் அம்மையார் தம் பெயரை வைத்துப் பாடியிருத்தல், அவர் திருமால் மீது கொண்ட அசையாத நம்பிக்கையையும், அவன் அருள் புரியும் உறுதிப்பாட்டையும் உணர்த்துவதாகும். அம் முத்திரைச் செய்யுளைக் கீழே காண்க:

> "வங்கக் கடல்கடைந்த
> மாதவனைக் கேசவனைத்
> திங்கள் திருமுகத்துச்
> சேயிழையார் சென்றிறைஞ்சி
> அங்கப் பறைகொண்ட
> வாற்றை, அணிபுதுவைப்
> பைங்கமலத் தண்தெரியல்
> பட்டர்பிரான் கோதைசொன்ன,
>
> சங்கத் தமிழ்மாலை
> முப்பதும் தப்பாமே,
> இங்கிப் பரிசுரைப்பார்
> ஈரிரண்டு மால்வரைத்தோள்,
> செங்கண் திருமுகத்துச்
> செல்வத் திருமாலால்,
> எங்கும் திருவருள்பெற்
> றின்புறுவர் எம்பாவாய்".

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

—:o:—

அவனிவணல்லூர்:—சாட்சிநாத சுவாமி கோயிலில் அமாவாசை ஏகதின விழாவில் சொற்பொழிவு.

திருவிடைமருதூர்:—மகாலிங்க சுவாமி கோயிலில் தைப்பூச விழாவில் திருமுறைச் சொற்பொழிவுகள்.

ஒப்பிலியப்பன் கோயில்:—ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயிலில் தெப்ப மகோற்சவம்.

அம்பா சமுத்திரம்:—கிருஷ்ணசுவாமி தொகுதிக் கோயில்களில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா.

சந்தைப்பேட்டை, குடியேற்றம்:—சீதாராம ஆஞ்சநேய சுவாமி கோயிலில் ஸ்ரீரதசப்தமி மகோற்சவம்.

திருக்கோயில்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L., அவர்கள்)

கோயில் என்றுமட்டும் கூறினால் சைவத்தில் சிதம்பரமும் வைணவத்தில் திருவரங்கமும் என்று குறிப்பிடுவார்கள். ஆனால் திருக்கோயில் என்றால் எல்லாத் தலக் கோயில்களுக்கும் பொதுவாகக் குறிப்பார்கள். ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு அச்சொல் வழங்குவதில்லை. மிகச் சிறந்த கோயிலுக்கே அடைமொழி யில்லாமல் ஒரு பெயரை வழங்குவது உண்டு. வெளிநாடுகளிலும் வெளிச் சமயங்களிலும் இந்த வழக்கம் இருக்கிறது. யூதர்களிடையே எருசலேமில் மிகப் பெரிய கோயிலுக்குக் கோயில் (The Temple) என்று அடைமொழி இல்லாமல் பல ஆயிரம் ஆண்டுகளாக வழங்கி வந்திருக்கிறார்கள். அதைப்போல் நமது நாட்டில் வழங்கி வந்ததைக் குறித்தோம். இனித் 'திருக்கோயில்' என்ற பெயர் யாதொரு அடைமொழியும் இல்லாமல் ஒரு புனிதத் தலக்கோயிலுக்குத் தமிழ் நாட்டில் வழங்கிவந்தது கிடையாது. ஆனால் ஈழ நாடாகிய இலங்கையில் 'திருக் கோயில்' என்று அடைமொழி இல்லாமல் ஒரு புனிதத்தலம் இருக்கின்றது. அதில் உள்ள புகழ்பெற்ற கோயில் ஒரு முருகன் கோயில் ஆகும். அது திருக்கோயில் என்றே வழங்குகிறது. அந்தச் செய்தி தென்னாட்டுத் தமிழ் மக்களுக்கு வெகுவாகத் தெரியாது. ஆகையால் ஒரு சிறிது அதனை இங்கே விவரிப்போம்.

ஈழ நாடாகிய இலங்கையில் வடபகுதியும் கீழ்ப்பகுதியும் தமிழ் மக்கள் சென்ற மூவாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் நாடு. அதில் கீழ் மாகாணம் கிழக்குக்கடல் ஓரமாக முல்லைத்தீவு முதல் புத்துவில் வரையில் படர்ந்திருக்கும் நீண்ட நிலப்பகுதி. இந்த மாகாணத்திற்கு மட்டக்களப்பு என்ற நகரம் தலைமைநகர் ஆகும். இவ்வூருக்குச் செல்ல இருப்புப்பாதை வசதி உண்டு. இவ்வூர்தான் செந்தமிழ் அறிஞரும் இசை நூலாசிரியரும் ஆன விபுலானந்த அடிகள் சேவை செய்துவந்த இடம். இங்கே கோட்டை, பேட்டை, கல்லூரி, அரசியல் பகுதிகள், எல்லாம் உண்டு. இப்போதும் தமிழ்ப் புலமை மணக்கிறது. கடற்கரை ஓரமாக மணற்பாங்கில் சிவாநந்தர் கல்லூரி, விபுலானந்தர் ஆசிரமம், அடிகளார் சமாதி, முதலியவைகள் இருக்கின்றன. கல்லோடை தாண்டினதும் அகன்ற மணல் வெளியிலே சிவானந்தர் கல்லூரி கட்டப்பெற்றிருக்கிறது. கல்லோடை என்ற நீர்ப்பரப்பில் வெண்ணிலாவில் படகுகளில் மிதந்து சென்றால், அமைதியான நேரத்தில் நீரில் வாழுகின்ற நீரர மகளிர்பாடும் இன்னிசை வெகு இனிமையாகக் கேட்கின்றதாம். இதனை அற்புதமாக அடிகள் தம் நூலில் வரைந்துள்ளார். இந்த அற்புதம் உலகிலே வேறெந்த நீர் நிலையிலும் இல்லையாம். (Singing Fish).

இனி மட்டக்களப்பை விட்டுத் தெற்கே கடலோரமாக உள்ள நெடுவழியில் சென்றால் காரைத்தீவு என்ற ஒரு செழிப்பான ஊரை அடையலாம். அதுதான் விபுலாலந்த அடிகள் பிறந்த ஊர். தற்போதும் அவர்களுடைய உறவினர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் கல்வி நிலையங்களை ஏற்படுத்திக்கொண்டு கல்விச் சேவைசெய்து வருகிறார்கள். இந்த ஊரில் கண்ணகி கோயில் ஒன்று இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் காணும் சிலம்பின் ஒலி இந்தத் தொலைவான ஊருக்கும் சென்றிருக்கிறது என்று மகிழவேண்டும். கடலோரம் முழுதும் தென்னை, வாழை, மா முதலிய அரிய மரச்சோலைகள் நிழலைத் தருகின்றன. மக்கள் செழிப்பாக வாழுகின்றார்கள்.

காரைத் தீவிலிருந்து கடலோரப் பெருவழி தெற்கே செல்லுகிறது. எங்கு பார்த்தாலும் ஓடைகளும் தோப்புகளும் காணலாம். இவ்வாறு செழிப்பான நீர்வசதிகள் திருக்கோயில் மட்டும் செல்லுகின்றன. திருக்கோயில் என்ற புனிதத்தலம் கடற்கரைத் தீரத்தில் இருக்கிறது. ஊர் சிறியது. தமிழ் மக்களே குடியிருக்கிறார்கள். ஊர் நடுவில் ஒரு சிறு அழகிய கோயில் இருக்கிறது. சிறிது காலத்திற்குமுன் கோயிலைப் புதுப்பிக்கப் 'பாலாலயம்' செய்து வைத்தார்கள். வேலை நின்று கிடக்கிறது. மூலஸ்தான

மூர்த்தி ஆறு திருமுகங்கள் கொண்ட முருகக் கடவுள். முருகன் மயில்வாகனரூடாராக இருக்கிறார். திருவுருவம் மிக அழகானது. ஊர்மக்கள் இக்கோயிலில் மிக அன்பு செலுத்தி ஆராதித்து வருகின்றனர். பெரும்பாலும் ஏழைக் குடிமக்களே வாழுகிறார்கள். முருகன் கலியுக வரதன் அல்லவா? இந்த ஏழை மக்களை வெகு கருணையோடு பாலித்து வருகின்றார்.

இவ்வூர்க் கடற்கரையிலிருந்து கிழக்கு நோக்கிப் பார்த்தால் நீலக்கடல் கண்ணுக் கெட்டாத தொலைவு மட்டும் எட்டியிருப்பதைக் கண்குளிரப் பார்க்கலாம். எதிரே நீலக் கடலிலே பெரிய நாவாய்கள் வடக்கே இருந்து தெற்கே செல்லுவதைப் பார்த்து ஆனந்திக்கலாம். சூரியன் கிரணங்கள் அலைகளின்மீது விழுந்து பலவகை வண்ணங்களைத் தெரிப்பதும் காணலாம். தெளிந்த கடற்காற்று மணற்றிடல்களின் மீது வீசி நமது முகங்களில் அடிப்பதை மகிழ்ச்சியோடு ஏற்கலாம். முருகன் அவ்வலைகள் வீசும் மெல்லிய காற்றைத் தன் பன்னிரண்டு திருக்கண்களாலும் பருகிக்கொண்டே இருக்கிறார். இந்தச் செழிப்பான தலத்துக் கோயிலை அடைமொழி இல்லாது 'திருக்கோயில்' என்று மக்கள் பெயரிட்டு அழைத்தால் அது ஒரு வியப்பே அன்று.

கோயிலைச் சுற்றிலும் உள்ள வீடுகள் குடிசைகள் என்றே கூறலாம். எளிய வீடுகள் என்றாலும் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் உழவுத் தொழிலைப் புரிந்துகொண்டு இறைவன் திருவருளால் இனிமையாகவே வாழுகிறார்கள்.

அந்தத் திருத்தலத்தைவிட்டு மீண்டும் தெற்கே சென்றால் செழுமை நீங்கி வறட்சி தோன்றுகிறது. முருகனை விட்டுப் போகின்றவர்களுக்குச் செழுமை இல்லை என்று அவ்வழி கூறுகிறதுபோலும். கடலோரம் மணலில் தாழை மட்டும் செழிப்பாக விளைகிறது. தாழம்பூ மலர்ந்து நல்ல மணம் வீசுகின்றது. காய்கள் பரஞ்சோதி முனிவர் கூறுகின்றாற் போல சிறு முழவுகள்போலத் தொங்குகின்றன. இவ்வழி நெடுகப்போனால் புத்துவில் என்ற ஓரூர் சேருகிறோம்.

புத்துவில் முதற்கொண்டு புத்தசமயிகளான சிங்களவர் வாழும் நாடாகக் காணலாம். அவ்வூரில் கடற்கரையோரம் ஒரு அழகிய அரசியல் பயணவிடுதி இருக்கிறது. தற்கால வசதிகள் எல்லாம் இங்கே உண்டு. ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு அருமையான இடம். காலை மாலைகள் கடற்கரைக் காற்றை அருந்திக்கொண்டு நாவாய்க் காட்சிகளைக் கண்டுகொண்டு அரிய உணவை அருந்திக் கொண்டு நாட்களை இனிமையாகக் கழிக்கலாம். வேண்டியபோது திருக்கோயில் சென்று முருகக் கடவுளைத் தரிசித்துவிட்டுத் திரும்பலாம்.

இவ்வூரைவிட்டுத் தென்மேற்கே சென்றால் கதிர்காமப் புனிதநாடு தென்படுகின்றது. அது புகழ்பெற்ற கதிரேசன் வாழும் நாடு. "வனமுறை வேடன் அருளிய பூசைமகிழ் கதிர்காமம்" உடையோனின் அருமை நாடு ஆகும். இவ்வூரிலிருந்து நெடுவழி மேற்கே திரும்பி மருத நிலத்தில் புகுந்து பிறகு குறிஞ்சி நிலம் ஏறுகிறது. வழிநெடுகக் கானல் பகுதிகளில் புகுந்து செல்கிறது. கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகளைக் காணலாம்; சிறிதுதொலைவு சென்றால் 'குட்டி யானை' என்ற இடத்தில் நிரம்ப யானைகள் பாதுகாக்கப்படுகின்றன. அவைகள் பழக்கப்பட்டு வனங்களில் வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றன. அங்கிருந்து நெடுந்தூரம் தெற்கே சென்றால் புனித இடமாகிய கதிர்காமத் தலத்தை அடையலாம்.

ஆகவே முருகக் கடவுள் திருவருள் பெற்ற திருக்கோயிலும், அங்கிருந்து காணும் கதிர்காமப் பிரதேசமும், ஒரே பயணத்தில் கண்டு வணங்கும் பெருமை நமக்குக் கிடைக்கவல்ல நல்லூழை நாம் பெறுவோமாக!

திருவாவடுதுறை:—கோமுத்தீசுவர சுவாமி கோயிலில் மகோற்சவம்.

பாமணி:—நாகநாத சுவாமி கோயிலில் முன் மண்டபம், அலுவலகக் கட்டிடம் இரண்டிற்கும் மன்னார்குடி முனிசிபல் சேர்மேன் திரு டி. பி. சிங்காரவேலு உடையார் அவர்கள் தலைமையில், தஞ்சை அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம். ஏ., அவர்கள் அடிக்கல் நாட்டு விழா நிகழ்த்தினார்கள்.

செட்டிகுளம்:—ஏகாம்பரேசுவர சுவாமி கோயிலில் தைப்பூச விழா நன்கு நடைபெற்றது.

அணுத்திருந் தன்மை இலையோன் காண்க

மாணிக்க வாசகர்

முன்னுரை :

இது திருவாசகத்தில் உள்ள 'திருவண்டப் பகுதி' என்னும் திருவகவலின்கண் ஒரு வரி (45) ஆகும். திருவாசகத்தினையே தம் உயிர் நூல் எனக் கொண்டு போற்றியவர் **இராமலிங்க அடிகள்.** அதன்கண் மிகவும் தனிப்பெருஞ் சிறப்பு உடையதாகத் 'திருவண்டப் பகுதி' என்னும் திருவகவலினையே அவர் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

"உருவண்டப் பெருமறைஎன்
றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதிஎனும்
திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவரும்
கூறுகின்ற கோவேநீ
இருவென்றத் தனியகவல்
எண்ணமெனக் கியம்புதியே"

எனவரும் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாச் செய்யுளால் இவ்வுண்மை இனிது தெளியப்படும்.

இறைவனின் நுண்மை :

இத்தகைய சிறப்பின் மிக்க 'திருவண்டப் பகுதி' அகவலின்கண் வரும் மேற்குறித்த வரியானது, மிகவும் பொருட் சிறப்பு உடையதொன்றாகும். இறைவனின் நுண்மைத் தன்மையினை விளக்குவது இவ்வரியின் கருத்து.

திருஞான சம்பந்தர் :

இறைவன் நுண்மையில் நுண்மையாகவும், பருமையிற் பருமையாகவும் இலங்குகின்றான். **"நுண்ணியான் பரியான் நோவுளார் வாயுளான்"** என இறைவனின் இயல்புகளைத் **திருஞான சம்பந்தர்** தமது தேவாரப் பாடல் ஒன்றில் விளக்குதல் காணலாம்.

அணுவின் நுண்மை.

நுண்ணிய பொருள்களில் எல்லாம் நுண்மை வாய்ந்தது அணு. அணுவின் நுண்மையினை இத்தகையதென வரையறுத்துக் கூறுதல், நம்மால் இயல்வதொன்றன்று. ஒரு குண்டூசியின் முனையில் எத்துணையோ கோடி அணுக்கள் அமைந்து கிடக்கின்றன. ஒரு நொடிக்கு நூறு கோடி விழுக்காடு அகற்றினாலும், ஒரு குண்டூசியின் முனையில் அமைந்து கிடக்கும் பரமாணுக்களை அகற்ற இரண்டரை லட்சம் ஆண்டுகள் செல்லும் என அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.* இவ்வாற்றால் அணுவின் நுண்ணிய தன்மை எத்தகைய நிலையினதாக இருத்தல் வேண்டும் என நாம் ஓரளவு எண்ணியுணரலாம்.

---

* "As regards the size of Atoms, it has been said that, if we were to remove those contained in the head of an ordinary pin at the rate of a thousand million (1000,000,000) per second, we should have to carry on the process for 250,000 years. And yet each of these atoms, they tell us, is itself a solar system, with electrons whirling like planets around a central nucleus.

The size of these electrons, as compared with the size of the atom, they say, is like a pea in one of the great cathedrals of Europe."

—Louis Leguen, S. J.

இத்துணை நுண்ணிய பரமாணுவைக் காட்டிலும், மிகமிக நுண்ணிய பொருளாக இறைவன் திகழுகின்ருன் என மாணிக்க வாசகர் கூறுகின்ருர். '**அணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத் தக்க நுட்பமானவன்**' என்பதே மேற் குறித்த வரியின் பொருள் ஆகும்.

பிறழ் பிரிப்பு :

பெரும்பாலான திருவாசகப் பதிப்புகளில் இவ்வரியானது மேற் குறித்துள்ள படியே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அங்ஙனமே கொள்வதாயின், இவ்வரியின் அமைப்பில் செய்யுட்குரிய மோனை அழகு, செவ்விதின் அமையாமற் சிதைந்து குறைந்து போகின்றது. அதனோடு, குறிக்கப்பெறும் பொருளும் தெளிவாக இல்லை.

முன்னோர்கள் பிரித்த முறையினின்றும் வழுவி வேறு வகையாகத் தொடர்களைப் பிரிப்பதனுல், சில சமயங்களில் தவருன புதிய சொற்கள் தோன்றி விடுவதும் உண்டு. அத் தவருன சொற்களே பின்னர் நாளடைவில் வழக்கில் வந்து நிலை பெற்று விடுதலும் இயல்பு. இவ் வியல்பு எல்லா மொழிகளிலும் பொதுவாகக் காணப்படும் ஒரு பண்பு ஆகும். a+napron என்பது an+apron என்றும், a+numpire என்பது an+umpire என்றும், a+naddre என்பது an+adder என்றும் தவருகப் பிரிக்கப்பட்டு, அங்ஙனமே ஆங்கில மொழி வழக்கில் நிலை பெற்றுவிட் டுள்ளன. இங்ஙனம் தவருகப் பிரிப்பதனைப் 'பிறழ் பிரிப்பு' (Metanalysis) என அறிஞர் வழங்குவர்*.

தமிழில் எடுத்துக்காட்டு :

தமிழில் '**வானுள்**' என்பதனை **வாழ்+நாள்** எனப் பிரிப்பது போல' '**வீனுள்**' என்பதனை '**வீழ்+நாள்**' எனப் பிரிக்காமல் '**வீண்+நாள்**' எனத் தவருகப் பிரித்ததன் விளைவாகவே '**வீண்**' என்ற ஒரு புதிய சொல் தவருகத் தோன்றி வழக்கிற்புகலாயிற்று. மிகப் பழைய தமிழ் நூல்களில் 'வீண்' என்ற சொல்லாட்சியைக் காண்டல் அரிது. அச் சொல்லின் பொருளில் '**வறிதே**' '**கொன்னே**' '**பயனின்றி**' என்னும் சொற்களே வழங்கப்பெற்று வந்தன.

'**வீழ்நாள் படாஅமை நற்ருற்றின் அஃதொருவன்**
வாழ்நாள் வழியடைக்குங் கல்'

என வரும் **திருக்குறள்** தானும் ஈண்டு அறிந்து இன்புறற் பாலது. எனவே, 'வீனுள்' என்பதனை வீண்+நாள் என்று தவருகப் பிரித்தமை 'பிறழ் பிரிப்பு' (Metanalysis) முறைக்கு உதாரணம்.

'ஐயோன்' என்பதன் பொருள் :

இத்தகையதொரு பிறழ்பிரிப்பு முறையிலேயே மேலைத் திருவாசகவரி அமைந்துள்ளது. அதனை '**அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க**' எனவே கொள்ளுதல் வேண்டும். 'தன்மையில் + ஐயோன்' என்று பிரிக்கப்படுதற்குரிய தொடர், 'தன்மை+ இலேயோன்' என்று பிறழ்பிரிப்பாகப் பிரித்துப் பதிக்கப் பெற்றுள்ளது. '**ஐ வியப்பு ஆகும்.**' என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி, '**ஐயோன்**' எனின், வியக்கத்தக்க நுட்பம் மிக்கவன் எனப்பொருள்.

சிறந்த திருவாசகச் செய்யுள் :

இறைவன் வியக்கத் தக்க நுட்பப் பொருளாகத் திகழ்பவன் என்பதனை,

" இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை, நினைப்பற நினைந்தேன்;
நீயலாற் பிறிதுமற் றின்மை;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் [தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை அன்றிஒன் றில்லை!
யார்உனை அறியகிற் பாரே?"

எனவரும் சிறந்த திருவாசகப் பாடலில் **மாணிக்கவாசகர்** அழகுற விளக்குகின்ருர்.

முடிவுரை :

இவ்வருமைத் திருப்பாடலின்கண், '**சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்** திருப்பெருந் துறையுறை சிவன்' என இறைவனின் நுண்மைத் தன்மையினை, அவர் விதந்து வியந்து அருளிச் செய்திருத்தல் அறிதற்குரியது.

இவ்வாற்ருல் மேற்குறித்த திருவாசக வரியின் உண்மையுருவமும் பொருளும் இனையதென்று யாவரும் இனிதுணரலாம்.

---

* "I have ventured to coin the term 'metanalysis" by which I mean that words or word-groups are by a new generation analysed differently from the analysis of a former age." —Otto Jespersen, Language.

சிவஞானபோதம்

[திரு க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆருஞ் சூத்திரம்

உணர்உரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே

என்பது சூத்திரம்.

ஆன்மாவால் அறிந்துவரும் ஐம்பொறிகள் தம்மையும் அவ்வான்மாவையும் அறிவதில்லை; அதுபோல, தம் உணர்வின்றமியால் உணர்ந்துவரும் ஆன்மா அவ் வுணர்வின்றமியை உணரமாட்டாது- என மேலைச் சூத்திரத்து அறிவுறுக்கப்பட்டது. அதுபற்றிப் பின்வருமாறு வினு எழும்: தம்முணர்வின்றமி எனப்பட்ட முதற்பொருள் எவ்வாற்ருனும் உணரப் படாத பொருள்தானே? ஆம் எனின், அப் பொருள் உண்டு என்பதற்குப் பிரமாணம் யாது?

இவ் வாருஞ் சூத்திரம் இவ்வினக் களுக்கு விடை கூறுகிறது. கூறுமுகத் தால், சத்தென்று ஓதப்படும் முதற்பொருளியல்பையும், அதற்கு வேருய் அசத்தெனப்படும் காரியவுலகின் இயல்பையும் வரையறுத்து உணர்த்துதல் இதன் கருத்து. இதனுல் சத்து, அசத்து என்பவற்றின் வேருய், அவற்றை அறியும் இயல்புள்ள ஆன்மாவின் சிறப்பியல்பைப் பின் தெரிவித்தற்குத் தோற்றுவாயும் செய்யப்படுகின்றது.

சூத்திரத்தின் பிண்டப் பொருள்: மேலைச் சூத்திரத்துத் தம்முணர்வின்றமி எனப் பட்ட முதற்பொருளை அளவை அறிவால் அறியப்படுவது எனக்கொண்டால், அஃது அவ்வாறு அறியப்படும் உலகப்பொருள் களுள் ஒன்ருய், அசத்து எனப்படும் அழி பொருளாய் முடியும்; பின், எவ்வாற்ருனும் உணரப்படாதது முயற் கோடு முதலியனபோல இல்பொருளே யாகும். மற்றென்னையோ விடுக்குமாறெனின் மேற்கூறிய இருவகையும் அன்றி, அளவையான் அறியப்படாமை பற்றிச் சித்துப் பொருள் ஆம்; வேருேராற்ருன் உணர்ந்தனுபவிக்கப் படுதல்பற்றிச் சத்து ஆம் ஆகலின், இங்ஙனம் சித்தெனவும் சத்தெனவும் துணியப்படுதலால், முதற்பொருளைச் சிவசத்து (சித்துச்சத்து) எனக்கூறுவர் மெய்யுணர்வின் நிலைபெற்று உயர்ந்தோர் என விடுக்க என்றபடி.

ஆன்மாவிற்கு உடம்பும், உடம்பினுட் கருவிகளும் கூடி விளக்குதல் பற்றி அறிவு விளங்குகின்றது. இவ்வறிவு மனம் முதலிய கருவிகளால் பொருள்களைத் தலைப்பட்டறியும் காட்சியறிவு, குறிகளால் உய்த்துணரும் கருதல் அறிவு, தக்கார் வாய்ச்சொல் கொண்டுணரும் கேள்வி அறிவு எனப் பொதுவாக மூவகைப்படும். இவ்வறிவே அளவையறிவு எனப்பட்டது. இங்கு அளவை எனப்பட்ட கருவியாகிய மனம் முதலிய பொறிகளும், குறிகளும், உரையும் பாசம் எனப்படும். படுதலின், பாசத்தால் விளங்கும் அவ்வறிவு, **பாச அறிவு** எனப்படும்.

இனி இப்பாசங்களை, 'இது யானல்லேன், இது யானல்லேன்' எனச் சுட்டி, அவை தன்னின் வேருதல் கண்டு தன்னை உணர்வோர், ஆண்டு யான் எனது என்னும் செருக்கு முற்றும் கெடாமையால், யானே முதற்பொருள் (அகம் பிரம்மாஸ்மி) எனவும், யான் முதற்பொருள் இயற்றக்கூடிய எல்லாம் செய்யவல்லேன் எனவும் உணர்வர். பசுத்துவம் எனப்படும் மலவாதனைபற்றி இங்ஙனம் உணரும் உணர்வு **பசு உணர்வு** எனப்படும். முதற்பொருள் பாச அறிவு, பசு அறிவு என்னும் இரண்டாலும் பற்றப்படாது; இவ்விரு வகை அறிவாற் பற்றப்படும் பொருளெல்

லாம் அறிவில் பொருளாய், அழிந்துபடுவன என்பதுபற்றி "உணர்உரு எனின், அசத்து" எனப்பட்டது. முதற்பொருள் இவ்விருவகை அறிவின் விருத்திகளைக் கடந்து நிற்றல்பற்றிச் சிவம் எனப்படும். சிவம் என்றது இங்குச் சித்து, அறிவுருவாயது என்னும் பொருளைத் தரும்.

விளக்கின் சுடரைக் காணும் கண் பிறிதொரு பொருளை அவாவாது அச் சுடரினின்று விரிந்துபாயும் கதிரின் உதவியாலே சுடரைக் காணுதல்போல, முதற்பொருளின் பண்பாக உள்ள அருளொளியே காட்டாக உணரப்படுவதே அம் முதற்பொருள். அருளொளி சிவஞானம் எனப்படும். இங்ஙனம் சிவஞானம் கண்ணாக உணரும் மெய்யுணர்வு சிவஞானம் எனப்படும். முதற்பொருள் பசுபாச ஞானங்களாற் பற்றப்படாமல் அப்பாற்பட்டு நிற்பினும், சிவஞானம் பெற்றோரால் ஒற்றுமைப்பட்டு நின்று மாறுபாடு இல்லாத பேரின்பப் பொருளாய் அனுபவிக்க வருதல்பற்றிச் சத்து எனப்பட்டது. முதற்பொருளைச் சத்தென வழங்குதல் உபநிடத வழக்கு. சத்தென்னும் சொல் என்றும் ஒருபடித்தாக உள்ளது, மாறுதல் இல்லது எனப் பொருள்படும். தமிழ் மொழியில் செம்பொருள், உள்ளது, மெய் என்னும் சொற்கள் சத்தென்னும் சொல்லின் பரியாயமாய் வழங்கப்பட்டுள்ளன. 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்து,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் [சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு"

எனவும்,

"ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு"

எனவும் பொதுமறையிற் போந்தமை காண்க.

"செம்பொருள் ஒன்றே; அதனை அறிஞர் பலவாறு கூறுப" (ஏகம் ஸத் விப்ரா: பஹுதா வதந்தி) எனவும், "ஏ நல்லோய்! இதற்குமுன் செம்பொருளே இருந்தது: ஒன்றே இருமையின் ஒருமையுள்ள பெரும்பொருள் (ஆய் இருந்தது) [ஸதேவ ஸோம்யேதம்க்ர ஆஸீத்; ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்ம] எனவும், வரும் சுருதிகளில் உள்ள ஸத் என்னும் சொற்பொருளைத் துணிந்துணரவைப்பது, இச் சூத்திரத்தின் நோக்கு. அச்சொல்லை முதற்பொருளைக் குறிப்பதாகக் கொள்ளாமல், சொற்பொருட்காரணம் ஒன்றே பற்றி இருப்பு (Existence) எனப் பண்புப் பெயராகக் கொண்டு, ஒருபொருட் கொள்கையைச் சாதிப்பர் சங்கரர் முதலாயினோர்.

முதற்பொருளின் தன்னியல்பாவது தன்வயமுடைமை முதலாகக் கூறப்படும் எண்குணங்களை உடைமை. அவ் வெண் குணங்களும் சித்தாதல், செம்பொருளாதல் என்னும் இரண்டனுள் அடங்கும் என்பதுபற்றிச் "சிவசத்தாம் என இசைக்கும் மன்உலகே" என்றனர் ஆசிரியர். இச் சூத்திரம், முதற்பொருள் சித்துச்சத்தாவது என அதற்குச் சிறப்பியல்பு கூறிற்று. பொதுவியல்பு 2-ஆம் சூத்திரத்துப்பெறப் பட்டது.

"உணர்உரு எனின் அசத்து" என்பது ஓர் அதிகரணம், "உணராது (எனின்) இன்மையின்" என்பது ஓர் அதிகரணம், "இருதிறன் (உம்) அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் (உம்) இசைக்கும் மன்உலகே" என்பது ஓர் அதிகரணம்: ஆக முக்கூற்றது இச் சூத்திரம். [குறிப்பு: மெய்கண்டதேவர் "உணராதின்மையின்" என்பதை வேறு அதிகரணமாக வைத்து விரித்துரைக்கவில்லை.]

முதல் அதிகரணம்

1. சூத்திரப்பகுதி: உணர்உரு அசத்து எனின்."

2. வார்த்திகம்: ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்தென்றது, அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

[அளவை அறிவிற்கு விடயமாய் அனுபவப்படும் பொருளெல்லாம், உண்டு என்று உணரும் உணர்விற்கு இடனாய் நின்றே இன்றென்னும் உணர்வுக்கும் இடனாதலின், அசத்து என முடிக்கப்படும்; அன்றியும், அப்பொருள்கள் காரிய நிலையிற் புலப்படும் உருவுடையவையாய் நின்றே, காரணநிலையில் சத்தி சமூகமாய்ப் புலப்படாத அருநிலை எய்துவனவாய்

இருத்தலின், சுட்டியுணரப்படும் அக்காரியப் பொருள்கள் அசத்தெனப்படும்.]

3. (அ) இங்குத் தன்னுற் கூறப்படும் பொருள்:

அறிவினுல் அறிந்த யாவும் அழிபொருளாய் அசத்தெனப்படும்; அவை அசித்தாம் என்பதும் உணரத்தக்கது.

(ஆ) பிறர் கூறும் பக்கம்:

(i) உலகம் அறியப்படுவதுபோல முதற்பொருளும் அனுமானம் முதலிய அளவைகளான் உணரப்படுபொருள் என்றலே சால்புடைத்து. ஆதலால் உலகை அசத்தெனல் வேண்டா. இங்ஙனம் கூறுவோர் தார்க்கிகர்.

(ii) சற்காரியக் கொள்கைபற்றி எல்லாப் பொருளும் என்றும் உள்ளவையேயாதலின், அளவையினுல் அறியப்படும் பொருளும் சத்தேயாம்; அவற்றை அசத்தென்றல் நும் அடிப்படைக் கொள்கைக்கே முரணும். இங்ஙனம் கூறுவோர் சாங்கியர்.

(இ) மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:—

(i) குடம் முதலிய உலகத்துப் பொருள்கள் நம் புத்தியின் விருத்திக்கு அனுபவமாய் உணரவருதல்போல முதல்வனும் உணரப்படுபொருளே எனின், அவற்றைப்போலவே அவனும் தோற்றம் நிலை இறுதி என்னும் நிலைவேறுபாடு உடையனுய் அசத்தே ஆவன். தோன்றுதல்போல மறைதலும் உலகப் பொருளின் பெற்றியே என உணர்க.

அசத்தின் இயல்பை உணர்ந்தாயாயின் நீ இவ்வாறு பிணங்காய்; மனம் ஒருங்கிக் கேள்! உண்டு என்னும் உணர்வைப் பயப்பனவாய் அறியப்பட்ட பொருள் எல்லாம், பின் மறைந்து இன்றென்னும் உணர்வுக்கு விடயமாதலை ஊன்றி உணர். சத்தின் இயல்புணர்ந்தோர்க்கே அசத்தின் இயல்பும் உணரவரும். சத்தின் இயல்பை உணர்ந்தோர் அறிவினுல் அறிந்த யாவும் அசத்தாம் எனவே உணர்வர். இன்மை (சுபாவம்) என்பது உள்பொருளின் பெற்றியே யன்றி, அஃது ஒருதனிப் பொருள் அன்று.

**"அசத்தறியாய் கேள்நீ அறிவறிந்த எல்லாம்
அசத்தாகும் மெய்கண்டான் ஆயின்"**

இது தார்க்கிகனை மறுத்தது.

(ii) சற்காரியம்பற்றி எல்லாப் பொருளும் என்றும் உள்ளனவேயாயினும், அறியப்படுபொருள் எல்லாம் இராசதகுணத்தாற் பருநிலையிற் புலப்பட்டு நின்று, பின் தாமதகுணத்தால் உருக்குலைந்து சத்திரூபமாய் அருவாய் மறையும் என்பது உனக்கு உடன்பாடன்றே! அவ்வாறு மாற்றம் எய்துதல்பற்றிக் காரியப் பொருளெல்லாம் அசத்து எனப்படும். அம் மாற்றத்திற்கு உவமைகள் கனவும், நீரில் எழுத்தும், கானல்நீரும் எனக்கொள்.

**"—அசத்தலாய்!
நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின்அவை இன்றுமா றொப்பு."**

அசத்தலாய்—என்றது அசற்காரியவாதியல்லாத அறிவுடையோனே எனச் சாங்கியனை விளித்தது. அவை இன்றுமாற்றிற்கு ஒப்பு ஓரின் நீரில் எழுத்து முதலியன—எனமுடிக்க. நீரில் எழுத்து முதலியவை அவ்வப்போது உள்ளனவே; ஆயினும் அவைநிலைத்து நில்லாது மறைந்துபோதல் பற்றி அசத்து எனப்படும். அசத்து என்றல்பற்றிச் சற்காரியக் கொள்கைக்கு இழுக்கு வந்துவிடவில்லை. "நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்—பெருமை யுடைத்திவ் வுலகு" என்னும் பொதுமறை உலகு நிலையாமையைத் தன்னியல்பாக வுடையது என வற்புறுத்துதல் காண்க.

நீரில் எழுத்து முதலிய மூன்றும் உள்பொருள்களே என்பது உணரத்தக்கது; உலகமும் அவற்றைப்போல உள்பொருளே. நீரில் எழுத்து எழுதும்போது உளதாய் உடனே மறையும். அதுபோல உலகத்துப் பொருள்களும் தோன்றும் போதே மறைவனவாய் உள்ளன. கனவு முடிவு பேறின்றி இடையே மறையும்; உலகப் பொருள்களும் அப்பெற்றியை உடையவையே. கானல் பாலைநிலத்து வெயிலின் கடுமையால் நீர்போலத் தோன்றி மேகபடலம் வெயிலை மறைத்தவுடன் தானும் மறையும்; அதுபோல உலகத்துப் பொருள்களும் ஒரு காரணம்

காட்டி மறையும். இவ்வாறு மூன்று உவமைகளுக்கும் வேறுவேறு பயன் கொள்க. உலகை அசத்து என்றல்பற்றி அதனை இல்பொருள், வெறுந்தோற்ற மாத்திரையே என்றல் குற்றம். நிலையாத உள்பொருள் என்பதே கருத்து.

இரண்டாம் அதிகரணம்

1. சூத்திரப்பகுதி: **உணராது இன்மை யின்**—ஒருவாற்றானும் உணரப்படாத பொருள் சூனியம் என்பது கருத்து.

இஃது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலால் மெய்கண்டதேவர் இதனை ஓர் விவாதக் கூறாக (Point at issue)க் கொண்டு வார்த்திகம் கூறிற்றிலர். ஆயினும், உணரப்படாத பொருளையும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு சத்து என்றால் இழுக்கு யாது என்பார்க்கு வழிநூலாசிரியர் (அருணந்தி சிவனார்) பின்வருமாறு விடுக்கின்றார்:—

"உணராத பொருள்சத் தென்னில்
ஒருபயன் இல்லை;தானும்
புணராது நாமும் சென்று
பொருந்துவ தின்றாம்;என்றும்
தணவாத கருமம் ஒன்றும்
தருவதும் இல்லை:வானத்
திணரார்பூந் தொடையும் ஆமைக்
கெழுமயிர்க் கயிறும் போலும்."

இதனால் முதல்வனை உண்டு எனக் கொள்ள வேண்டின், அவன் யாதேனும் ஒரு வகையில் நம் உணர்வில் விளங்கியே நிற்கவேண்டும்; அவ்வாறு அவனை உணருமாறு யாது என மெய்யுணர்ந்தார் அனுபவம் சார்பாகத் தலைநின்று உணர்தல் நம் கடன் என்பது குறிப்பிக்கப்பட்டது. இனி அடுத்துவரும் அதிகரணத்தால் அவனை உணர்தற்குரிய சுத்த நிலையின் இயல்பு கூறப்படுகின்றது.

"பாச அறிவிற் பசுஅறிவிற் பற்றற்
கரிய பரன்யாவன்?
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப்
பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசுஅறிவும் பாற்றி
மேலாம் அறிவான
தேசன் எவன்?அக் கணபதியைத் திகழச்
சரணம் அடைகின்றோம்!"

—விநாயக புராணம்.

(தொடரும்)

கல்லிடைக்குறிச்சி: மானேந்தியப்பர் கோயிலில் இரத சப்தமித் திருவிழா.
நத்தம்: கைலாசநாதர் கோயிலில் பாவை மாநாடு.
ஆழ்வார்திருநகரி: ஆதிநாதர் ஆழ்வார் கோயிலில் பாவை விழா.
திருப்புடைமருதூர்: நறும்பூநாத சுவாமி கோயிலில் தைப்பூச விழா.
தொட்டியம்: அனலாடீசுவரர் கோயிலில் தைப்பூச விழா,
பண்பொழி: திருமலைக் குமாரசுவாமி கோயிலில் தைப்பூச விழா.
செம்பொன்னார் கோயில் மகாராஜபுரம்: சண்முக சுப்ரமண்யர் கோயிலில் தைப்பூச விழா.
மதுரை திருப்பரங்குன்றம்: சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெப்ப மகோற்சவம்.
மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் தெப்ப மகோற்சவம்.
திருவெண்காடு: சுவேதாரண்யேசுவர சுவாமி கோயிலில் இந்திர மகோற்சவம்.
திருச்சேறை: சாரநாதப் பெருமாள் கோயிலில் இராஜகோபுரத் திருப்பணித் துவக்க விழா.
தூத்துக்குடி: சங்கரராமேசுவரர் கோயிலில் அஷ்ட பந்தன இராஜகோபுர ஸ்தூபி கும்பாபிஷேக விழா.
சென்னை, நுங்கம்பாக்கம்: அகத்தீசுவரர் கோயிலில் லட்சார்ச்சனை விழா.
பேட்டவாய்த்தலை: மத்யார்ச்சுனேசுவரர் கோயிலில் தைப்பூச விழா.
தண்டலைச்சேரி: நீணெறிநாத சுவாமி கோயிலில் அரிவாட்டாய நாயனார் பக்தோற்சவம்.
கோபிசெட்டிபாளையம்: விசுவேசுவரர் கோயிலில் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா.
திருக்கடம்பந்துறை; தைப்பூச விழாவும் தீர்த்தவாரி உற்சவமும்

'எண் குணத்தான்'

முன்னுரை

"கோளில் பொறியிற் குணம் இலவே **எண்குணத்தான்** தாளை வணங்காத் தலை" எனவரும் திருக்குறளை யாவரும் அறிவர். அதன்கண் பயின்றுள்ள 'எண்குணத்தான்' என்னும் தொடர், ஆழ்ந்த சிறந்த பல பொருட் குறிப்புக்களை யுடையதாகத் திகழ்கின்றது. ஆராயுந்தொறும் ஆராயுந்தொறும், அஃது அரியபல பொருள்களை அடக்கிப் பொதிந்துகொண் டொளிர்தல் புலனாகின்றது.

"ஆழ்ந்து பெருநூல் இடைக்கிடந்த
அரிய பொருளைப் பலர்கவர
வாழ்ந்த கருத்திற் பேரறிஞர்
வகுத்து விளக்கும் வகைபோன்று,
வீழ்ந்த கருத்தின் நுளையர்குழாம்
வில்லிட் டிலகும் மணிபலவும்
தாழ்ந்த நெடுநீர்க் கடற்குளித்துத்
தடவுக் கரைஎங் கணும்நிரைப்பார்"

எனக் கச்சியப்ப முனிவர் கவின்பெறக் கூறுதல்போல, "எண் குணத்தான்" என்னும் இனிய தொடரை ஆராயத் தலைப்பட்டால், கடலிற் குளித்து முத்துக்களை எடுப்பார் போன்று, நாமும் பற்பல விழுமிய நல்ல பொருள்களைக் கண்டுணர்ந்து களிப்புறலாம்.

பரிமேலழகர்

உரையாசிரியர்களுள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய்ச் சிறந்து ஒளிரும் ஆசிரியர் பரிமேலழகர்,

"எண்குணங்களாவன: தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை யுணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது" என விளக்கம் கூறியருளினர்.

இவ் வெட்டுக் குணங்களையும் முறையே, 1. சுவதந்திரத்துவம், 2. விசுத்த தேகத்துவம், 3. அநாதிபோதம், 4. சர்வஞ்ஞத்துவம், 5 நிராமயத்துவம், 6. அலுப்தசக்தி, 7. அநந்தசக்தி, 8. திருப்தி என வடமொழி நூல்கள் விளக்கும்.

அட்டமா சித்திகள்

இனி, சிறியதிற் சிறியதாதல், பெரியதிற் பெரியதாதல், மிகத் திண்ணிய பொருளை மிக நொய்ய பொருள் ஆக்குதல், மிக நொய்ய பொருளை மிகத் திண்ணிய பொருள் ஆக்குதல், ஒரே சமயத்திற் பல இடங்களிலும் காணப்படுதல், வேறு உடலிற் புகுதல், முத்தொழில்களை நிகழ்த்தி ஆளுதல், அனைத்துயிரும் அனைத்துலகும் தன்வசமாகச் செய்தல் என்னும் எட்டு வகை ஆற்றல்களைப் பெறுதலையே "எண் குணத்தான்" என்னும் தொடர் குறிப்பதாகச் சிலர் கொள்வர். இவற்றை முறையே அணிமா மகிமா லகிமா கரிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என வடமொழியாளர் கூறுவர். இவைகள் "அட்டமா சித்திகள்" என வழங்கப்படும்.

ஆருகதர்கள்

அருகதேவனை வழிபடும் ஆருகதர்கள் (சமணர்கள்) 'எண்குணத்தான்' என்னும் இத் தொடருக்கே கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா ஆற்றல், கடையிலா இன்பம், பெயரின்மை, குடியின்மை, ஆயுவின்மை, அழிவின்மை என்னும் எட்டுக் குணங்களைப் பொருளாகக் கொள்வர். இவற்றை முறையே, 1. அநந்த ஞானம், 2. அநந்த தரிசனம், 3. அநந்த வீரியம், 4. அநந்த சுகம், 5. நிர்நாமம், 6. நிர்க் கோத்திரம், 7. நிர் ஆயுஷ்யம், 8. நிர்நாசம் என அவர்கள் வழங்குவர். இவ்வுரை விகற்பங்களும் ஆசிரியர் பரிமேலழகர் உரையின்கண் காட்டப் பெற்றுள்ளன.

வைணவர்கள்

இங்ஙனமே வைணவப் பெருமக்கள் தாம் வழிபடும் திருமாலுக்கு உரிய குணங்களை எட்டு எனக் கூறுவர். அவ் எண் குணங்கள் ஆவன பின்வருமாறு:

1. **அபஹத் பாப்மத்துவம்** — நல்வினை தீவினைகள் இரண்டும் இன்மை.
2. **விஜரத்துவம்** — மூப்பின்மை.
3. **விம்ருத்யுத்துவம்**—இறப்பின்மை.
4. **விசோகத்துவம்**—துக்கமின்மை.
5. **விஜிகத்ஸத்துவம்**—பசியின்மை.
6. **அபிபாஸத்துவம்** — தாகமின்மை
7. **சத்திய காமத்துவம்** — விரும்பிய தனைத் தவறுமற் பெறுகை.
8. **ஸத்ய ஸங்கல்பத்துவம்** — நினைத்த தனை நிறைவேற்றும் தன்மை.

என்னும் எட்டுக் குணங்களும் திருமாலுக்கு உண்டு என வைணவ நூல்கள் கூறும். இனி வேறொரு வகையாகவும் திருமாலுக்கு உரிய எட்டுக் குணங்கள் கூறப்பெறும். அவையாவன:

1. **வாத்ஸல்யம்** — கன்றினிடத்திற் பசுவைப் போல உலகுயிர்கள் பாற் கொள்ளும் பெரும் இரக்கம்; குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் பேரருட்டிறன்.
2. **சுவாமித்துவம்**—எல்லாப் பொருள்களுக்கும் தலைவனாகத் திகழும் தகுதிப்பாடு.
3. **ஸௌசீல்யம்**—மிக உயர்ந்தவனாக விளங்கியும், மிகத் தாழ்ந்தவர்களுடன் புரையறக் கலந்து பழகுந் தன்மை
4. **ஸௌலப்பியம்**—எளியனாக இருக்கும் இயல்பு.
5. **ஞானம்**—பேரறிவு, முற்று முணர்தல்.
6. **சக்தி** — பேராற்றல், முடிவில் ஆற்றலுடைமை.
7. **பிராப்தி** — சேஷித்துவத் தொடர்பு.
8. **பூர்த்தி** — வேண்டுவனயாவும் நிறைந்திருக்கப் பெறுகை.

இலக்கியங்களின் இயல்பு

திருக்குறள் உலகப் பேரிலக்கியங்களுள் ஒன்றாக ஒப்புயர்வற்றுத் திகழ்வது. சிறந்த பேரிலக்கியங்கள், தம்மை ஆழ்ந்து கற்குந்தோறும் கற்பார்க்குப் பல நுண்மைப் பொருள்களை விளக்கும் தன்மை வாய்ந்தன. நவில்தொறும் அந் நூல்களின் நயம் பெருகும்; தொட்டனைத்து ஊறும் மணற்கேணிபோலக் கற்றனைத்தும் அவற்றினின்று அறிவு ஊற்றெடுக்கும்; 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற தற் கேற்பப் புதிய புதிய பொருளனுபவம் அரிய பெரிய சிறந்த இலக்கியங்களைப் பயிலுங்கால் தோன்றிக் கொண்டே இருக்கும். நல்ல இலக்கியங்கள் உணர்த்திக் கொண்டு செல்லும் பொருட்டிறன்களுக்கு ஓர் எல்லையே இல்லை எனலாம். 'இதுவா அல்லது அதுவா என்ற நிலையில் இல்லாமல், 'இதுவும் அதுவும் பிறிதும்' என்ற முறையில் அவற்றின் பொருட் பரப்பானது பரந்து விரிந்துகொண்டே செல்லும்* அதுபற்றியே ஆசிரியர் தொல் காப்பியனார் "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்று அருளிச் செய்தார்.

"எண் குணத்தான்" என்னும் தொடர், இறைவன் எட்டுக் குணங்களையுடையவன் என்று உணர்த்துதலை, மேலே கண்டோம்.

"எட்டுக் கோலம்அவர் ஈறில் பெருங்குணம்"
"எட்டுவான் குணத்து ஈசன்"
"பரமர் போலும் எண்குணத்தார்"
"இறையவனை மறையவனை எண்குணத்தினனை"

எனச் சான்றோர் பெருமக்கள் தமது பாடல்களில் அருளிச் செய்துள்ளமை, அக்கருத்தை வலியுறுத்தும்.

எனினும், 'எண்குணத்தான்' என்னும் தொடர் வேறு பிற பொருள்களையும் கூட உணர்த்துவதாக உள்ளது. அவற்றை ஒரு சிறிது ஈண்டுக் காண்போம்:

---

*"The proof of the purest poetry is that its meaning is *inexhaustible*."
—A. C. Bradley.

*"Words do not have *either—or* meanings in imaginative poetery: they have *and-and-and* meanings. That is how poetry works."
—Hilary Corke.

1. "சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன" என்று சான்றோர்கள் பலரும் அருளிச் செய்திருத்தலின், **'எண்ணி எண்ணி வியந்து உணர்ந்து மகிழ்தற்கு உரிய குணங்களை உடையவன்'** எனவும், நாம் இத்தொடர்க்குப் பொருள் கொள்ளலாம்.

2. "அடியார்க்கு அருள் செய்ய வருந்தி நம்பி" எனவும், "கள்ளத் தலைவர் துயர் கருதித் தம்கருணை வெள்ளத்து அலைவர் மிக" எனவும் அருளுரைகள் காணப்படுதலின், 'இவ்வுயிர்த் திரள்கள் எல்லாம் ஈடேறி யுய்தல் வேண்டுமே' என்று தன் பேரருட் பெற்றியினால், **'எண்ணி இரங்கி அருள்கின்ற குணத்தையுடையவன்'** எனவும் இத்தொடர்க்கு நாம் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

இக் கருத்துக்களையே தாமும் கொண்டவர்போலக் காலிங்கர் என்னும் உரையாசிரியர், இத் தொடருக்கு **'எண்ணப்பட்ட குணங்களை யுடையவன்'** என உரை எழுதியிருக்கின்றார்.

3. "எண்பதத்தால் எய்தல் எளிதென்ப" (குறள் 991) என்புழி, எண்மை +பதம் **எண்பதம்** என்றாயவாறு போல, எண்மை+குணத்தான் என்பது **எண்** குணத்தான் என்றாகி வரும் எனக்கொண்டு, **'எளிமைத் தன்மையைத் தனது இயல்பான குணமாக உடையவன்'** என்று இத்தொடர்க்குப் பொருள் கூறுதலும் ஒருவகையில் ஏற்புடைத்தாகும்.

"தெளிவந்த தேறலைச்
சீரார் பெருந்துறையில்
எளிவந்து இருந்திரங்கி
எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின்
உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப்
பாடுதுங்காண் அம்மானாய்"
"அருமையில் எளிய அழகே போற்றி"

என மாணிக்க வாசகர் போன்ற மாபெருஞ் சான்றோர்கள் பலரும் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருப்பாடல்கள் பலவும், இக்கருத்துக்கு அரண்செய்கின்ற மேற்கோட் சான்றுகளாக விளங்கும். இராம கிருஷ்ணாதி அவதாரங்களும், அர்ச்சைகளும் இறைவனின் எளிமைத்தன்மை (சௌலப்பியம்) ஆகிய இனிய பண்பினையே உணர்த்துவனவாகத் திகழ்தலும், ஈண்டுச் சிந்தித்துத் தெளிதல் தகும்.

4. இனி 'என்குணத்தான்' என்பதற்கு நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடை புனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவு கோடல், தெய்வ பூசையும் அதிதி பூசையும் செய்தல் ஆகிய எட்டு இயல்புகளையும் உடையவன் என்றும் சிலர் கூறுவர். இவற்றுட் பல சிவபெருமானுக்குரிய பண்புகளாகவும் அமைந்துள்ளன. இவற்றை **"நால் இரு வழக்கில் தாபதப் பக்கம்"** என ஆசிரியர் தொல்காப்பியர், முனிவர்களின் குணங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

மற்றுஞ் சிலர் **இயமம் நியமம் ஆசனம் பிரத்தியாகாரம் பிராணாயாமம் தாரணை தியானம் சமாதி** எனும் எட்டுவகை யோகநெறிக்குரிய பண்புகளை யுடையவன் எனவும் கொள்வர். **தட்சிணாமூர்த்தி புத்தர் ஜினர்** முதலிய கடவுளர்க்கு இவை பொருந்துவனவாகத் தோன்றுகின்றன. "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் குறளிலேயே இக் கருத்து (The Conception of God as an Ascetic) அமைந்துள்ளமையின், இங்ஙனம் மீண்டும் அப்பொருளையே கொள்ளுதலிற் சிறிது தடை உள்ளது எனினும் (திருக்குறள் உரை வளம்) பழைய உரை ஒன்றில் **"அஷ்டாங்க யோகியான** பரமேசுவரன்" என்றே பொருள் கொள்ளப்பட்டுள்ளமை, இங்கு நாம் சிந்திக்கத் தகுவதாகத் திகழ்கின்றது.

5. இனி, வேறொரு வகையாகவும் இத்தொடரின் பொருளை யாவரும் எண்ணியுணரலாம். இக் குறள் 9ஆம் குறளாக அமைந்திருத்தலின், மேலே கூறி வந்த 8 குறள்களாலும் சுட்டப்பெற்ற குணங்களையெல்லாம், இக் குறளால் தொகுத்துணர்த்தி முடித்துரைத்தார் ஆசிரியர் எனவும் கருத இடன் உளது. அங்ஙனம் கொள்ளின்,

1. ஆதி பகவன் ஆதல்
2. வாலறிவுடைமை
3. மலர்மிசை ஏகுதல்

4. வேண்டுதல் வேண்டாமை இன்மை
5. இருள்சேர் இருவினையும் சேராமை
6. பொறிவாயில் ஐந்தவித்தல்
7. தனக்குவமை இன்மை
8. அறவாழியாம் அந்தண்மை

என்னும் மேலே எட்டுக் குணங்களையுமே, இத்தொடர் தொகுத்துணர்த்திச் சுட்டியுரைத்ததாகத் துணியலாம்

6. மாணிக்கவாசகர் இறைவனின் அருமை பெருமைகளையும், அருளிச் செயல்களையும் வியந்து வியந்து பாடி மகிழும் தமது திருவாசகத்தில்,

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப்
புணர்ந்து நின்றான்
உலகேழ் எனத்திசை பத்தெனத்தான்
ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ"

என அருளிச் செய்துள்ள அருமைச் செய்யுளின்கண், இறைவனை 'எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்' எனக் குறிப்பிடுகின்றார். 'எண்குணத்தான்' எனத் திருவள்ளுவர் வழங்கிய தொடர்க்குரிய பொருளை விளக்குவது போலும் முறையில், மாணிக்கவாசகரின் 'எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்' என்னும் அரிய தொடர் அமைந்து காணப்படுகின்றது. இரு தொடர்களையும் இயைபு படுத்தி எண்ணி ஆராயுங்கால், இறைவனின் 'அட்ட மூர்த்தம்' பற்றிய கருத்தை, ஈண்டு நாம் கொள்ளுதலும் பொருத்தமாகும் எனத் தோன்றுகின்றது.

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகி"
—திருநாவுக்கரசர்.

"எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்
கொண்டே நின்றார்
விட்டார் உலகமென் றுந்தீபற
வீடே வீடாகுமென் றுந்தீபற"
—திருவுந்தியார்.

என்பன போலவரும் திருமொழிகள் பலவும், இக்கருத்தினை வலியுறுத்தும்.

"தீவளி விசும்பு நிலன்நீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும் அறனும்......"

எனவரும் பரிபாடல் வரிகள் (3: 4-5), சிவபெருமான் மட்டுமேயன்றித் திருமாலும் அட்ட மூர்த்தியாக அமைந்து திகழ்தலை அறிவிக்கும்.

முடிவுரை

இதுகாறும் கூறிவந்தவாற்றால் 'எண் குணத்தான்' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வழங்கியருளிய தொடர், எத்துணை ஆழ்ந்த பல பொருட் குறிப்புக்களை உடையதாகத் திகழ்கின்றது என்பதனை யாவரும் இனி துணரலாம்.

இத்தகைய சிறந்த செந்தமிழ்த் தெய்விக நூல்களைத் திறன்தெரிந்து ஆழ்ந்து நுணுகிக் கற்பது, நம்மனோர்க்குத் தலையாய கடமையாகும். இறைவன் திருவருள் அங்ஙனம் ஆழ்ந்து கற்று இன்புறும்படி நம்மனோர்க்குத் துணைபுரிவதாக.

பாவை மாநாடு

திருவாவடுதுறை ஆதீனச் சார்பில் சென்னைத் திருவேட்டீசுரர் கோயிலில் மார்கழி 28, 29 தேதிச் சனி ஞாயிற்றுக் கிழமைகளிற் சிறப்புற நிகழ்ந்தது. சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், திரு. கோ. வேங்கடாசலம் (சென்னை அரசாங்க இணை வளர்ச்சி நெறியாளர்), அறநிலையத் துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார் M. A. B. L. ஆகிய பெருமக்கள் கலந்து கொண்டனர். 'மதுர மித்திரன்' ஆசிரியர் திரு. ந. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வரவேற்புரை கூறினார். திரு ந. ரா. முருகவேள், M.A., M. O. L. திரு. எதிராஜ ராமாநுஜ சுவாமிகள், திரு. பூ. சமரபுரி முதலியார், திரு. M. N. சாம்பசிவ சிவாசாரியார் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். டாக்டர். உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களின் பெயரர் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் விழாவை முன்னின்று நடத்தி யுதவினார்கள்.

தஞ்சை இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

நட்டுவர் முதலானோர்க்கு அளிக்கப் பெற்ற நிவந்தங்கள் :—

நட்டுவஞ் செய்ய நட்டுவர் அறுவர், நாடகம் நடிக்க நால்வர், கானபாடிகள் மூவர், வங்கியம் வாசிப்பார் மூவர், பாடவியம் வாசிப்பார் நால்வர், உடுக்கை வாசிப்பார் இருவர், வீணை வாசிப்பார் இருவர், ஆரியம் பாடுவோர் மூவர், தமிழ் பாட நால்வர், கொட்டி மத்தளம் அடிக்க இருவர், முத்திரைச் சங்கு ஊத இருவர், பக்க வாத்தியர் ஐவர், காந்தர்வர் ஐவர், தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகஞ் செய்ய இருவர். கணக்கு எழுத நால்வரும், அவர்களுக்குக் கீழ் கணக்கு எழுத எண்மரும் ஆகப் பன்னிருவர், திருவாய்க் கேள்விகள் இருவர், உவச்சர் பதினொருவர், சகடைக் கொட்டிகள் ஐம்பத்தைவர், திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பார் பதினொருவர், விளக்குடையார்கள் எண்மர், நீர்த்தெளியான் நால்வர், சன்னலியன் இருவர், திருமடைப் பள்ளிக்குக் குசவர் பதினொருவர், வண்ணத்தார்கள் இருவர், காவிதிமை செய்வார் இருவர், நாவிசஞ் செய்வார் இருவர், திரு இருவரும் அவர்களுக்குக் கீழ் இருவர், இருவர் ஆக நால்வரும் ஆக அறுவர், கோலினமை செய்வார் இருவர், அம்பட்டன் ஒருவர், தய்யான் ஒருவர், இரத்தினத் தய்யான் ஒருவன் (Jewel Stitcher) கன்னான் ஒருவன், தச்சாசாரியார் (Master Carpenter) மூவர், தச்சு (Carpenter) இருவர், பாணர் மூவர், கண்காணித் தட்டாண்மை செய்வார் ஒருவர் என்னும் இவர்களை முதலாம் இராச ராசசோழன், தஞ்சை இராச ராசேச்சரத்துக்கு நியமித்திருந்தான்.

இவர்களுள் நட்டுவர் என்பார் நாட்டியம் பழக்கி ஆட்டுவிப்பவர், கானபாடிகள் என்பார் இசைப்பாட்டு பாடுபவர். கந்தர்வர் என்பார் பாடுபவர். திருவாய்க் கேள்விகள் என்பார் அரசன் திருவாய் மலர்ந்தருளியவற்றைக் கேட்டு வந்து உணர்த்துபவர். உவச்சர் என்பார் சங்கு காளம் இவைகளை ஊதுபவர். சகடைக் கொட்டிகள் என்பார் பெரிய மேளம் அடிப்பவர். திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பார் என்பவர் கோயில் மூர்த்திகட்குச் சாத்தப்படும் மாலை பிடிப்பவர். விளக்குடையார் என்பவர் விளக்கு ஏற்றுபவர் (Lamp Lighters). நீர்த்தெளியான் என்பவர் நீர்த் தெளிப்பவர். வண்ணத்தார் என்பார் வண்ணார். இவர்களுக்கு ஈரங் கோல்லிகள் என்ற வேறு பெயரும் உண்டு. இச்செய்திக்கு "வண்ணத்தார்கள் இருவர்க்குப் பேரால் பங்கு ஒன்றாக இத்தெருவில் ஈரங் கொள்ளிகளுக்குப் பங்கு இரண்டும்" என்னும் கல்வெட்டுத் தொடர் சான்று பகரும். இங்கே கொள்ளிகள் என்பது கொல்லிகள் என்றிருக்க வேண்டும். காவிதிமை செய்வார் என்பவர் கணக்கு வேலை செய்பவர் (One who performs the duty of accountant).

திரு என்பவர் சோதிடர். இச் செய்தி "திரு ஒருவனுக்கும் கீழாள் இரண்டுக்கும் துணையன் ஆதித்தனான செம்பியன் கொற்றப் பெருங்கணிக்குப் பங்கு இரண்டும், மேற்படி ஒருவனுக்கும் கீழாள் இரண்டுக்கும் பராந்தகன் பாண்டி குலாசனி ஆன ராஜ ராஜ ஹனிதாதி ராஜனுக்குப் பங்கு இரண்டும்"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

இத் தொடர்களில் வந்துள்ள கணி என்னும் சொல் சோதிடன் என்னும் பொருளில் உள்ளது. "வினைவெல்லாம் கண்ணியுரைப்பான் கணி" என்பது புறப்பொருள் வெண்பா மாலை. எனவே திரு என்ற சொல் பதினொன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோதிடர் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளமை அறியப்படும். இக்காலம் இச்சொல் இப்பொருளில் வழக்கில் இல்லை. தய்யான் என்பவன் தையற்காரன். பாணர் என்பவர் பாடல் வல்ல சாதியார். கல்வெட்டுத் துறையாளர் தையல்காரன் என்பர். அப்பொருள் உண்டெனினும் இங்கு அதி

பொருந்துவதாய் இல்லை. முன்னரே தையற்காரரைக் குறிப்பிட்டு விட்டபடியாலும், பாணரில் ஒருவர் பெயர் குறிக்க வந்தவிடத்து "பாணன் உத்தமன் சூற்றியான அரிகுல கேசரிச் சாக்கைக்குப் பங்கு ஒன்றரை"—என்பதில் சாக்கைக்கு—என்றிருப்பதாலும் பாடலுடன் கூத்து நிகழ்த்துபவரை உணர்த்துவதாகும். வங்கியம் வாசிப்பார் என்பவர் ஒருவகைக் குழல் வாசிப்பவர். சன்னுவியன்—சன்னை என்னும் ஒருவகைப் பெருமுரசு வாசிப்பவரா? (அ) வேறானவரா? என்பது புலப்படவில்லை. 'கோலினமை செய்வார்' என்பதற்கு இக்காலம் பொருள் விளங்கவில்லை.

மேற் குறித்த இவர்களுக்கு நிவந்தமாகப் பங்கு செய்தபடி பங்குவழி பங்கு ஒன்றினால், நிலம் வேலியினால் இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால், நெல் நூற்றுக் கலமாகக் கொடுக்கப் பெற்று வந்தது.

மேற் குறித்தவர்களில் இன்னார்க்கு இவ்வளவு பங்கு என்பதை விரிவஞ்சி இங்குக் குறித்திலேன். சகடைக் கொட்டிகளுக்கு உட்படும் ஆட்கள் நாற்பத்தைந்து பேர்களுக்குத் தலைக்கு அரைப் பங்குடன் பாதவக் காணியம் கொடுக்கப் பெற்று வந்தது. இங்கே 'பாதவக் காணி' என்பதற்கு (Allowance) என்று பொருள்.

பண்டாரி, பரிசாரகர், கரணத்தார், இவர்களை நியமித்தது :—

முதலாம் இராச ராசசோழன் இராச ராசேச்சரம் உடையார்க்குப் பண்டாரஞ் செய்யப் பிராமணரையும், திருப்பரிசாரகஞ் செய்ய மாணிகளையும், கணக்கெழுதக் கரணத்தார்களையும், சோழ மண்டலத்துப் பிரமதேயங்கள், பாண்டி நாடான சயங்கொண்ட சோழ மண்டலத்துப் பிரமதேயங்கள் இவைகளிலிருந்து இடுமாறு பணித்திருந்தான். இவர்களில் பூமி சம்பத்தும் உடையவராய் இருந்தவர்களே பண்டாரிகளாக (as temple treasurers) நியமிக்கப் பெற்றிருந்தனர். இங்ஙனம் பண்டாரிகளாக நியமிக்கப் பெற்றிருந்தவர் பிராமணரேயாவர். முதலாம் இராச ராசசோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர் அருமொழி தேவ வளநாட்டு மங்கல நாட்டு மங்கலத்துச் சபையாரும், இராசேந்திர சிங்க வளநாட்டு வீரநாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், நித்தவிநோத வளநாட்டு இராச கேசரி சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும் ஆவர்.

இச் சபையார் தங்கள் தங்கள் ஊர்களிலிருந்து ஒவ்வொருவராக நால்வரை அனுப்பி யிருந்தனர். எனவே தஞ்சை இராச ராசேச்சரத்தில் பண்டாரிகளாக வேலை பார்த்து வந்தவர் நால்வர் ஆவர். பண்டாரி ஒருவர்க்குச் சம்பளம் ஓராண்டுக்கு நெல் கலம் இவ்வளவு என்பது கல்வெட்டில் சிதைந்துபோய்விட்டது. இவர்கள் தங்கள் சம்பளத்தை ஸ்ரீராஜராஜேஸ்வரம் உடையார் நாட்டுப் பண்டாரத்தில் (Country Treasury) பெற்று வந்தனர்.

பரிசாரகர் என்பார் ஏவற்றொழில் அல்லது சமையற்றொழில் செய்வோராவர். இங்கு ஏவற்றொழிலுக்கு (Temple Servants) உரியவர் என்பது டாக்டர் உல்ஷ் துரைமகனாரின் கருத்தாகும். இத்தொழிலுக்கு நியமிக்கப் பெற்றவர் மாணிகள் ஆவர். (மாணிகள்—பிரமசாரிககள்). முதலாம் இராச ராசசோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர்:

1. அருமொழி தேவ வளநாட்டு, நென்மலி நாட்டு, நெடுமணலாகிய மதன மஞ்சரி சதுர்வேதி மங்கலம், குன்றியூர், சுருன்குடி, ஆற்றூர்; ஷ வளநாட்டுப் புறங்கரம்பை நாட்டுப் பல்லவன் மகாதேவி சதுர்வேதி மங்கலம், செம்பியன் மாதேவி சதுர்வேதி மங்கலம், அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம், கெழுவத்தூர், கோயிலூர் புதுக்குடியாகிய கோதண்டராம சதுர்வேதி மங்கலம், வங்கநகர், கொற்றவன்குடி, பனையூர்; ஷ வளநாட்டு வெண்டாழைவேளூர்க் கூற்றத்துக் குறும்பலூர், கொண்ணூர்; ஆர்வலக் கூற்றத்து ஆர்வலம், வலிவலம், மாலினூர், அறிஞ்சிகை சதுர்வேதி மங்கலம்; ஷ வளநாட்டுப் புலியூர் நாட்டு—(ஊரின் பெயர் சிதைந்து விட்டது).

2. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுக் குடவாயில், நாலூர், மருகல், தானத்தொங்கல், சதுர்வேதி மங்கலம்; ஷ வளநாட்டு முழையூர் நாட்டுக் குந்தவை சதுர்வேதி மங்கலம்.

3. உய்யக் கொண்டார் வளநாட்டுத் தண்டந் தோட்டமான மும்மடி சோழ சதுர்வேதி மங்கலம். ஷை வள நாட்டு மாம்பூர் நாட்டுத் திருக்குட மூக் கில்; ஷை வளநாட்டு அம்பர் நாட்டு அம் புறத்தூர், அவ்வை நல்லூர்; ஷை வள நாட்டு வெண்ணுட்டுத் திருமழலை, கேர ளாந்தகச் சதுர்வேதி மங்கலம், வைகலா கிய மன்னவன் மாதேவி சதுர்வேதி மங்க லம்; ஷை வளநாட்டுத் திரைமூர் நாட்டு— (ஊரின் பெயர் சிதைந்து விட்டது) ஷை வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு— (ஊரின் பெயர் சிதைந்து விட்டது), நல் லூர் புதுக்குடி, வழகூர், அக்கரூர்; ஷை வளநாட்டு விளைநாட்டு விளைநகராகிய நித்த விநோத சதுர்வேதி மங்கலம், பெரு முளை, பறியலூர்; ஷை வளநாட்டு ஆக்கூர் நாட்டு இராசேந்திர சிம்ம சதுர்வேதி மங் கலம், திருக்கடவூர், தலைச்சங்காடு, ஷை வளநாட்டுக் குறும்பூர் நாட்டுக் காயாக் குடி, தளிச்சேரியான பராந்தக சோழ சதுர்வேதி மங்கலம், குறும்ப புறத்தூர், திருவிடைக்கழி,

4. இராசேந்திர சிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுக் கண்டராதித்த சதுர் வேதி மங்கலம், பெரும்புலியூர், ஷை வள நாட்டு, மிறைக்கூற்றத்து காமரவல்லி, ஷை வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் தொழூர், பராந்தக சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு இன்னம்பர் நாட்டு ஆத னூர், பழைய வானவன் மாதேவி சதுர் வேதி மங்கலம், அசுகூர்; ஷை வளநாட்டு மிழலைநாட்டு சேய்ஞலூர்; ஷை வளநாட்டு மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய திரை லோக்கிய மாதேவி சதர்வேதி மங்கலம், இடையர் நல்லூர், இடவை; ஷை வள நாட்டு வெண்ணையூர் நாட்டுப் பெருங் கண்பூர், பாப்பாக்குடி; ஷை வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுக் கழுமலம், தேனூர், ஷை வளநாட்டு நாங்கூர் நாட்டு நாங்கூர், குன்றம்; ஷை வளநாட்டு நெலுவூர் நாட் டுக்குமராதித்த சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டுப் பிடவூர் நாட்டு நயத்திர மங் கலம், க்ஷத்திரிய சிங்க சதுர்வேதி மங் கலம்;

5. இராசாசரிய வளநாட்டு வடவழி நாட்டுத் திருவெள்ளறை, ஷை வளநாட் டுக் கலார்க் கூற்றத்துச் சோழ உத்தம சதுர்வேதி மங்கலம்;

6. கேரளாந்தக வளநாட்டு, உறை யூர்க் கூற்றத்து இராசாசரிய சதுர்வேதி மங்கலம், அறிஞ்சிகை சதுர்வேதி மங்க லம்; ஷை வளநாட்டு தட்டைக் களநாட் டுக் கற்றளி சதுர்வேதி மங்கலம்; ஷை வள நாட்டுச் சூரலூர்க் கூற்றத்துச் சோழ உத் தம சதுர்வேதி மங்கலம்;

7. பாண்டி குலாசனி வளநாட்டு, விளாநாட்டு மலரியாகிய ஸ்ரீ கண்ட சதுர் வேதி மங்கலம்; ஷை வளநாட்டு இடை யாற்று நாட்டு இடையாற்று சதுர்வேதி மங்கலம், தொண்டவை சதுர்வேதி மங்க லம்; ஷை வளநாட்டு எயிநாட்டுத் திருப் பேரூர்;

8. நித்த விநோத வளநாட்டு இராச கேசரி சதுர்வேதி மங்கலம்; ஷை வள நாட்டு ஆலூர்க் கூற்றத்து இரும்புதலாகிய மனுகுல சூளாமணி சதுர்வேதி மங்கலம், சமுத்திரவல்லி, ஷை வளநாட்டு முடிச் சோணுட்டு ஜனநாத சதுர்வேதி மங்கலம்; ஷை வளநாட்டு வெண்ணிக் கூற்றத்துக் கிழ்ப் பூண்டியாகிய ஒலோகமாதேவி சதுர் வேதி மங்கலம், என்னும் ஊர்களிலுள்ள சபையார்கள் ஆவர்.

இவர்களுக்கு நிசதம் நெல் பதக்கும், ஆண்டுதோறும் காசு நான்கும் கொடுக் கப் பெற்றுவந்தன. இவர்களிலே நிலை யாய் தீக்ஷித்தார் பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல் முக்குறுணியும், ஆண்டு தோறும் காசு நான்கும் கொடுக்கப் பெற்று வந்தன. இவர்கள் பெறும் நெல் லும் காசும் இராச ராசேச்சர முடையா ரின் உள்ளூர்ப் பண்டாரத்தே கொடுக்கப் பெற்று வந்தன.

மேற் குறித்த ஊர்ச் சபையார்களில் பராந்தக சதுர்வேதி மங்கலத்துச் சபை யார் நான்கு மாணிகளையும், வீரநாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையார் பன்னி ரண்டு மாணிகளையும் இட்டிருந்தனர். ஏனைய சபையார்களில் சில சபையார் ஒவ் வொரு மாணியையும், சில சபையார் இரண்டு இரண்டு மாணிகளையும் விட் டிருந்தனர். இவர்களின் தொகை சுமார் 150 இருக்கலாம். (கல்வெட்டு சில இடங்

களில் உதிர்ந்து விட்டமையால் சரியான தொகையை எண்ணி எழுத முடியவில்லை).

குறிப்பு:—சதுர்வேதி மங்கலம் என்பது சில சிற்றூர்களைத் தன்னகத்துக் கொண்டது. தீக்ஷித்தார் என்பதற்கு "Those who had taken permanent vows"—என்பர் டாக்டர் உல்ஷ். மேற்குறித்த பரிசாரகர் என்ற தலைப்பின் கீழ் அடங்கிய பகுதிகளால் சோழ மண்டலம் முதலாம் இராச ராசன் காலத்தில் வளநாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்த செய்தியும், நாடு, கூற்றங்களுக்கு உட்பட்டிருந்த ஒவ்வொரு ஊரிலும் ஊர்ச் சபை இருந்த செய்தியும் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

கரணத்தார் என்பவர் கோயில் கணக்கு எழுதுபவர் (Accountants) ஆவர். இவர்க்கு ஓராட்டைக்கு நெல் இருநூற்றுக் கலமும், இவர் இடக்கடவ கீழ்க் கணக்கு (Under Accountant) ஒருவர்க்கு ஓராட்டைக்கு நெல் எழுபத்தைங்கலமாக இருவர்க்கு நெல் நூற்றைம்பது கலமும் கொடுக்கப் பெற்று வந்தன. இவர்கள் இந் நெல்லை இராச ராசேச்சரமுடையார் நாட்டுப் பண்டாரத்தே பெற்று வந்தனர்.

முதலாம் இராச ராசசோழன் கட்டளைப்படி இவர்களை இட்டவர், (1) உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் தண்டத் தோட்டமான மும்மடி சோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், (2) ஷை வளநாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், (3) ஷை வளநாட்டுக் குறும்பூர் நாட்டுத் தேவதானம் திருவிடைக்கழி சபையாரும், (4) இராசேந்திர சிங்க வளநாட்டு மிறைக் கூற்றத்து காமரவல்லி சபையாரும், (5) ஷை வளநாட்டுப் பராந்தக சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும், (6) நித்த விநோத வளநாட்டு முடிச் சோணாட்டு ஜனநாத சதுர்வேதி மங்கலத்துச் சபையாரும் ஆவர்.

இச் சபையார்கள் சபைக்கு ஒவ்வொருவராக அறுவரை இட்டிருந்தனர். இங்ஙனம் இடப்பெற்ற ஒவ்வொரு கரணத்தாரும் தங்கள் தங்களுக்குக் கீழ் இரு கரணத்தார்களை அரசன் கட்டளைப்படி நியமித்துக் கொண்டனர். இவர்களுக்குக் கீழ்க் கரணத்தார்கள் எனப் பெயர்.

எனவே தஞ்சை இராச ராசேச்சரத்துக்குக் கணக்கு எழுத அறுவரும் அவர்களுக்குக் கீழ் கணக்கு எழுதப் பன்னிருவரும் ஆகப் பதினெண்மர் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

திருமழிசை: திருமழிசை ஆழ்வார் மகோற்சவம்.

பூலாம்பட்டி: கைலாசநாத சுவாமி கோயிலில் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா.

சின்னமனூர்: பூலானந்தீசுவரர் கோயிலில் பாவை மாநாடு.

அம்பாசமுத்திரம்: கிருஷ்ணசாமி தொகுதி கோயிலில் பாவை மாநாடு.

குற்றாலம்: திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் திருவாதிரைத் திருவிழா.

சிவகாசி: விசுவநாத சுவாமி கோயிலில் பாவை மாநாடு.

தேவகோட்டை: சிதம்பர விநாயகர் கோயிலில் பாவை மாநாடு.

கைச்சினம்: கைச்சினேசுவர சுவாமி கோயிலில் பாவை மாநாடு.

பழனி: தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பாவை மாநாடு.

சென்னை, திருமயிலை: கபாலீச்சுவரர் கோயிலில் தைத் தெப்போற்சவத் திருவிழா.

பூவாளூர்: திருமூலநாத சுவாமி கோயிலில் ஆருத்திரா தரிசன விழா.

அரசனூர்: தாயுமான சுவாமி கோயிலில் தைப்பூச விழா.

பெரியகுளம்: பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பாவை மாநாடு.

மிகச் சிறந்த விளக்கம்

"பிறர் கேட்டினை நீக்கி யல்லது நிற்க ஒண்ணாத நிலை வைஷ்ணவ தர்மம் ஆகும்.

'ஒருவனுக்கு வைஷ்ணத்வம் உண்டு இல்லை என்னும் இடம் தனக்கே தெரியுங்காண்' என்று ஜீயர் பலகாலும் அருளிச் செய்வர்.

பிறர் அநர்த்தங் கண்டால் 'ஐயோ!' என்று இரங்குவானாகில், அவன் 'நமக்குப் பகவத் ஸம்பந்தம் உண்டு' என்று இருக்க அடுக்கும்.

'இத்தனையும் வேண்டும் பட்டிடுவானுக்கு' என்று இருந்தானாகில். அவன் 'நமக்குப் பகவத் சம்பந்தம் இல்லை' என்று இருக்க அடுக்கும்."

—திருவாய்மொழி ஈட்டு உரை.

[2]

"இல்லாத குற்றத்தையும் சிலர் 'உண்டு' என்றால், 'இல்லை' என்னாதே இசைகையிறே வைஷ்ணத்வ லக்ஷணம்.

பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாப பலம் என்றான் இறே ஸ்ரீ பரதாழ்வான்?"

—திருப்பாவை வியாக்யானம்.

திருப்போரூர்: *ஸ்ரீ கந்தசாமி தேவஸ்தானத்தின் பெருவிழாச் சார்பில், முருகன் செந்தமிழ்க் கழக ஆண்டு விழாவும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.L.T. அவர்கள் தலைமையில், ஆண்டு விழா நடைபெற்றது. விழா நாட்களில் எல்லாம் அறிஞர்களின் சொற்பொழிவுகள் சிறப்புற நிகழ்ந்தன.*

மருதமலை: *சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தைப் பிரம்மோற்சவம்.*

திருமீயச்சூர்: *மேகநாத சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம்.*

விஜயாபதி: *விசுவாமித்திரர் கோயிலில் கும்பாபிஷேகமும் குருபூஜையும்.*

கபிலர்மலை: *பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் இரதோற்சவம்.*

அரியநாயகிபுரம்: *கைலாசநாத சுவாமி கோயிலில் தைப்பூசப் பெருவிழா.*

காந்தீசுவரம்: *ஏகாந்தலிங்க சுவாமி கோயிலில் தைப்பூசத் திருவிழா.*

வடலூர்: *திருவருட்பிரகாச வள்ளலார் கோயிலில் அன்ன விழா.*

திருநெல்வேலிப்பேட்டை: *உச்சயினி மாகாளி அம்பாள் கோயிலில் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.*

திருவிடைமருதூர்: *மகாலிங்க சுவாமி கோயிலில் தைப்பூச விழா.*

முசிறி: *சந்திரமௌலீசுவரர் கோயிலில் விவேகானந்தர் நூற்றாண்டு விழா.*

முசிறி: *சந்திரமௌலீசுவரர் கோயிலில் மகா கும்பாபிஷேகம்,*

திருஞான சம்பந்தர் அருளிய திருமுறை

[முதுபெரும் புலவர். திரு. சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு]

"வேத நெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு
திருத் தொண்டு பரவாம்."

எனச் சேக்கிழார் பெருமானார் திருஞான சம்பந்த சுவாமிகளின் திருத் தொண்டுகளைப் பரவும் பொருட்டாகத் தொடங்கி யருளினார்.

நெறி (வழி)யும் துறையும் தெரியாமல் எதிலும் ஈடுபடலாகாது. துறைக்கு நெறி அத்தியா வசியமானது. வழியே சென்று துறையில் இறங்கிப் படியத் தக்கது இங்குச் சிவா நந்தசாகரம். இத் தலைத் திருப்பாடலில் 'வேதம்' நெறியெனப் பட்டது. 'சைவம்' துறை எனப்பட்டது. வேதம் ஆகிய நெறியிற் சென்று, சைவம் ஆகிய துறையில் இறங்கி என்ன செய்தல் வேண்டும்? ஆடித் திளைத்தல் வேண்டும்! இதில் ஆடல் வேண்டும்? சிவா நந்தக்கடலில். அச் சிவா நந்தக் கடலில் முழுகித் திளைக்க விரும்பினால் அக் கடலில் இறங்கும் துறையை நன்றாக அறிந்து கொள்ளல் வேண்டும், அவ்வாறு அறிதல் முழுகுவோர் தொழில், அவர் அறிய இனிது விளங்குந் தொழில் துறையினது. அதனால், 'துறை விளங்க' என்று விளக்கத்தைத் துறையினதாக்கினார். அத் துறை விளக்கம் நமக்குக் கிடைக்க வேண்டினால், அதற்குரிய நெறி செவ்விதின் அமைதல் வேண்டும். அதைத், தழைத்து ஓங்குதல் என்றார் அருண் மொழித் தேவர். தழைத்தல் ஓங்குதல் என்று இருசெயல் அமைந்தமை ஏன்? வேத மார்க்கத்தில் பல சமயங்கள் உள்ளன. அவற்றையே பொருளெனக் கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றைச் சார்ந்து, அவ்வளவில் அமைந்தவர் சைவத் துறையை அடைதல் இல்லை, பல பல சமயங்கள் தாமே, பரிபக்குவக் குறைவுடையவர்க்குச் சித்தாந்தமாகத் தோன்றித் தம்பால் நிறுத்திக் கொள்ளும் ஆயின், அவர்க்குச் சைவத் துறை விளக்கம் எவ்வாறு எய்தும்? சைவத்தின் பேதங்களை யுணர்வதன் முன்னர்ச் சைவம் என ஒன்றுண்டு என்பதை உணர்தல் வேண்டும். 'சைவம்' (முதலிலும்) சைவ வேதம் (இடையிலும்) சைவ சித்தாந்தம் (முடிவிலும்) ஆக முறையே அறியத் தக்கன. முதலதே உணராதார் முடிவினதை உணர்தல் எவ்வாறு இயலும்? சைவ சித்தாந்தச் செம்பொருட்டுறையைத் திருவுள்ளத்திற் கொண்டு, 'மிகுசைவத் துறை' என்றார் ஆசிரியர். 'மிகுதல்' கீழ்க் கீழ்ப் பொருளைக் கடந்து மேன்மேற் சென்ற இடத்துத் தனக்கு மேல் ஒன்றும் இன்றித் தானே எல்லாவற்றிலும் மேற் பட்டதாகி முடிதல். அதுவே 'சித்தாந்தம்' என்னும் முடிந்த முடிபு. ஈண்டு 'மிகு சைவம்' என்றது 'மிகுபஞ்சாக்கரத்தால்' (உண்மை வணக்கம்) 'மிகுமுத்தி' (சிவாநந்த மாலை 179) என்னும் இடங்களிற் போல முடிந்த நிலையையே உணர்த்திற்று. சிகாரத்தையே மிகுபஞ்சாக்கரம் என்றதும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி (பரமுத்தி) யையே மிகுமுத்தி என்றதும் அறிக.

இலையினும் மேலானது தழை. இலையே முடிவாகக் கொள்ளப்படாது; அதன் மேலும் தழைத்தலின். பலவேறு சமயங்களும் இலை போல்வன. பூர்வபட்சம் செய்து கழிக்கப்படுவன. அவ்விலைகளுக்கும் அப்பால் உள்ள ஒன்றை உணர்த்தும் முறைமையில் வேதம் விளங்குகின்றது. அவ்விளக்கமே தழைத்தலாகச் சொல்லப்பட்டது. அது நுணுகிய நிலையில் இருப்பின், அவ்வழியிற் செல்வோர்க்கு மேலும் கடந்து செல்ல மாட்டாத இடர்ப்பாடு தோன்றித் துறையை அடையும் பேறு கிட்டா தொழியும். அதனால், அத் தழைத்தல்' நுணுகாத நிலையில் நின்றும் பருத்துத் தோன்றல் வேண்டும். அஃதாவது அதன் மேலும் வேறொன்றில்லை. அதுவே சைவம், என்று தெளிவுறுத்தல் ஆகும். ஆதலின், 'வேதநெறி தழைத்தோங்க' என்றார்.

வேத நெறி தழைத் தோங்கினால் அன்றிச் சைவத்துறையும், அத்துறையில் விளங்கக் காரணம் வேறில்லை. அவ்வேத நெறி

யின் தழைத் தோங்குதலே, சைவத் துறை விளக்கத்திற்கு ஏதுவாகும்.

'உலகியல் வேத நூல் ஒழுக்கம் என்பதும்
நிலவு மெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்'

என்று பின்னர் வரும்பகுதியை இங்கு வைத்து நோக்கலாகாது. அது வேறு முறையில் கூறும் பொருள். இங்கு வழியும் துறையுமாகத் தனித் தனி உருவகம் செய்யப்பட்டன வேதமும் சைவமும். அங்குச் சைவ நெறியின் வேறு பாடு பல வற்றுள், 'மெய்ந் நெறி' சித்தாந்தச் செம்பொருளாகிய சிவத்தை அடையும் நெறி என்றும், அந்நெறியில் ஒழுகும் ஒழுக்கம் ஆகமசாரமே அன்றி வேத சாரம் அன்று என்றும், வேதசாரம் உயர்ந் தோரது (உலகியல்) ஒழுக்கம் என்றும், ஆகம சாரம் சைவர்க்கே உரிய அருளியல் என்றும், வேத நூல் ஒழுக்கமாகிய வைதிகமும் ஆகம நூல் ஒழுக்கமாய சைவமும் கலந்த வைதிக சைவம் இன்னது என்றும் அழகுறத் திருப்பாசுரப் பொருளுணர்த்தி நின்றது.

(1) உலகியல் வேத நூல் ஒழுக்கம்; (2) மெய்ந் நெறி சிவ நெறி; ['அது' என்றது இங்கு நெறி என்னும் முன்மொழிப் பொருட்டாய் நின்றதே அன்றிச் சுட்டன்று. இச்செயல் (அது) சுட்டுப் பொருளைப்பயவாது நிற்குமிடங்களில் 'பகுதிப் பொருள் விகுதி' என்னும் வழக்குணர்க. 'இது' 'உது' என்னும் இரண்டும் இவ்வாறு நிற்றல் இல்லை.] அவ் விரண்டையும் கலதிவாயினர் காணுர், அவர் காணுவராயினும் அவர்க்கெல்லாம் அரசனுக இருக்கும் தென்னவன் காண்டல் வேண்டும் என்னும் பான்மை நேர்ந்தது, அவனது முன்னை நல்வினைப் பயனுக! தென்னவன் அறியும் பான்மையால் 'அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்க' என்று இந்த மெய்ம் மொழிப்பயன் உலகம் இன்புறச், சந்த வேள்விகள் முதல் சங்கரர்க்கு முன் வந்த அர்ச்சனை வழிபாடு மன்னவாம்' என இயைபு படுத்தி அறிவித் தருளிய அருண் மொழித் தேவர் திருவுள்ளத்தை நன்குணர்தல் வேண்டும்.

தென்னவன் அறியும் பான்மையால்'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்றருளிய தன் பயன் உலகம் இன்புற வேள்வி முதலிய சிவ வழிபாடு மன்னுதல் என்னும் உண்மையைத் தொடக்கமாகக் கொண்டு அதன் மூலத்திற்கு ஒத்தது, திருப்பாசுரப் பொருள் விளக்கம். 'இந்த மொழி' என்றது 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்னும் முதலடியை. அம் மொழிப் பயன் உலகம் இன்புறலும், அவ் வின்பத்துக்குக் காரணமான சிவவேள்வி முதலிய சிவ வழிபாடு நிலை பெறுதலும் ஆம். மன்னுதல்—நிலை பேறு. சந்த வேள்விகள்—சிவ யாகங்கள். (சிவாக்கினி காரியம், சிவ பூசை, சிவத்தியானம் முதலிய எல்லாம் 'வேள்வி' எனப்படுவனவே.)

அடுத்து, 'வீழ்க தண்புனல்' என்றது, அவ் வேள்வியின் நற்பயன் ஆகும். இவ் வண்ணம் வேத நூலொழுக்கமாகிய உலகியலையும் மெய்ந் நெறியாகிய சிவ நெறியையும் தென்னவன் அறியும் பான்மையால் நம் முன்னவனுர் காழிவேந்தனுர் அருளிய திருப்பாசுரத்தின் பிரதம வியாக்கியானம் செய்யும் அருண் மொழி அது, பூர்வ பக்ஷம் செய்தே சித்தாந்தம் உணர்த்த வேண்டுதலின், இங்ஙனம் அருளினுர் நம் சமயாசாரியார். ஆசாரியரது கடமை தீதாகிய அயல் நெறி ஆழ்க என்றலும், நன்ருகிய சிவநெறி வாழ்க என்றலும். இது தென்னவனுக்குச் செய்தருளிய உபதேசம் ஆதலின், முற்றும் நியாய முடையது. இக் காலத்தில் செவியைத் துளைத்துச் சிந்தையை வருத்திக் கொண்டிருந்த மறைந்த 'வாழ்க' 'வீழ்க' என்பவற்றை எண்ணி, இதனைக் குற்றங் கூறி அபசாரப் படுதல் தகாது.

வேத நெறி வேதத் துறை, சைவ வெறி, சைவத்துறை என்னும் நான்கில், வேத நெறியில் செல்வது வேதாசாரம் (வைதிகம்); சைவம்=சிவ சம்பந்தம், சிவ நெறி—சைவாசாரம்; (சைவம்). தொடக்கம் வேத நெறியொழுக்கம். ஒழுக்கம்—செலவு. நெறியில் ஒழுகும் ஒழுக்கம்—வழியிற் செல்லும் செலவு. அந்நெறியிற் சென்று அடையும் வேதத்துறை மட்டில் ஆயின், சைவத்துறை விளங்காது. அவ்வேதத்துறையையும் கடந்து சென்ருல் தான் சைவத்துறையை அடையலாம். வேதத்துறையில் இறங்கி முழுகும் வெள்ளம் உபநிடதம். அதில் மூழ்கித் திளைப்பவர்க்கே சைவத்திறம் நன்கு எய்தும். உபநிடதம் வேதாந்தம். அந்தம்—சிரம். ஆதி—பாதம். 'ஆரணங்கள் படித்தும்—வேத சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்ருல்' அன்றிச் சைவத்திறம் அடைதல் அரிது. சைவத்துறை விளக்கத்திற்கு வேத நெறியொழுக்கமும், சைவத்திறம் அடைதற்கு

வேதாந்தப் பொருளுணர்ச்சியும் அத்தியாவசியம் ஆகும் வேத நெறியில் ஒழுகிச் சைவத்துறை விளங்கப் பெற்றுள்ளவர்பரம் பரை பொலிவுற்றுத் திகழும்.

அவ் வேதநெறியொழுக்கத்தையும், அது தழைத்தோங்கும்படி அந்நெறியை உலகிற் பரப்பும் பெரும்பயன் விளைக்கும் பெறலருந் தொண்டு புரிதலையும், எல்லாரும் மேற்கொள்ளல் இயலாது. வேத நெறியில் ஒழுகலாம். அந்நெறியை உலகிற் பரவச் செய்தல் எளிதோ? நெறியில் ஒழுகுவார்க்கு அதைப் பரப்பும் தொண்டு வாய்த்தல் ஒருதலையன்று. நெறியைப் பரப்பவல்லார் உண்மையராயின், அவ்வந் நெறியில் ஒழுகாதிரார். இக் காலத்திலும், 'ஆசாரியர்' என்ற வழக்கிற்குத் தகத் தாமும் வழாது ஒழுகித், தமது நெறியை உலகிலும் பரப்பி வந்தருளும் உண்மைச் சிறப்புடைய பெரியார் சிலர் உளர். இன்றும் அவர் திருவருளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். கோயில்களில் சிவலிங்கப் பெருமான்களைக் கண்டு சிவத்தை வழிபடுதல் எளிதன்று. "சிவலிங்கப் பெருமான் நன்கு செய் செய்யப்படவில்லை; பீடம் பெரிதாயிற்று; கோமுகம் நீண்டது; ஆவுடையார் சிறிது; சிவலிங்கம் பெரிது" என்பன முதலிய குறைகளைக் கூறிக்கொண்டு, அச் சிவலிங்கப்பெருமான்களின் உச்சியில் இருந்து நச்சிய நலங்களையெல்லாம் நல்கும் அச் சிவபரஞ்சுடரைக் கண்டு வழிபடும் ஆற்றல் பெறாது அவமதிக்கின்றனர் சிலர். சிவாகமவசநம் இது:—

"திருக்கோயில் உள்ளிருக்குந்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவன்உறைவன் அங்கே."

சிவலிங்க தரிசனக் கிரமத்தை அறிந்து கொண்டால், இங்கும் அங்ஙனம் வழிபட்டு உய்யும்பேறு எய்தலாம்.

சிவன் நாதரூபலிங்கம். சக்தி விந்துரூப பீடம். யோனியும் லிங்கமும் ஆகச் சம்பந்தத்தால் சகல பிரஜோத்பத்திகளை உண்டாக்குகின்ற உண்மை சாத்திரங்களிற் கூறப்பட்டுளது.

ஓங்காரத்தில் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் ஐந்தும் அடக்கம். சமட்டிப் பிரணவம் அறியாதது சமட்டியே! தனித்தனியே ஐந்தும் வியட்டியாகும்.

இங்கே,

"சிவம் சத்திதன்னை ஈன்றும்;
சத்திதான் சிவத்தை ஈன்றும்;
உவந் திருவரும் புணர்ந்துஇங்கு
உலகுஉயிர் எல்லாம் ஈன்றும்;
பவன்பிரம சாரியாகும்;
பான்மொழி கன்னி யாகும்;
தவந்தரு ஞானத் தோர்க்குஇத்
தன்மைதான் தெரியும் அன்றே"

என்னும் திருவிருத்தத்தின் பொருளுண்மையை உள்ளத்திற்கொண்டு முற்கூறியதையும் பிற்கூறுவதையும் அறிதல் அறிஞர் கடனாகும். இதில் 'தவம் தருஞானத்தோர்' என்றது இறப்பில்தவம் ஆகிய சரியை, கிரியை, யோகம் என்பவை காட்டும் ஞானத்தைப் பெற்றுள்ளோர் என்று பொருளுணர்த்துவது. இறப்பில் தவத்தால் ஞானத்தை மருவுதல் சிவஞானபோதத்தில் அறியத்தகும்.

"சத்தியும் சிவமும் ஆய தன்மைஇவ்
வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உணர்குண குணியும் ஆக
வைத்தனன்; அவளால் வந்த
ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட
லிங்கத்தின் இயல்பும் ஓரார்."

"சிவன்அருவுருவும் அல்லன் சித்தினோ
டசித்தும் அல்லன்
பவம்முதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வானும் அல்லன்
தவம்முதல் யோக போகம்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும்
இயைந்திடா இயல்பி னனே"

இங்குப் பீடலிங்கத்தின் இயல்பு ஓர்வார்க்கு,

"மச்சர் அங்கமும் மலரவன் அங்கமும்
வச்சி ராங்கமும் இல்லைமண் மீதிலே;
அச்செ லாமஇலிங் காங்க பகரங்கம்ஆம்
பிச்சர் காள்!எம் பிரான் அல்லதில்லையே"

என்னும் உண்மையும் தெரிய வேண்டுவதாகும்.

திருக்களிற்றுப்படியாரிலே, "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" "யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும் மாதேயும் பாகன் இலச்சினையே" என்திருப்

பனவும் சிவலிங்கத்தின் மெய்ப்பொருளை உணர்த்துவன. "ஆணெல்லாம் சிவமாகவும் பெண்ணெல்லாம் சத்தியாகவும் வியாபரியா நிற்கும்" "பீடம் மனோன்மனி சொரூபமாக வும் சிவலிங்கம் சதாசிவ சொரூபமாகவும் நிற்குந்தன்மையினையும் சிவாநுக்கிரகம் இல்லாத பேர் தெளிய மாட்டார்கள்" "ஞான சத்திமயம் சிவலிங்கம் எனவும் கிரியாசத்தி மயம் பீடம் எனவும் உணரப்படும்" (மறை ஞானசம்பந்தருரை)

"பிரபஞ்சம் எல்லாம் சத்தியினது வடிவும் சிவனது வடிவுமாய் இருக்கிற முறைமையை உடைத்தாயிருக்கும்" "குணமும் குணியும் பிரிபடாததன்மைபோலச் சத்தியும் சிவமும் பிரிபடாது". சிவத்தைவிட்டுச் சத்தியும் தனித்து ஒருமுதலாய் நில்லாது; சத்தியை விட்டுச் சிவமும் தனித்து ஒருமுதலாய் நின்று காரியப்படாது; அது என்போல என்னில், ஆவுடையாளும் சிவலிங்கமும் ஒன்றைவிட்டு ஒன்று நீங்காமல் தன்னில் கூடியிருந்து ஆன்மாக்களை இரட்சிக்கிற முறைமையை அறியார்கள். பிரபஞ்சமெல்லாம் சிவசத்தியினுடைய வடிவாயிருக்கும். இந்தச் சிவமும் சத்தியும் குணமும் குணியும்போல் பிரிபடாமல் கூடிநின்று பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும்" (நிரம்பவழகிய தேசிகருரை).

இதனோடு, "பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரமசுகர்மேய அண்ணல் செய்யாதன எல்லாம் அறிந்து வகைவகையாலே நண்ணிய ஞானசம்பந்தன்" என்றருளியதை உளங்கொள்க. இதுகாறும் குறித்தவற்றால், பொதுவில் 'எல்லாம் சிவமயம்' ஆதலையும், சிறப்பில் ஆசாரியப் பெருமக்களையும், அடியார்களையும், சிவலிங்கப்பெருமான்களையும் கண்டு சிவசத்தி பாவனையில் வழிபடல்வேண்டும் என்பதையும் அறிதல்வேண்டும். சிவலிங்கம் தாபரம். மகேசுர (உற்சவ) மூர்த்திகளும் குருவும் அடியார்களும் ஜங்கமம்.

சிவலிங்க தரிசனம்

"ஓங்காரம் பீடம், அகாரம்உயர் கண்டம்;மேற்
பாங்கார் உகாரம் பயில்பீட—ஆங்குள்
மகாரம் மிருவட்டம் மன்னுநிலை விந்துப்
பகாதசிவம் நாதம்எனப் பார்"

—காழிக் கண்ணுடைய வள்ளலார்.

(தொடரும்)

தங்கப்பத்திரங்கள் வாங்கியுள்ள கோயில்களின் விவரம் (Gold-Bonds)

(தொடர்ச்சி)

மாரியம்மன் கோயில், வீரசிங்கம்பேட்டை, தஞ்சை மாவட்டம்	250	கிராம்கள்
சாரங்கபாணிசுவாமி கோயில், கும்பகோணம், ,,	361	,,
இராமேசுவரம் தேவஸ்தானம், இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம்	4,487·950	,,
அவிநாசிலிங்கேசுவரர் கோயில், அவிநாசி, கோவை மாவட்டம்	423	,,
அகத்திசுவரசுவாமி கோயில், கோட்டூர், இராமநாதபுரம் மாவட்டம்	381·700	,,
இராமநாதசுவாமி கோயில், இராமேசுவரம் ,, ,,	6,650·340	,,
சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணிகை, செங்கற்பட்டு மாவட்டம்	927	,,

---

மகாலிங்கசுவாமி கோயில், திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்	81—4—0	தோலா
மயூரநாதசுவாமி கோயில், மாயூரம், ,,	57—0—0	,,
சௌரிராஜப்பெருமாள் கோயில், திருக்கண்ணபுரம் ,,	138—4—0	,,

கோயில்கள் வாங்கியுள்ள தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்கள் விவரம்

(முற்றொடர்ச்சி) —:☼:— (Investments)

81.	கைலாசநாதசுவாமி கோயில், திருமலூர், திருச்சி மாவட்டம்		1,000
82.	விருத்தாசலேசுவரர் கோயில், சேனப்பிரட்டி	,,	100
83.	சத்குணநாதசுவாமி கோயில், இடும்பாவனம், தஞ்சை மாவட்டம்		15,000
84.	கண்டீசுவரசுவாமி கோயில், தர்மராஜன்கோட்டை	,,	1,000
85.	கைலாசநாதசுவாமி கோயில், வரகனேரி, திருச்சி நகரம்		400
86.	கரவண்டீசுவரர் கோயில், உடையார்கோயில், தஞ்சை மாவட்டம்		2,000
87.	லட்சுமிநாராயணப்பெருமாள் கோயில், நீடாமங்கலம், தஞ்சை மாவட்டம்		500
88.	வெங்கடேசப்பெருமாள் கோயில், வரகூர்,	,,	400
89.	சுந்தரராஜப்பெருமாள் கோயில், பெரும்புலியூர்	,,	1,000
90.	சுப்பிரமணியசுவாமி கோயில், வடுவக்குடி,	,,	800
91.	சீனிவாசப்பெருமாள் கோயில், தில்லைஸ்தானம்,	,,	300
92.	பிரம்மசிரகண்டீசுவரர் கோயில், கண்டியூர்,	,,	1,000
93.	பசுபதீசுவரர் கோயில், மாலூர்,	,,	800
94.	கைலாசநாதசுவாமி கோயில், தண்டாங்கோரை,	,,	500
95.	நரகவிமோசனப்பெருமாள் கோயில், கண்டியூர்	,,	4.000
96.	சாட்சிநாதசுவாமி கோயில், அவளிவணல்லூர்,	,,	5,000
97.	கோட்டீசுவரர் அறக்கட்டளை, தஞ்சாவூர்		5,000
98.	காளத்தீசுவரர் கோயில், கத்திரிநத்தம்,	,,	500
99.	விஜயவிடங்கேசுவரர் கோயில், அடையார்—எலங்காடு	,,	3,000
100.	கைலாசநாதர் கோயில், விஷ்ணம்பேட்டை,	,,	1,000
101.	வத்தலகாச்சியம்மன் கோயில், வேங்கடசமுத்திரம்,	,,	500
102.	மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில், செந்தலை,	,,	500
103.	திருவனந்தீசுவரர் கோயில், அடஞ்சியூர்,	,,	500
104.	மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில், கோனேரிராஜபுரம்	,,	100
105.	வால்மீகிநாதர் கோயில், பீமலால்புரம்	,,	3,400
106.	பசுபதீசுவரர் கோயில், ஆலூர்	,,	1,000
107.	சொக்கநாதர் கோயில், கம்பயநத்தம்,	,,	1,000
108.	காளத்தீசுவரர் கோயில், சாலியமங்கலம்	,,	200
109.	ஹரிபிரமேசுவரர்—லட்சுமிநாராயணப்பெருமாள் கோயில், நடுக்காவேரி	,,	1,000
110.	புஷ்பவனேசுவரர் கோயில், மேலத்திருப்பூந்துருத்தி,	,,	100
111.	அய்யனார் கோயில், ஒக்குடி, தஞ்சை மாவட்டம்		1,000
112.	ஏகாம்பரேசுவரர் கோயில், வெள்ளம் பெரம்பூர், தஞ்சை மாவட்டம்		2,000
113.	கைலாசநாதசுவாமி கோயில், திருமனூர், திருச்சி மாவட்டம்		2,000
114.	கோதண்டராமர் கோயில், குறிஞ்சி, தஞ்சை மாவட்டம்		100
115.	ரெங்கநாதப் பெருமாள் கோயில், திருமக்கோட்டை,	,,	2,000
116.	பாம்பணியம்மன் கோயில், விளனூர்,	,,	2,000
117.	கல்யாணராமசாமி கோயில், மிமிசல்,	,,	5,150

118.	திருமூலநாதசுவாமி கோயில், கன்னுக்குடி,	,,	2,000
119.	நடுதறிநாதசுவாமி கோயில், கன்றுப்பூர்,	,,	2,000
120.	ஞானபுரீசுவரர்கோயில், திருமக்கோட்டை,	,,	2,000
121.	பாரிஜாதவனேசுவரர் கோயில், திருக்களார்,	,,	8,000
122.	தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர்,	,,	3,150
123.	கல்மலைநாதசுவாமி கோயில், ஜெயங்கொண்டான், திருச்சி மாவட்டம்		500
124.	இராமேசுவரம் தேவஸ்தானம், இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம்		40,000
125.	ஆபத்சகாயேசுவரசுவாமி கோயில், ஆடுதுறை, தஞ்சை மாவட்டம்		1,500
126.	ஜயசக்தி விநாயகர் கோயில், தஞ்சாவூர்		1,000
127.	முனி ஆண்டவர் கோயில், பாலக்கரை, தஞ்சாவூர் மாவட்டம்		100
128.	லட்சுமிநாராயணசுவாமி கோயில், அரியமங்கலம், திருச்சி மாவட்டம்		3,000
129.	சுப்பிரமணியசுவாமி கோயில், குமாரவயலூர்,	,,	300
130.	உத்தமர் கோயில் தேவஸ்தானம், பிட்சாண்டார் கோயில்	,,	10,000
131.	மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில், மேலப்பழுவூர்	,,	1,000
132.	ஆலந்துறையார் தொகுதிக்கோயில்கள், கீழப்பழுவூர்	,,	3,000
133.	கங்காஜடேசுவரர் கோயில், கோவந்தபுத்தூர்	,,	3,000
134.	அருணாசலேசுவரர் வரதராஜப்பெருமாள் கோயில் சென்னை		6,000
135.	ஆஞ்சநேயசுவாமி கோயில், காட்டுப்புத்தூர், திருச்சி மாவட்டம்		200
136.	அபராதரட்சகர் கோயில், ஆடுதுறை, தஞ்சை மாவட்டம்		3,000
137.	வெள்ளைவிநாயகர் கோயில், பவானி, கோவை மாவட்டம்		1,000
138.	நிஷ்டையில் உறையும் பெருமாள் கோயில், நெரிஞ்சிப்பேட்டை, கோவை மாவட்டம்		1,000
139.	அங்காளம்மன் கோயில், ஈரோடு, கோவை மாவட்டம்		300
140.	மலையம்மன் கோயில், கொடுமுடி, கோவை மாவட்டம்		1,500

கோயில்கள் அளித்துள்ள தேசீயப் பாதுகாப்பு நன்கொடைகள் (Donations)

—: ❋ :—

57.	பாலஸ் (அரண்மனை) தேவஸ்தானம், தஞ்சாவூர்		6,000
58.	மாதவப்பெருமாள் கோயில், மயிலாப்பூர், சென்னை		101
59.	தருமபுரம் ஆதீனம், (தொகுதிக் கோயில்கள்)		1,00,001
60.	முத்துமாரியம்மன் கோயில், கொன்னையூர், திருச்சி மாவட்டம்		1001
61.	மகாலிங்கசுவாமி கோயில், திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்		20,000
62.	மயூரநாதசுவாமி கோயில், மாயூரம்,	,,	20,000
63.	சௌரிராஜப்பெருமாள் கோயில், திருக்கண்ணபுரம்,	,,	100
64.	இராமேசுவரம் தேவஸ்தானம், இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம்		1,000
65.	திருவாவடுதுறை மடம், பாப்பம்மாள் சத்திரம்		25 000
66.	ஐந்துகோயில் தேவஸ்தானம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்		4,000

(தொடரும்)



திருமாகறல் இராசகோபுரத் திருப்பணித் தொடக்க விழாவில்,
அறநிலைய அமைச்சர்திரு **M. பக்தவத்சலம் B.A. B.L.,** அவர்கள் உரைநிகழ்த்துதல்



திருமாகறலில் ''திருமுறைச் சான்றோர்'' சேலம் திரு. சுப்பராய பிள்ளை,
அறநிலைய ஆணையர், துணை ஆணையர், அறங்காவலர்கள் ஆகியோர்



மாயூரம் பாவை மாநாட்டுப் பந்தர் முகப்பு (13-1-63)



யாத்தங்குடியில் நடைபெற்ற பாவை மாநாட்டில்
காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள்,
துரைத் துணை ஆணையர் முதலியோர் (11-1-63)



மாயூரத்தில் நடைபெற்ற பாவை மாநாட்டில் தஞ்சை
துணை ஆணையர், நாகை உதவி ஆணையர் முதலியோர்
கலந்துகொண்டனர் (12-1-63)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at Paari Achakam, Madras-1.